பாணன், காட்டாமணக்கு physic nut - jatropha gossypifolia alias j.curcas.

பாணா, காட்டாமணக்கு, see பாணன்;, 2. சால் a wide pot.

பாணாவேர், காட்டாமணக்கு வேர், root of physic nut plant.

பாணி, இலைச்சாறு, leaf juice; 2. கருப்பை நீர், liquor amnii; 3. பனிக்குடத்து நீர், amniotic fluid presenting at the child delivery i.e. first presentation; 4. கள், toddy, palm juice; 5.தேன், honey, பாணிற் கொள்ள பறந்திடும் உஷ்ணம்; 6. சர்க்கரைக் கரும்பு sugarcane; 7. பழச்சாறு, fruit juce; 8. குடிக்கு மருந்து,any liquid medicinal preparation for drinking 9. காண்டக பாஷாணம், a kind of poisonous calcium compound; 10. பாஷாணம், any mineral poison; 11. கற்கடக பாஷாணம், இது 32 பிறவிப் பாஷாணத்தில் ஒன்று, one of the 32 native arsenics contemplated in the Tamil Siddha Medicine; 12. கோழித் தலை கந்தகம், red sulphar so called from the colour of cock's; crest it is one of 32 kinds of synthetic poison according to Siddha Medicine; 13. சர்க்கரைப் பாகு any syrup; 14. காலம் time, period or season; 15. கை arm, hand; 16. தண்ணீர், water; 17. பாகுவண்டல், sediment of sweet syrup, treacle - Syrupus fuscus. It is also known as sugar house molasses, this should not be confounded with the variety obtained in making raw sugar (வெல்லபாகு), 18. மலை, mountain; 19. அழகு, beauty; 20. இலுப்பை, bassia tree.

பாணிகம், தாமரை, lotus flower - Nelumbium speciosum; 2. கை நகம், finger nail.

பாணிகை, அகப்பை, ladle; wooden spoon.

பாணிசம், கைநகம், see பாணிகம்.

பாணிதம், கருப்பஞ்சாறு, sugar cane juice; 2. வெல்லப் பாகு molasses obtained from jaggery; 3.கற்கண்டு, sugar candy; 4. தண்ணீர், water; 5.இரசாயனம் tonic; 6. பாகு அல்லது சர்பத்து syrup, liquid treacle; 7. அரைப்பங்காகச் சுண்டக் காய்ச்சி வடித்த இலகு காஷயம். இது நோயாளியின் தாகத்தைத் தணிக்கும்படி கொடுப்பது, a weak form of docoction derived by boiling the medicinal substance in water till it is reduced to half its measure and given for allaying thirst in some diseases; 8. அரைக்கூறாகக் காய்ச்சிக் கொதிக்க வைத்த கருப்பஞ்சாறு the inspissated or half boild juice of sugarcane a variety of treacle; it increases the slimy secrection but acts a flesh builder; 9. குழம்புப் பாகு, a treacle boiled down to a sticky consistence.

பாணித்தனையறியாமை, பூநீரிலிருந்து உப்பையும், தண்ணீரையும், எண்ணெயையும் வெவ்வேறாகப் பிரித்தெடுக்கத் தெரியாமை, no knowledge of separating the salt, water and oil in the efflorescence found on the soil of fuller's earth.

பாணித்தல், தடுத்தல் obstruct, தாமதித்தல்.

பாணிப்பல்லி, வலம்புரிக்கொடி isora creeper - Helictoris isora.

பாணிப்பூ, இலுப்பைப்பூ bassia flower.

பாணியம், மருந்து ஒரு பாகமும், தண்ணீர் 32 பாகமும் எடுத்துக் கொண்டு காய்ச்சி அரை அல்லது கால் பங்கு ஆகும் வரை கொதிக்க வைத்து இறக்கிய இலகு கஷாயம், இது தேனில் கொள்ள வேண்டியது, a weak form of decoction prepared by boiling one part of medicinal substances or drugs in 32 parts of water till the whole is reduced to $^1/_2$ or $^1/_4$. It should be taken in honey.

பாணியுள்ள, பசையுள்ள slimy or pulpy.

பாணிரம், தாமரை lotus flower.

பாணிருகம் see பாணிகம்.

பாணிவிருக்கம், தென்னை மரம் cocoanut palm.

பாணீர், தண்ணீர் water.

பாண், கள் toddy.

பாண்டகச்சம், வாகை Common sirisa - Albizzia lebbek.

பாண்ட கஷாயம், வேர் கிழங்கு பட்டை முதலிய மருந்துச் சரக்குகளை எடுத்துத் தூள் செய்து கொண்டு பாண்டத்திலிட்டு அதற்கு மூன்று பாகம் வெந்நீரிட்டு 10 அல்லது 12 மணி நேரம் ஊறிய பிறகு வடிக்கட்டி எடுத்த கஷாயம் an infusion prepared by taking one part of powdered drugs as roots, tubers, bark etc and three parts of boiling water and then keeping it for ten or twelve hours and straining the same for use.

பாண்டச்சம், கொடி நெல்லி, இது ஓர் அபூர்வ மூலிகை, காயசித்திக் குதவும் goose berry, creeper, a very rare plant useful for rejuvenation.

பாண்டத் தமைந்தவுப்பு, இந்துப்பு rock salt, epsom salt, Sindh salt.

பாண்டத்திற் சமைந்தகன்னி, சூடன் camphor.

பாண்டப்புடம், மருந்தை மூசையிலிட்டு அதை நிறைய நெ

உமியைப் பரப்பிய மண் சட்டியில் வைத்து எரிக்கும் புடம், a process of calcination in which the medicine is enclosed in a crucible and then placed in the middle of an earthern vessel or pot which is filled to the brim with paddy husk and then heated or roasted by blowing.

பாண்டம், பாத்திரம் a vessel; 2. மண்சட்டி earthern pot; 3. உடம்பு, human body, as in மாயனார் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா; 4. சரகண்ட பாஷாணம் one of the 32 kinds of native arsenic mentioned in Siddha Medicine; 5. வயிற்று வீக்க நோய் distension of the abdomen.

பாண்டரம், சிவப்புச் சுண்ணாம்பு; red quick lime; 2. மல்லிகை jasmine flower - jasminum sambac, 3. வெண்மை whiteness.

பாண்டலான, ஊசின rancid.

பாண்டல், ஊசல், the quality of being rancid; 2. பாசி பிடித்து நாறுதல் stinking smell; 3. பழமையானது; that which is stale; 4. கருவாடு, dried fish.

பாண்டல் கருவாடு, நாற்றக்கருவாடு bad smelling dry fish.

பாண்டல் நாற்றம், ஊளை நாற்றம்; foul smell.

பாண்டல் நெய், நாட்பட்டதினால் நாற்றம் வீசும் நெய் stale ghee by its being kept for a long time; 2. ஊளை நெய் rancid ghee.

பாண்டவன் கிரிஷி, ஆற்று மருந்து healing medicine.

பாண்டவிகை, ஊர்க்குருவி a kind of sparrow; 2.பெண் a girl or woman.

பாண்டவைப்பு, பாண்டம் அல்லது சட்டியில் வைத்து எரித்துத் தயாரிக்கும் மருந்து a medicine calcined by being kept in a vessel or pot and then roasted if necessary; 2. மருந்துகளைப் பாண்டத்திலிட்டுச் செய்யும் முறையைப் பற்றிக் கூறும் ஓர் வைத்திய நூல்; a treatise describing the various processes or methods of pharmaceutical preparation of medicines by keeping them in a vessel or pot.

பாண்டி, வாகை மரம் common sirissa - Albizza, odoratissima; 2. மூங்கில், bamboo; 3. பட்டாணி pea, pulse; 4. எருது, bull; 5. ஓர் விளையாட்டு, a play by children.

பாண்டிக்குழி, இறந்தவர்களைப் புதைக்கும் குழி (in Archaelogy) a pit for the dead; 2. சமாதி, sepulchral monument.

பாண்டியன்றார், (பாண்டியன் - தார்) வேம்பு, அதாவது வேப்பம்பூ மாலை, margosa flower garland.

பாண்டிரம், பெருங்கிளைமரம் saraswati leaf tree - Cleodendron infrotunatum.

பாண்டில், அகல் bowl a small earthern dish; 2. எருது bull; 3. மூங்கில் bamboo; 4. வாகை மரம்; see பாண்டி; 5. கிண்ணி an eating dish; 6. கண்ணாடி, glass; 7. கட்டில் cot.

பாண்டீ, வெள்வங்கம் tin, white lead.

பாண்டீரம், ஆலமரம் banyan tree; 2. வெண்மை, whiteness.

பாண்டு, பேயத்தி devil's fig - Ficus daemonum; 2. சிறு பூளைச் செடி, a species of cotton plant; 3. சிறு பூளை small cat; 4. வெண்மை whiteness 5. உடம்பு வெளுப்பும் வீக்கமும் காணும் ஓர் நோய் a chronic dropsy causing paleness and bloating of the body.

பாண்டு, இந்நோய் சாதாரணமாக உடம்பின் இரத்த ஓட்டம் தடைபட்டு, அதன் நீர்ப்பாகம் அக்குழாயினின்றும் வெளிப்படுவதினால் அதைச் சார்ந்த பாகங்களில் நீர் தங்கி, கால் அல்லது இடுப்பின் பாகத்தில் வீக்கங் காணும். சிலசமயம் வயிறு, மார்பு,முகம் இவைகளிலும் வீக்கங்கண்டு இரத்தம் மாறி சோகையால் வெளுப்புக் காணும், சில பாகங்களில் விரல்களால் அழுத்தக் குழி விழுந்து பிறகு மாறிவிடும். சில்லென்று வீசும் குளிரும் காற்றில் திரிவதாலும், உட்கார்ந்து அல்லது படுத்து இருந்ததாலும், குண்டிக்காய் நோய், இருதயம், நுரையீரல், மண்ணீரல் முதலிய உறுப்புகளைத் தாக்கும். நோய்க் கோளாறுகளாலும், மற்றும் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறினாலும் ஏற்படும். அன்றியும் இந்நோய் பிறவி நோயாயும் இருக்கலாம். மேக சம்பந்தமான கிரந்தி முதலிய நோய்கள் சோகை நோய் இவைகளாலும் உண்டாகலாம். பெண்களுக்கு இந்நோய் கண்டால் நாதாசயத்தின் வீக்கத்தினால் கருப்பை தாக்கப்பட்டு அதனால் மாதவிடாய் தடைபட்டு, பிறகு அடிவயிறு வீக்கம், மேல்மூச்சு முதலிய குணங்களைக் காட்டும். இது அடியிற் கண்டபடி பலவகைப்படும். அவையாவன: dropsy which is generally defined as the abnormal accumulation of the serrous fluid in the tissues or a body cavity. It consists of swelling arising from the escape of watery fluid of the blood through the coats of the vessels to the surrounding parts due to the impediment to the circulation of the blood, causing stagnation of that fluid. The usual

position of the dropsy is the leg and the lower extremeties. It may even extend to the abdomen,in some cases (heart, lungs) chest and the face or the entire body. The malady is recognised by pressing the affected part with fingers (thumb) when depression is left which only gradually fillsup. Various are the causes ascribed to it viz - exposure to cold or sitting or lying in a drought of cold air, from diseases of kidney's heart or lungs, liver or spleen. It may also be due to other diseases as congenital or acquired diseases, syphilis, anemia chronic drunkness etc. in females from menstrual disorders, the ovarian tumour giving rise to gradual distension of the parts affecting the womb; the cessation of menses is the result. This is marked by distension of abdomen hard breathing swelling of the feet. It consists of different kinds as mentioned below viz:

1. பித்தபாண்டு
2. வாதபாண்டு
3. சிலேட்டுமபாண்டு
4. விஷப்பாண்டு
5. திரிதோஷப்பாண்டு
6. ஊதுபாண்டு
7. நீர்ப்பாண்டு
8. எரிப்பாண்டு

NOTE: (by C.D.) If caused by the disease of kindey,the swelling first appears in the face, if caused by the disease of heart the swelling first appears in the feet, and if caused by the disease of liver the swelling first appears in the abdomen. The author of this book described பாண்டு (Pandu) as dropsy in my opinion பாண்டு (Pandu) which means only வெண்மை (whiteor paleness) refers merely to anaemia where the patient turns pale or white. The word சோபை (sophai) which means நீர்கோர்வை (swelling due to accumulation of water or fluid) refers only to dropsy, as it agrees with the definition given above for dropsy by the author himself.

பாண்டுகம், காமாலை jaundice, 2. சிறுபூளை see பாண்டு; 3. கருந்தேற்றா, a black species of water clearing nut - Strychnos potatorum; 4. மங்கல் வெள்ளை, dark white.

பாண்டுகரணம், பாண்டு நோயாளிக்கு வெளுத்த உடம்பைப் பழைய நிறத்திற்கு கொண்டு வருவதற்காகச் செய்யும் தொழில், the act of imparting a brown or natural skin colour to person attacked by a disease which turns skin white i.e. leucoderma.

பாண்டுகம்பலம், ஓர்வித வெள்ளைக் கல் a kind of white stone.

பாண்டுகனரோகவரி, பாண்டு நோயைத் தீர்க்கும் இலைக்கள்ளி leaf spurge - Euphorbius meirifolia so called of its curing dropsy.

பாண்டுக்கல், வெள்ளைக் கல் white stone.

பாண்டுக்கிராணி, பாண்டு நோயில் காணும் பலவிதமான பேதி, chronic diarrhoes of patients attacked by dropsy.

பாண்டுசூலை, பாண்டு ரோகத்தால் ஏற்படும் குத்தல் நோய். இதனால் உடம்பு வற்றி, எழுச்சி கண்டு, வாயுமிகுந்து அதனால் நெஞ்சில் குத்தல், சுரம் இடைவிடாது காய்ந்து கை கால் கனத்து முழிகளில் கரடு கட்டி தொடைச் சந்து இடுப்பு, தொப்புள், ஆசன வாய் இவ்விடங்களில் உளைச்சல் காணும். acute pain felt in a patient attacked by dropsy. It is marked by emaciation of body, prominent nervous pain in the heart due to excess of windy humour, remitent fever, heaviness of the limbs, stiffening and rigidity of joints and boring pain especially in the groin; waist navel, and arms.

பாண்டுநாசனி, சிறு வாலுளுவை, spindle tree- Celastreus paniculata.

பாண்டுநீர், பாண்டு நோயிற் காணும் இரத்தத் தெளிவீ, the serous fluid collected in dropsy.

பாண்டுநோய் which see.

பாண்டு நோய்க்கிராணி, பெருவாரி நோயிற்காணும் ஓர்விதப் பாண்டு நோய். இதில் காய்ச்சல் கழிச்சல் உண்டு. உடம்பு முழுவதும் திடீரென வீங்கும். an epidemic disease characterised by diarrhoea anemia, followed by sudden swelling - Epidemic dropsy.

பாண்டு பிடித்தல், வெளிறல், வெளுத்துப் போதல், to grow pale or anemic.

பாண்டு புத்திரிகம், தணக்கு catamaaran tree - Gyrosurpus jacquini.

பாண்டுபுத்திரிகா see பாண்டு புத்திரிகம்.

பாண்டுபோசனம், தினை itallian milet - Setaria italica.

பாண்டுமலர், சிறுபூளை cotton tree, a species of cotton, silk cotton.

பாண்டுமை, வெள்ளைச்சாறு வேளை, white flowered cleome - Cleome pentphylla.

பாண்டுயாவனம், பேரீச்சமரம் date palm - phoenix acaulis.

பாண்டுரம், பாண்டு, which see.

பாண்டுராகம், வெண்மை whiteness.

பாண்டு ராங்கம், சமனத்துவயம், an unknown drug.

பாண்டுருவன், பாண்டு நோயில் உடம்பு ஊதியிருக்கிறதைப் போலத் தடித்த வுடம்பையுடையவன் a corpulent or stouteman like one suffering from dropsy.

பாண்டு ரேட்சு, வெண்கரும்பு white sugar cane opposed to செங்கரும்பு red sugar cane.

பாண்டுரை, பாதிரிமரம் trumpet flower tree - Bignonia Chelanoides.

பாண்டுரோகபிரமேசனி, செம்மரம் redwood tree - Amoora rohituka.

பாண்டுரோகம் see பாண்டு.

பாண்டுரோக வினாசினி, ஈகைக்கொடி a sensitive Plant - Mimosa rubicantis.

பாண்டுலா, புடல் smake gourd, see பாண்டுலாம்.

பாண்டுலாம், கறிப்புடல் snake gourd - Trichosanthes anguina.

பாண்டுவண்ணம் பாண்டு நோயிற் காணும் வெண்ணிறம் palenessa symptom of dropsy and anaemia; 2. வெண்மை whiteness.

பாண்டுவாமம், பறாமுட்டி parroquelt buff - Triumfetta rhomboides.

பாண்டு விஷக்கரி, மாஞ்சரோகணி, an unknown rejuvenating plant. It is now indentified beyond doubt by Thiru R.Kumarasami, M.A. Asst. professor of Botany College or Indian Medicines Palayam Kottai ,as Pimpernel - Angallis arvensis. It is also known as நறவம், அணிச்சம் in Tamil. it is a classical drug mentioned even by Thiruvalluvar in his Thirukural in more than one place. It is a small herb and not to tree as mentioned in Tamil dictionary.

பாண்டுவீக்கம், பாண்டுநோயின் வீக்கம், dropsical oedema.

பாண்டூரி, தாமரை வளையம் lotus stalk.

பாண்டை, ஊழ்த்த நாற்றம் offensive or stinking smell.

பாத இசிவு, பாதத்தின் குறக்குவலி, a series of convulsive movements of the ankle induced suddenly pushing up the foot, while the leg is extended - Foot clonus.

பாதகண்டகம், உள்ளங்காலில் சீதளம் அனுசரிக்கும்போது கணுக்கால்களிலும், விரற் சந்திலும் பரவி, காலைத் தூக்கும் போதும், வைக்கும் போதும், முள்ளு குத்துவதைப் போல் வலியுண்டாக்கும் ஓர் வாத நோய். a kind of rheumatic affection in which pin prick pain

is fell while raising and lowering the foot due to chilness which spreads through the sole of the foot and extends to the ankle and the toes. See கணுக்கால் வாதம்.

பாதககிருமி, வாந்தி பேதி, சன்னி பாத சுரம், கொள்ளை நோய் முதலியவையும் சயம், கருங்குட்டம், அம்மை முதலிய நோய்களுக்குக் காரணமாகக் கருதும், கண்களுக்குப் புலப்படாத புழுக்கள்; bacilla virus for cholera, typhoid fever, epidemic as also carbuncle or ulcer, cancer, black leprosy small pox etc - pathological microbes and virus.

பாதகண்டீரம், இராக் காலத்தில் பாதம், பெருவிரல், இவ்விடங்களில் வலி, குடைச்சல் கண்டு, காலையில் குணமாகி விடும் ஓர் வாத நோய், a kind of rheumatic affection of small joints as foot great toe with inflammation and pain coming on at night and disappearing in the morning - Gout.

பாதகம், தாமரை மணி lotus seed, 2. See பஞ்சபாதகம்.

பாதகாரி, காலின் வெடிப்பு cracks in the feet and leg.

பாதக்கண்டீரம், ஓதக்கால் அதாவது யானைக்கால் Chochin leg or elephantiasis of the leg.See ஆனைக்கால். It is so called because in this disease the leg is chi affected due to blocking of lymphatic vessels. It is said to caused by filarial parasites.

பாதக்கன், புறாமுட்டி பாண்டுவாமம்.

பாதக்குடைச்சல், பாதத்தில் உள்ளங் கணுக்கால் முதலிய விடங் சீதாளத்தால் உண்டாகும் வலி boring pain in several parts foot sole, toes ankle due to affe of chilness.

பாதக்குழிப்புண், பாதத்திலிரு ஆழமான விரணம், அநேக மேகநோய் பெருவியாதி காணும். deep perforating ulce the foot; it generally occurs venereal and leprosy cases.

பாதச்சக்கரம், பாதத்தில் உண்ட மேக விரணம் a kind of ver ulcer affecting the foot.

பாதசத்துரவம், அரசமரம் peepul - Ficus religiosa; 2. ஆடு, s 3. ஆலங்கட்டி hail stone.

பாதசத்துரவம் see பாதசத்துரவ

பாதசாகை, கால் விரல் toe.

பாதசாரி, வழிநடப்போன் one travels by foot - Pedestrain.

பாதசுத்தி, கால் கழுவுதல், washing the feet.

பாதசுரம், சன்னிபாத சுரம், which see.

பாதச்சோபக வாதம்.

பாததாக வாதம், பித்தாதிக்கத்தினால் அல்லது வாத பித்தம் கோளாறடைந்து இரத்தத்தை அனுசரிப்பதால் உள்ளங்களில் எரிச்சலையுண்டாக்கும். இது சாதாரணமாக அதிக நடையினால் ஏற்படும் என்று கருதப்படுகிறது. இது முடக்கொற்றானால் குணமடையும், the burning sensation of the soles of the feet caused either by the excess of bile humour or by enraged local Vayu (wind humour) in conjunction with the deranged bile and and blood. It is considered to afflict persons of pedestrain habits and cured by the drug - Palsy curer.

NOTE: Burning of the feet is not a common although often a very trouble some affection. It occurs both to Indians and Europeans but nearly to the latter. It may range from an uneasy sensation of warmth in the soles of feet (Erythro mellagia) to the most painful sensation of burning in feet and legs, preventing sleep and thus destroying the general health. In some instances the part affected is moist, in others quite dry.

பாததாரி, காலின் வெடிப்பு fissures or cracks in the foot.

பாததாரிகம், அளவு கடந்து நடப்பதனால் உள்ளங்காலில் பசையற்று, அதனால் வறட்சி கண்டு பாத முழுவதிலும் காணும் வெடிப்பு the painful peculiar cracks in the soles and the whole feet of a sole due to loss of natural serous moisture which slowly spreads to the whole of the foot.

பாததோயம், பாதத்தை வெந்நீரில் அமிழ்த்தி வைப்பது, நோயாளியைப் படுக்கையின் ஓரத்திற்கு முழங்காலும் பாதமும் தொங்கும் படி வைத்துப் பிறகு நீரிற்குள் மூழ்கும்படி செய்தல் putting the feet of a patient in a hot bath. This may be accomplished by drawing the person the edge of the bed until the knees bend and the feet hang down so as to immersed inder the hot water.

பாதநடை, செருப்பின்றி வெறுங்காலால் நடத்தல் walking bare foot without sandals or shoes.

பாதநாராயணன், வாதநாராயணன் which see.

பாதபம், மரம், tree

பாதபரிசம், சீதாங்க பாஷாணம் native arsenic.

பாதவிருட்சம், களாவிழுதி Indian ipecacuanha - Gymnema sylvestris.

பாதபின்னம், பாதபேதம், காலின் வெடிப்பு see பாதசாரி; 2. குதிகால் வெடிப்பு, tfissures at the heels of the foot.

பாதபிளப்பு குதிக்கால் வெடிப்பு see பாத பேதம்.

பாதப்புற்று, பாதத்தில் வரும் சதைப்புற்று, cancer foot Carcinoma foot.

பாதப்பொருமல்.

பாதமின்மை, பாதமே யில்லாத பிறவிமுடம் congenital absence of the foot - Apodia.

பாதமூலம், குதிகால் heel of the foot.

பாதமூலி, சிறு நெருஞ்சில், small caltrops - Tribullis terrestris

பாதம், காலின் அடிப்பகுதி the terminal organ of the leg; foot; 2. கால்பங்கு one; 4. வாதுமை மரம், almond tree - Pruna; amygdalis alias Amygdalus Communis 5. வட்டத்தில் காற்பகுதி, segment of a circle; 6. வட்டத்தின் ஓர் பகுதி, segment of a circle, 7. சரியை முதலிய சைவ சமய மார்க்க நிலை (in Agama Philosophy) the four stages in the saiva worship; 8. வீழ்கை protration; 9. அடிச்சுவடு, planting portio bottom of the foot; foot prin foot mark; 10. சிவசத்திபதி அதாவது பக்குவப் ஆன்மாவிலே திருவ பொருந்துதல், (in Ag philosophy) the degree of spir advancement in which there is utter mortification of self energising principle and a ripe of the soul - for union with deity.

பாதம்பாரோ, புல்லூரி a parasite p

பாதம்பிசின், வாதுமை மரத்தின் பி the almond tree; resin of Pr amygodalis.

பாதரசதோஷம், சுத்திக் கிரமத் குறைவு பட்ட இரசம் சே மருந்தைச் சாப்பிடுவதனால் ஏற் வாய் வேக்காடு முதலிய குற்றங் இதனால் பல்லீறு சுரந்து சிவப் வீங்கும்; வீக்கம் அதிகமானால் நா கன்னம் இவைகளில் பல் ப கொப்புளங்கள் உண்டா இவ்வேக்காடு 10 — 15நாள் வ இருக்கும். சில சமயம் அதிகப் நாள் நீடித்து மிருக்கும். ஆ கொப்புளங்கள் மெதுவாகத் ஆறும். இதற்கு படிகார முத துவர்ப்பு வஸ்துக்களில் கொப்பளிப்பதாலும், ஆட்டுக் சூப்பு கொப்பளித்து விழுங்குவதா ஆறும் mercurial ptyalism due the patients consuming fa

preparations of patients consuming faulty preparations of mercury. It is marked by swelling of the cheeks, inflammation of the gums, teeth. If swelling is increased the tongue and the checks are indented by the teeth and ulcers formed. The usual duration of mercurial salivation is from 10 to 15 days and in some cases the inflammation may be more prolonged, and the resulting ulcers heal slowly. The treatment should consist in the use of astringent gargles like alum, bark of babul (black) and drinking soup of sheep leg after gargling.

பாதரசபத்தியம், இரசமருந்துகள் சாப்பிடுபவர்கள் அனுசரிக்க வேண்டிய பத்திய முறைகள் the dietetic system or medical regimen to be adopted by patients under treatment with mercurial medicines; they must be kept under salt free diet.

பாதரசம், இரசம், இதற்கு சிவபீஜம், சிவ விந்து என்றும் பெயர். இப்பெயரினாலேயே இதன் மகிமை தெற்றென விளங்கும். அன்றியும் இரசாயனம் என்ற வார்த்தைக்கே ஓர் பெருமையுண்டு. மேலும் சித்த நூலின்படி இரசம் என்பது வாதம், வைத்தியம், யோகம், ஞானம் இவைகளுக்கு ஆதாரமானதும், சித்துக்கள் ஆடுவதற்கும், ஆயுள் விருத்தி, காய கற்பத்திற்கும் முக்கியமான வஸ்து. மேனாட்டார் இரசத்தை மிகுதியாகக் கையாள்வதாயிருந்தாலும், உபயோகத்தில் தமிழர்களுக்கு இணையாகச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் இரசவாதம் காயசித்தி, கட்டு முறை முதலிய இரகசியமான தொழில்கள் பிறருக்குத் தெரியாது. சாதாரணமாக இரசம் தனிப்பட்ட முறையில் சிறிதளவு தான் கிடைக்கும். அதுவும் மண்ணோடு கலந்துதான் இருக்கும். இது மிகுதியாய் இலிங்கத்தில் கலந்ததாய் இருக்கும். ஆகவே இதினின்று பிரித்தெடுப்பார்கள். சுத்தமான இலிங்கத்தைச் சுத்தி முறைப்படிக்கும், வாலையிலிட்டிறக்கியும் செய்வதுண்டு. mercury. It is also known as Shiva's tests, Shiva's semen, which names by themselves indicate the superiority, eminence of this drug. The word Rasaynam has its own reputation. According Siddhar's work mercury is given a prominent place because of its usefulness in Alchemy, Medicine Yoga and Wisdom; not only this, it is highly important and plays a prominent role in the display of miraculous powers and for prolonging life and in the process of consolidation - which is a sealed book to others. free mercury in small quantities occurs dissiminated in the ores of mercury. Cinnabar is the chief ore of mercury and so pure mercury is obtained from it by the process of purification and distillation with iron.

NOTE: Mercury is also called quick silver - Argentum vivum. It had a certain facination for the alchemists and for a time it was believed by the Europeans that it was a constitution of all metals. The ancient chemists symbolished the metal by the hearld's wand.

Liquid mercury when taken into the stomach appears to posses no action on the body and very large quantities even pounds at times been swallowed without any particular symptom being produced. Its sialogogue power is shown in the increase of the salivery fluid and mucous secretions of the mouth, together with a peculiar condition of the cums and neighbouring parts. In acute rheumatism, mercurials are much used or employed by some practitioners called Vaidyans of S.India. In dropsy, hepatic diseases of siphilis mercurials form the sole remedy when employed in moderate quantities Mercurials emploped by Vaidynas as **பற்பம், செந்தூரம், சுண்ணம்** are oxidised forms of mercury prepared according to the Siddha System of Medicine. If used in an unoxidised form or in over doses, they may prove dangerous to the system, See **இரசம்.**

பாதரசவுருக்கு, சிவப்பு சாதிலிங்கம், red coloured vermilion or cinnabar.

பாதரசவேகம், இரசத்தின் வீறினால் உண்டாகும் வாய் வேக்காடு. புண் முதலியவை, mercurial ptyalism or salivation. i.e. excessive discharge of saliva from the mouth as a result of inflammation of the mouth, tongue and gums.

பாதரதம் see **பாதரசம்.**

பாதரசம், மலையத்தி mountain fig - Ficus microcarpa.

பாதரவதம், கருங்காலி black wood - Acacia sundra.

பாதரி, பாதிரி which see.

பாதரோகணம், அரசமரம், peepul tree - Ficus religiosa.

பாதரோகம், பாதநோய் disease of the feet.

பாதலகம், பாதத்தைத் தூக்கும்போதும், அடி வைக்கும்போதும் களிமண் அப்பியது போலவும், செத்தை ஒட்டிக் கொண்டது போலவும் கால் மரத்தலும், பாதங்கள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்ளுதலும் முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வாத நோய் a kind of rheumatic affection of the foot marked by numbness when raising or planting the foot a feeling as if some clay is sticking on the sole or some rubbish clinging to the feet

a feeling of the fat dashing against etc.

பாதவத்தம்பிட நிலக்காளான், earth mushroom - toad storl.

பாதவம், மரம், tree in general; 2. மலை, mountain, hill 3. மலைதாங்கி (lit) mountain support; wound plant Sida Corpinifolia alias S. lanceolata.

பாதவரட்சி, அதிகமான நடையினால் வாத கோளாறடைந்து பாதத்தில் பசையற்று வறட்சி கண்டு காலில் வெடிப்பு கண்டு துன்புறுத்தல், painful cracks on the soles and the feet of a person of extremely pedestrain habits due to the affected portions becoming dry by loosing their moisture, see பாததாரி.

பாதவரிஷம், உள்ளங்கால் திமிர், இதனால் கால் நீட்டுதலினாலும், முடக்குதலினாலும் உணர்ச்சி தோன்றாது, numbness of the soles and the feet in which no sensation is felt by stretching or flexing the legs.

NOTE: Though the legs are deprived of all sensibility to touch still a sort of tickling sensation pain in them is felt and the feet becomes subject to horripilation and pricking sensation. It is then considered as a premonitary symptom of leprosy.

பாதவன்மிகம், யானைக்கால் elephantiasis.

பாதவெடிப்பு see பாதவறட்சி அல்லது பாதபேதம்.

பாதனம், குத்தியெடுத்தல், அல்லது கத்தியால் பிளத்தல் opening by lancet or incision.

பாதன், சூரியன், the sun; 2. நெருப்பு, fire.

பாதாக்கிரம், கால் நுனி tip of the foot; 2. கால் பெருவிரலின் நுனி tip of the big toe.

பாதாங்குட்டம், (பாதம் + அங்குட்டம்) see பாதாக்கிரம்; 2. பாதப் பெருவிரல் great toe.

பாதாங்குலி, (பாதம் + அங்குலி) கல்விரல், toe.

பாதாசனம், பாதபீடிகை foot stool.

பாதாட்சேபகம், நீர் வாத ரோகம், அதாவது உதறு வாதம். இதனால் நடக்கும்போது பாதங்கள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்வதாகவும், சுற்றி விழுவதைப் போலவுங் காணப்படும். a kind of nervous disease Paralysis agitans marked by a peculiar gait in which one foot appearing to dash against the other and the whole body trembling as if to tuemble down. It is also knownas shaking palsy.

பாதாதிகேசம், உள்ளங்கால் முதல் உச்சி வரை from foot to head.

பாதாதிதைலம், உள்ளங்கால் கைகளுக்குத் தேய்க்கும் தைலம்.இது கண்ணுக்குறுதி, a medicated oil rubbed chiefly on the soles of the feet and palm. It is said to strengthen the eyes.

பாதாம், வாதுமை, Almond.

பாதாம்பிசின், பாரசீகத்திலிருந்து தகடுகள் மாதிரி அகலமாகத் தட்டி வரும் ஓர் மஞ்சள் அல்லது வெள்ளை நிறமான கடினமான பிசின் a kind of yellow or white rigid gum in the form of broad plates imported from Persia.

பாதாரி see பாதசாரி.

பாதார்த்தம், எட்டிலொன்று one of eight of a unit.

பாதாளகந்தி, சர்ப்பகந்தம் Rauwolfia serpentina; 2. See பாதாள கருடன்.

பாதாள கங்கை, பூமிக்கடியில் வெகு தூரமிருந்து வரும் தண்ணீர், water spring coming from great depth, the Ganges of the abyss.

பாதாள கங்கைக்கிணறு, பூமிக்கடியில் வெகு துலையிலிருந்து தோண்டிய கிணறு, இது புதுச்சேரியிலுள்ளது. சதா தண்ணீர் வந்து கொண்டிருக்கும் an Artesian well at Pondicherry from which there is a constant flow of water like a fountain.

பாதாள கருடன், கிரிப்பூடு, the mongoose plant - Ophiorrhiza mangos.

பாதான கறாடி see பாதாளக் கருடன்.

பாதாளகினி see பாதாள கங்கை.

பாதாளபேதி, காடி, vinegar.

பாதாள மிரட்டி, தாமரைக் கிழங்கு lotus root.

பாதாள மூலம், சீந்தில் கொடி moon creeper - Timosphora cordifolia alias cocoulus cordifolus; 2. ஆடு தின்னாப் பாளை, worm killer - Aristolochia bracteata; 3. கரையான், white ant; 4. கோரைக்கிழங்கு, nut grass, Korai grass root - Cyperus rotundus; 5. சிறுநெருஞ்சில் small caltrops, ground burnut - Tribulus terrestris.

பாதாளமூலி see பாதாள மூலம்.

பாபாதாளம், கீழுலகம் hell.

பாதளயந்திரம், உப்பைப் பூமிக்குள் பரப்பி, சில காலஞ் சென்ற பிறகு திராவகம் இறக்குவதற்காக அமைக்கப்பட்ட ஓர் யந்திரம். இது அடி விசாலமும், ஆழமுமான கெட்டியான ஓர் பள்ளம் பூமிக்குள்

தோண்டி, அதற்குள் 4 அடி விசாலமும் ஆழமுள்ள மற்றொரு சிறிய பள்ளமும், கீழே தோண்டி அதில் துருத்தியின் முளையைச் செலுத்தி, அதன் மேல் அடுப்புக் கரிகளைப் பரப்பி, அதற்கு மேல் பாத்திரத்தை வைத்து அதற்குள் திராவகம் இறக்க வேண்டிய பாத்திரத்தை வைத்து, இதனுள் அதற்கு வஸ்துக்களையும் அடக்கஞ் செய்து மற்றொரு பாத்திரத்தினால் சுற்றிலும் கவரும்படி மூடி, நெருப்பிட்டுத் துருத்திக் கொண்டு ஊதி, திராவகம் வடிப்பதற்காக அமைக்கப்பட்டது. பெருமிதமாக திராவகம் வடிக்க வேண்டின் இவ்விதமாகச் செய்து உபயோகிக்கும் யந்திரம், a distilling apparatus for extracting acids or other liquids on a large scale, the following is the process adopted for the purpose. Firstly the ground or the place over which the construction has to be made has to be dug out and common salt is to spread out and covered by earth as before. After sometimes a pit has to be dug out measuring 6' x 6' x 6' ft. and another small pit underneath this measuring 4' x 4' x 4'. In this should be inserted the tip of the bellows over which charcoal is spread. Over this charcoal a vessel is kept and inside this vessel is secured another vessel containing the substance to be distilled. Over this vessel another bigger vessel is kept so as to cover up all round. Then it is blown with the bellows till the liquid is obtained to the desired end.

பாதாள வஞ்சனம், *(பாதாளம் + அஞ்சனம்),* பூமிக்குள் அடங்கிக் கிடக்கும் பொருள்களைத் தெரியக் காட்டும் மை a black magic paint used for the eyes for the purpose of finding out the hidden treasures underneath the ground.

பாதாள வட்டி, பூனைப்புல் a kind of tender grass.

பாதாள வாகை, நில வாகை East Indian senna - cassia angustifolia.

பாதாளாஞ்சனம், see பாதாள வஞ்சனம்.

பாதான், நாட்டு வாதுமை Country or Indian almond - Terminalia catappa.

பாதி, அரை half; **2.** பங்கு portion.

பாதிக்கொடி, அரை வயிறு half bellyful.

பாதிசத்தி, அர்த்தநாரி அதாவது ஒரு பாதி சத்தியம் ஒரு பாதி சிவனுமாகிய வடிவம் பாதிசத்தியாயிருந்த *பாரவிந்தான் சக்கரம் (தேரை - 100)* a body, the right half resembling Shiva, and the left half resembling the Goddess Parvathi.

பாதிசாமம், நடுராத்திரி, Midnight.

பாதிசுண்டல், அரைப்பங்கு சுண்டிப் போதல், boiled to the half.

பாதிசுண்டிய நீர், பாதிபாகம் சுருங்கிய நீர், இதனால் வாத பித்த தோஷம் விலகும் water boiled to half the quantity. It cures the windy and belious affections.

பாதிடல், பங்கிடல் apportioning; காப்பாற்றல் protecting; **3.** நெருக்கல், compressing, contracting.

பாதித் தலைவலி, ஒற்றைத் தலைவலி, pain or aching on one side of the head - Hemicrania.

பாதித்தல், சரிபாகம் செய்தல் dividing into two equal parts; **2.** துன்பப்படுத்தல், causing to suffer.

பாதித் தூக்கம், அரைத்தூக்கம் half asleep.

பாதிநாள் அரை, ஒரு பகல் அதாவது நாலு சாமம் கொண்ட கால அளவு period of one day i.e. from morning till evening.

பாதிபகடம், சரிபாதி equal half.

பாதிபசி, அரைப்பட்டினி semi starvation.

பாதிப்புழுக்கு, அரைவேக்காடு half boiled.

பாதிப்பைத்தியம், அரைப் பைத்தியம் semi - lunacy.

பாதிமதியணிந்தோன், துரிசு, blue vitriol.

பாதியம், கடுக்காய் gall nut - Terminalia chebula.

பாதிரம், மலையாத்தி Malabar mountain ebony - Bauhinia malabarica; **2.** மூங்கில், bamboo tree.

பாதிரி, பாதிரி மரம் அல்லது பாடலிமரம். இது ஒரு பெரிய மரம். இந்தியாவில் எங்கும் பார்க்கலாம். அதிக உயரம்; அடிமரம் பருத்தது; அனேக கிளைகளுண்டு. உயரமாய்ப் போகப் போக நேராயும், செங்குத்தாயும் வளரும். கிளைகள் நான்கு சோடி, பூக்கள் பெரியவை. மஞ்சள் நிறம், மிக்க வாசனையுள்ளவை. ஆகவே இதன் பூ கோவில் பூசைக்கு உபயோகப்படும். இதைத் தண்ணீரில் அமிழ்த்த மிக்க வாசனையாயிருக்கும். இதன் வேரும் பூவும் கஷாயம் வைத்துச் சுரத்திற்குக் கொடுக்கலாம். உடம்பிற்குக் குளிர்ச்சி தரும். அன்றியும் மதுமூத்திரம், கரப்பான், மேக வியாதி, உழலை, கண், காது கை கால் இவற்றைப் பற்றிய எரிச்சல், பெருவிரணம், ஆகந்துக மூலம், அக்கினி மந்தம் இவை போகும். இதன் பட்டையை மற்ற சரக்குகளாகிய பற்பாடகம், பேய்ப்புடல், சித்திரமூலம், சுக்கு, மிளகு இவைகளோடு கூட்டி

கஷாயமிட்டுக் கொடுக்க விக்கல், தாகம், காதடைப்பு, மயக்கம் முதலியவை குணமாகும். இதன் பூ பெண்கள் வசியத்திற்குதவும். இலைக் கஷாயமிட்டு, குடல் தடைப்பட்ட தொந்திரவிற்குக் கொடுக்கலாம். இம்மரத்தில் பலவகையுண்டு; அவையாவன trumpet flower tree - Stereospermum Chelonoides alias Bignonia Chelonoides. It is also known as Patali tree. It is a large tree found all over India, especially in Coromandel forests in Malabar. The stem and trunk straight of a very great height and thickness, branches very numerous gradually becoming more and more erect at the top; leaves consist of two pairs; flowers pretty large yellow and very fragrant and they are offered to temples for worship of deities. When immensed in water, they give it an agreeable odour. Both the root and flower are given in infusion as a cooling drink in fevers. Moreover it is prescribed in cases of diabetis, skin eruptions, venereal affections, inflammation are burning sensation of the eyes, ears, arms and legs. It is also said to cure big ulcers, incidental piles, from external causes, loss of appetite. The bark mixed with other drugs or ingradients such as fever plant, devil gourd, lead wort, dried ginger, black pepper etc. is given as a decoction for hiccups, thirst, fatigue giddiness, etc. The flower inportion for fascinating females. The decoction of the leaves is given for visceral obstructions. There are different varieties of this tree viz.

1. *பாதிரி*, fragrant trumpet flower - Stereospermum chelonoides.

2. *பூம்பாதிரி* rose flowered trumpet tree - Streospermum suoveolens.

3. *பொன்பாதிரி* gold flowered trumpet tree- Bignonia chelonoides.

4. *பெரும் பூம்பாதிரி*, big flowerd trumpet tree - Dolichandrone rheedii.

5. *கும்பாதிரி* Ceylon oak - Schlii trijugar.

6. *வெள்ளைப் பாதிரி*, white flowered trumpet tree - Sterospermum Xylocarpum.

பாதிரி, பாதிரி மரம் see *பாதிரி; 2.* மலையாத்தி see *பாதிரம்; 3.* மூங்கில் bamboo; *4. பூனைக்காலி*, cat footed plant - Mucana pruriens.

பாதிரிக்கூட்டம், பாதிரி, வில்வம், குமிழம், தழுதாழை முதலிய வேர்கள் சேர்ந்த தொகுதி collection or group of roots of the following trees - trumpet flower, bael, cashmere and wind killer.

பாதிரிமேலீந்தி, வெண்பாதிரி white flower trumpet tree - Steropermum xylocarpum.

பாதிரியம், செவிட்டுத்தன்மை deafness; 2. கடினம், hardness.

பாதிரியரோகம், செவிட்டு நோய், அதாவது வாயு சிலேட்டுமத்துடன் கூடி சத்தநரம்பில் வியாபிக்கும்போது காது கேளாமை deafness due to the derangement of the humours wind and phlegm prevailing on the auditory nerve - Nervous deafness.

NOTE: Deafness may be due to several causes, inflammation and its consequences, polypus, enlarged tonsils, rupture of the drum. When, habitually taking bath in cold water, as a sequel to certain diseases such as scarlet fever, measles, typhus, malaria, as a result of debility. It may also be due to certain diseases of brain or from taking quinine in large and continued does.

பாதிரியவாதம், இதுவே செவிடுபடுவாதம், இதற்கு செவிமந்தம் என்றும் பெயர். காதில் உள்ளிலும் அடியிலுமிருக்கும் வாதநரம்புகள் அனுசரித்துக் காதைச் செவிடுபடுத்திப் பெருங்கூச்சலிட்டாலும் கேளாது முழுவதும் செவிபடல், stone deafness as a result of the affection of the drum of the ear and auditory nerves arising from derangement of wind humour prevailing upon the whole auditory apparatus.

பாதிரியிலந்தை.

பாதிரீயம், see பாதிரியம்

பாதிவேகவைத்தல், பாதிவேக்காடு semi-boiled.

பாதிவேக்காடு, அரைப்பாகமாக அவித்தல், half boiling see புழுக்கல்.

பாதீடு, பங்கிடல் apportioning; 2. சம பாகமாகச் செய்தல் making into two halves.

பாதுகம், பெரும் செருப்படை big leaved low spreading creeper - Coldenia procumbens.

பாதுகாசித்தி, அந்தரத்தில் அல்லது நீ மேல் நடத்தல், இது ஓர்வித மாந்திரி மிதியடியாலும், கவுன குளிகையாலு செய்யப்பட்ட ஓர் சித்து a mirac of walking in the air treading the surface of water played wi the aid of a magic sandai or animat mercurial pill.

பாதுகாத்தல், ஓம்பல், protecting; கெடுதி வராமல் தடுத்த defending.

பாதுகாபஞ்சகம், குண்டலி யோகத்தை பற்றிச் சொல்லும் ஓர் தாந்திரிக a tantric science dealing

Kundalini Yoga, 2. செய்த பாவங்கள் எல்லாம் தொலையும் படி வணங்கித் துதிப்பதற்காக, குருவின் இரண்டு தாமரை மலர்ப் பாதத்தை (5 கால்) தாங்கிய ஓர் ஆசனம் the five foot stool on which rest the two lotus feet of the Guru, who prays and meditates to get rid of all sins.

பாதுகை, சிறு செருப்படை, small leaved spreading creeper - Coldenia procumbens.

பாதுகையிடல், மிதியடிக் கட்டைப் போடல், wearning of wooden sandal by ascetics.

பாதைக்குலை, பாகல் which see.

பாதோசம் see பாதோதம்.

பாதோதகம், (பாதம் + உதகம்) கால் கழுவிய நீர் the sacred water obtained by washing the deity or the feet of the spiritual Guru.

பாதோதம்; தாமரை, lotus flower.

பாதோதயம், பெண்கள் பிரசவத்தில் சிசுவின் பாதம் வெளிக்காணல் (in Midwifery) presentation of foot during delivery.

பாதோபகாதம், காலில்ஏதோ பூசியது போலிருத்தல். இது சீதள சிலேட்டும வஸ்துக்கள் சாப்பிடுவதா லேற்பட்டு நீட்டிய காலை மடக்கும் போது திமிர் பிடித்தது போல் காணப்பட்டு எரிச்சலுமுண்டாகும், a disease of the feet in which a sensation is felt as if something was smeared on the feet. This is said to be caused by one taking cooling and phlegmatic substances. The disease is marked by numbness of the leg when it is stretched or flexed and by the burning sensation of the foot.

பாதோதி, பாதோருதி, கடல், sea.

பாத்தகம், பேராமுட்டி Ceylon sticky mallow- Pavonia odorata.

பாத்தம், மருது murdah tree - Terminalia alata.

பாத்தியம் see புறாமுட்டி; see பாண்டு வாமம்.

பாத்தியத்திரவியம், வெண் கடுகு, விலாமிச்சு, சந்தனம், அறுகு முதலிய சரக்குகள் group of substances consisiting of white mustard, (fragrant grass) khus khus root sandal wood and conch grass or bare grass.

பாத்தியம், பெருமுத்தக்காசு, அதாவது பெருங்கோரைக்கிழங்கு root of large sedge grass - Cyperus juncifolia alias C.Pertimil.

பாத்தியல், தண்ணீர் மிட்டான் water foot - Asparagas racimosus.

பாத்திரச்சுரை, ஓர் வகைச் சுரை. இதன் காய் பாத்திரத்தைப் போலிருத்தலால் இப்பெயர் வாய்ந்தது போலும். a kind of bottle gourd. It is called, from its shape like a vessel.

பாத்திரடீரம், காக்கை crow; 2. நெருப்பு; fire; 3. நாரை crane; 4. பாத்திரம், vessel.

பாத்திரம், இலை leaf; 2. உடம்பு body; 3. உண்கலம் eating dish; 4. பாண்டம், any vessel; 5. ஆயுள் வேதப்படி நான்கு படிகொண்ட அளவு (in Ayurveda) a measure consisting of four Madras measures; 6. இரப்போர்கலம் mendicants bowl; 7.புரட்டாசி month of September to October.

பாத்திரனலம், சுக்கான், unburnt lime stone.

பாத்திராகி, பூம்பாதிரி see பாதிரி.

பாத்திராதீரம், நெருப்பு, fire.

பாத்திராபாலம், , சுக்கான், நாலுபடி கொண்ட அளவு.

பாத்திரிகா, மருது see பாத்தம்.

பாத்து, கஞ்சி gruel; 2. சோறு, cooked rice; 3. பங்கு, division; 4. பாதி half.

பாத்துமகற்பம், பிராககற்பம் which see.

பாநியாமலகம், ஓர் வகை நெல்லி, (நீர் வேட்கையைத் தடுப்பது) a kind of goose berry. It prevents and arrests thirst.

பாந்தம், மருந்துத் தூள்கள் ஒரு பங்குக்கு எட்டுப் பங்கு தண்ணீர் விட்டு இரவு அடுப்பில் சிறிதளவு நீரில் போட்டு ஒரு பங்காகச் சுண்டிய கஷாயம் decoction boiled down in the night and filtered the next morning. In this preparation eight parts of water is added to one part of the powdered drugs and kept over a moderate fire, the whole night till the decoction is boiled down to one fourth part.

பாந்தள், பாம்பு snake; 2. பெரும்பாம்பு, big snake; 3. மலைப்பாம்பு mountain snake.

பாந்தனம் see பாந்தள்.

பாபகம், பேய்க்கரும்பு wild sugarcane - Saccharam spontaneum.

பாபக்கிநம், எள் sesamum or gingelly seed - Sesamum orientale.

பாபசேதி, வட்டத்திருப்பி root of sida acuta or Cissampelos pareira.

பாபட்டை, தண்ணீர் மிட்டான் water root - Asparagas racemosus.

பாபரபழுத்தை see கண்டங்கத்திரி.

பாபரோகம், ஊழ் அல்லது வினைப்பயனால் வந்த நோய் disease due to previous Karma; 2. கொப்புளிப்பான் அதாவது ஓர் வித அம்மை நோய் a kind of chicken pox - Varicella.

பாபரோகி, தொழு நோயாளி one who is suffering from a disease due to sins committed in the previous births.

பாபலம், கண்டதிப்பிலி Bengal long pepper -Clavica roxburghiii; 2. திப்பிலி மூலம், root of long pepper.

பாபிவிட்டம், கோழிப்பூடு see கோழியவரை.

பாப்பட்டான், பாப்பட்டை, திரணி, bottle flower - Webera corymbosa.

பாப்பம், சோறு, cooked rice.

பாப்பரி, செந்நாகம் red cobra; 2. நாகம், cobra.

பாப்பா, சிறு குழந்தை baby; 2. கண்ணின் கருவிழி; iris of the eye.

பாப்பாத்தி, வண்ணாத்திப் பூச்சி a kind of butterfly - Papilis; 2. ஓர் வகைக் கழுகு, a kind of superior kite.

பாப்பாத்திக் கழுகு, ஓர் உயர்ந்த பெண் கழுகு, a brahmini female vulture.

பாப்பாத்தி மைனா, ஒரு வகைப்பட்சி brahmini myna or Indian starlings - Maina sylvestris. It is so called from its bright yellow legs as by use of saffron.

பாப்பாபழுத்தை, கண்டங்கத்திரி விதை; இதை நெருப்பிலிட்டு புகைகாட்ட பற்புழுக்கைகள் விழும். see பாபர பழுத்தை.

பாப்பாயம், கோஷ்டம், costum - Sussurea lappa alias Auchlandia costus.

பாப்பாரக்கனி, கறிப்புடலை snake gourd used for curry - Trichosanthus anguina.

பாப்பார செவாப்பு, குழந்தைகள் பிறந்த உடம்பு சிவப்பாகத் தோன்றி, பிறகு மாறிக் கருப்பாகும். இது சில குழந்தைகளுக்கு அபாயத்தை விளைவிக்குமெனக் கருதப்படும். a disease of the new born baby marked by rosy or red patches on the skin and nails beds. It is not so dangerous as the black patches which appear on the skin of the new born. Sometimes the whole body will be reddish. Ass's milk or bezoar with ass's milk is a good remedy. Some considered that it is due to syphilitic affection - Syphiloderma. See செவ்வாப்பு.

பாப்பாரத் தென்னை, செவ்விள நீர்த் தென்னை cocoanut tree bearing red coloured cocoanuts - Cocosnucifera (coromandelina)

பாப்பார நாகம், செந்நாகம், red cobra.

பாப்பாரப்புளி, see பப்பரப்புளி.

பாப்பாரமுள்ளி, ஒரு வகை கண்டங்கத்திரி a kind of yellow berried night shade - Solanum jacquini.

பாப்பான், ஓர் பூடு, a herb.

பாப்பிலை.

பாப்புரி, கொம்மட்டிமாதளை melonlime - Citries medica medica; 2.பாம்புச் சட்டை, snake skin.

பாப்பை, களியிட்டுக் கட்டல், bandaging after applying poultice.

பாமக்கினம், கந்தகம், sulphur.

பாமதம், வாலுளுவை, spindle or intellect tree - Celastrus paniculata.

பாமதுவா, ஆடா தோடை, Malabar winter cherry - Adhatoda vasica.

பாமநன், சிரங்கு பிடித்தவன் one suffering form itch all over the body.

பாமம், தினவு; நமைச்சல் itching.

பாமரகுட்டம், ஒருவகை சர்ம நோய், a kind of skin disease (itch)

பாமர வைத்தியம், அனுபவ வைத்தியம், quackery, empericism.

பாமரவைத்தியன், நூற்பொருள் தெரியாது அப்பியாசத்தில் வைத்தியம் செய்பவன், quack one who practises medicine without studying.

பாமா, உடம்பில் சிறு குருக்களாக எழும்பி, தினவும் எரிச்சலும் உண்டாகும் ஓர்வகை சரும நோய், small pastules or pimples appear on the surface of the body with itching and burning sensation.

பாமாகுட்டம், உடம்பு முழுதும் கொப்புளங்கள் எழும்பி, கறுத்தும் சிவந்தும் சிறியதாகவும், பெரியதாகவும், அடர்த்தியாகவும் இருக்கும். இது முக்கியமாக இரண்டு முன்னங் கைகளிலும் முழங்காலும், தொடைகளிலும் கண்டு, தோல் விரிந்தும், வீக்கம், நமைச்சல், சினைத் தண்ணீர் கசிவும் ஒழுகப் பெறும் ஓர் வகைக் குட்டம் a kind of leprosy characterised by vesicular eruptions all over the body with lesions and atrophy of skin. The eruptions may be red or black, small or big and dense. It is found affecting chiefly the two fore arms, knees and thighs. It is marked by ulceration and fissure

of the nodules, swelling, itching and water oozing from the lesions.

பாமாரி, கந்தகம் sulphur; 2. பவளப்பூலா, coral berry - Bryonia rhom noides.

பாமரரோகம், பாமாரோகம், கரப்பன், skin eruptions, eczema.

பாமினி, சிறு சண்பகம், cananga flower plant - Canangium odoratum.

பாமை, காமி, lascivious person; 2. ஓர் வகைச் சிரங்கு, a kind of itch.

பாமோதயம், வெள்ளெருக்கஞ் செடி, white flowered madar plant - Calotropis gigantia (albiflorus)

பாம்சுகசீசம், அன்னபேதி green vitriol - Iron sulphide.

பாம்பரணை, பாம்பைப் போல் விஷந்தங்கிய ஓர் வகை அரணை, a poisonous horse lizard with red tail - Cabrita leschenaultic.

பாம்பரணைக்கடி, இது கடித்தால் மரணம் என்பது பழமொழி, ''அரணை கடித்தால் மரணம்'' the poisonous bite of horse lizard. It is said that death is the immediate result of the bite.

பாம்பாட்டி, பாம்புகளை ஆட்டுவிப்பவன், snake charmer.

பாம்பாட்டிச் சித்தன், பதினெண் சித்தர்களில் ஒருவனாகிய சோகி, one of the eighteen Siddhars- a jogi by caste named Pampatti.

பாம்பாட்டிப் பச்சிலை, தொழு கண்ணி, இதற்கு அரவாட்டிப் பச்சிலை என்றும் பெயர். துணிந்த சதை கூடும், talegraph plant or moving plant - Desmodium gyrans alias Hedysarum gyrans. It is capable of uniting or joining shivered muscles.

பாம்பு, இது ஓர் விஷப்பிராணி. இது நெளிந்து (ஊர்ந்து) செல்வதால் இப்பெயர் வாய்ந்தது போலும். இவ்வினத்தில் அனேகம் விஷத்தன்மையில்லாதன என்று அறிய வேண்டும். ஏனெனில் அவைகள் பழக்கத்தில் பார்த்தாலும் பற்களையும் மற்ற அமைப்புகளையும் கவனித்தால் கடிக்கக் கூடிய தன்மை வாய்ந்தனவல்ல. பாம்புகள் சாதாரணமாக அதிக வழவழப்பான இடங்களில் போக முடியாது. விஷமில்லாப் பாம்புகளின் பற்கள் முழுவதும் வழவழப்பாகவே யிருக்கும். பல்லடியின் சந்தும் விஷ நீரைப் பற்கடி வாய்க்குக் கொண்டு வரும் வசதியும் கிடையாது. ஆனால் விஷப்பாம்புக்கோ பற்களின் முற்பக்கத்து மேல் வரிசையில் நீளமான பள்ளமுண்டு.

இதற்கும் விஷப்பல்லின் கோளத்திற்கும் சம்பந்தமுண்டு. இதன் மூலமாய் விஷக் கோளத்தினின்று பல்லிற்கு விஷம் வந்து சேரும். அப்பொழுதுதான் பாம்புக்குக் கடிப்பதற்கு வசதி ஏற்படும். இவ்விதமான கோளங்கள் அனேக பாம்புகளுக்குக் கிடையாது; எல்லாப் பாம்புகளுக்கும் இரு நாக்கு உண்டு. விஷப்பாம்புகளுக்கு மாத்திரம் முன் பற்கள் நீண்டும் கடிக்கும் போது மாத்திரம் நிமிர்ந்தும் காணும். அனேக விஷப்பாம்புகள் இருந்தாலும் தென்னிந்தியாவில் நாகன், விரியன், வழலை, கொம்பேறி மூக்கன் முதலியவைகள் தான் விஷமுள்ளனவென வழங்கப்பட்டவை. சாரைப் பாம்பு அல்லது ஆண் நாகம் என்று சொல்லப்படுவது அவ்வளவு விஷமுள்ளதல்ல. பாம்பின் கறியும், தோலும் வைத்தியத்தில் உபயோகப்படும். வெண்ணாந்தை அல்லது மலைப்பாம்பின் இறைச்சி உப்புக் கண்டம் குஷ்டத்திற்குதவும், தன்வந்திரி வாகடத்தின்படி பாம்பின் சட்டையைப் பொடித்துப் புங்கம் எண்ணெயிற் குழப்பி மேற்பூச்சு மருந்தாக உபயோகித்தால் காக்கை வலி தீரும். இது முறை சுரத்திற்கும் உபயோகப்படும். snake - Ophidia. It is a poisonous reptile. It is so called from its diffusive motion. It should be known that snake family proper comprises the greater part of the non-venomous snakes because they do not present any striking character, either in their general habit in the dentition or in any other part of their organisation. Snakes are not able to move over a perfectly smooth surface. In non-venomous snakes, the teeth are either entirely smooth or only with a faint longitudinal groove, which is not intended to convey a posionous saliva into a wound. But poisonous snakes are armed with a long canaliculated teeth in front of the upper jaw; the channel terminates in a small slit in connection with a duct which carries the poisonous fluid from the large gland to the tooth. It is only then the snake opens its mouth to bite and these muscles compress the gland. All snakes more or less poisonous, the possession of a poisonous salivery secretion is confined only to a few kinds of snakes and most of these are very rare. All snakes have bifid tongue Venomous snakes have fangs of great length which are erected, when required for use.

Although, there are great many poisonous snakes in South India, the kinds popularly known are only a few - cobra, viper tree snake. The rock snake known as male cobra is not so very poisonous. The flesh

and skin of certain snakes are heldby Vaidyans to posses medicinal qualities. Dried flesh of rock snake is considered useful in leprosy. According to Dhanvantri Vagadam, the snake slough reduced to powder and mixed with the fixed oil of pongamia is considered useful as an external application epilepsy. The same is used in intermittent fevers.

NOTE: Of land snakes about 10% are venomous, of this 10% one half are snakes fatal to human life. This half consists of two snakes - the cobra and the viper *(விரியன்)* They have a forked sting which they dart at their viction. The bifid tongue is capable of rapid and vibrating protrusion. It is moved by means of two long elastic bones. Sea snakes are very poisonous. Serpent worship is not a primary form the Dravidians of S.India, but has obtained some currency coming probably from the north-east. Now various places are named after the serpent - as Nagore. Nagapattanam, Nagarkoil etc, not only this but names of persons - Nagan, Nagammal, Nagarajan, Nagapalai, Nagavalli, Nagathali, Nagamalli, Nagappu etc.

பாம்பு, அரவு snake 2. நாகப்பூச்சி sound worm; *3.நவலோகத்தில்* ஒன்றாகிய நாகம், metal zinc as in. ''வியாதி எல்லாம் பாம்புகளைக் கண்டால் ஓடும்'' which refers to நாக செந்தூரம், red oxide of calcined zinc.

பாம்புக்கடி சிகிச்சை, பாம்பு கடிக்கு ஏற்பட்ட சிகிச்சைக் கிரமங்கள், இது பல்லுக்கு தக்கவாறு இருக்கும். அவையாவன;

1. பல்பதிந்த கடிக்கு மூலிகை பிரயோகம்
2. பல் கடி விஷத்திற்கு - செய் மருந்து பிரயோகம்
3. பல் - விஷமைப் பிரயோகம்
4. பல் - மந்திரம் உச்சரிக்க வேண்டும்.

இது சாத்தியப்பட்டாலும் படும் அல்லது மரணமே உண்டாகும். வேறு சிகிச்சைக்கும் இது வசப்படாது. see பாம்புக் கடி.

NOTE: The poison of serpents is very acid and hot and for preventing its effects everything cooling should be employed. When the extremeties are bitten a tight bandage above the part should be applied, so as to prevent the poison outering into the system; and if the cannot be done the bitten part is to be cutout. In some cases sucking the wound with a horn or burning the part is highly proper; the mouth is also used for sucking by placing a bladder piece over it and then suck; then antidotes must be used to prevent to effects of the

poison, in succeeding stages emetics and strong errhines should be used. Snake poison contains a parcel of small salts nimbly floating in the fluid and so, the drug used in snake poision are - Arsenic, opium, alcohol, ammonia and mercury.

பாம்புகடி சிகிச்சை விதி, பாம்பு கடிக்காக வைத்தியம் செய்வதற்கான பொது விதிகள் the general methods adopted in the treatment for snake bites viz.

1. By opening the veins round the seat of the bite and by bleeding the affected part. The veins of the forehead and the extremeties should be opened when poison spreads to the whole organism. Hence bleeding is the last remedy in a case of snake bite.

2. Elimination of the poison with the help of Mantras, full of occultenergy of perfect truth and austerities is more rapid than under the effect of drugs. So, Mantras of anti-venomous potency never fail even in cases of deadliest poisons.

3. Incision, cauterization - Purgatives, emetics, collyrium, stronger rhine (Nasya), plasters of anti-poisonous drugs are also employed.

பாம்புகடி தினம், வாரம் ஏழு நாட்களுள் ஒவ்வொரு தினமும் கடித்த பாம்புகளுக்கு இன்னின்ன பெயர் என்று வகுக்கப்பட்டிருக்கிறது; *அவையாவன:* during the seven days in a week the snakes bitten every day assumes a different name viz - when it bites on:

1. Sunday it gets the name as Anandan
2. Monday it gets the name as Sakulan
3. Tuesday it gets the name as Dakshagan
4. Wednesday it gets the name as Karkodagan
5. Thursday it gets the name as Padmagan
6. Friday it gets the name as Maha palmagan
7. Saturday it gets the name as Sanga Palagan.

NOTE: From this it is concluded the nature of poison due to snake bite and weather the man will survive or not and the mode of treatment which does not find a place here.

பாம்புகண்ட சித்தன், கரடி bear.

பாம்பு கொல்லி, கீரிப்பூடு Indian snake root - Ophiorrhiza mungoos; *அரவதள் (அரவு + அதள்)* herb of repentance - Ruta graveolus.

பாம்புக்கடி, பாம்பின் விஷம் தீண்டல். இப்பாம்பு பல்கடி நான்கு விதம். அவையாவன; ஒரு பல்கடி; இரண்டு பல்கடி; மூன்று பல்கடி, நான்கு பல்கடி; இதனால் ஏற்படும் விஷங்களுக்கும் குணம் வேறு; பல்லுக்குத் தக்கவாறு இருக்கும். snake bite. It consists of four different kinds - 1. one tooth setting; 2. two teeth setting; 3. three teeth setting and 4. four teeth setting (impressions)

NOTE: No 1 is cured by medicinal drugs; No.2 medicinal preparations; No.3 by counter acting poisons or neutralising agents; No.4 by only through chanting of Mantram or Magic but imposible for cure and invariably fatal.

பாம்புக்கட்டம், ஓர் கடைச்சரக்கு, a bazaar drug.

பாம்புக்கஷ்டம், ஓர் பூடு, an herb.

பாம்புக்கண்டம், பாம்புக் கழுத்து neck of the snake; 2. பாம்பை வெட்டிய துண்டம், sliced piece of a snake; 3. பாம்பினால் ஏற்படும் தத்து, அதாவது பாம்புக் கடியால் உயிருக்கு ஏற்படும் அபாயம்,a critical period in life or mishap supposed to occur by snake bite.

பாம்புக்கண்ணி சங்கங்குப்பி smooth volkameria - Cleodendron inerme.

பாம்புக்கரணம்.

2. தென்னம்பிள்ளை, young cocoaunt palm.
3. ஊத்தாம்பிள்ளை, urinary - bladder Vesica urinaria.
4. கீரிப்பிள்ளை, mungoose.
5. அணிற்பிள்ளை, squirrel.
6. குழந்தைப்பிள்ளை, human child.
7. சட்டாம்பிள்ளை, monitor.

பிள்ளைகரைத்தல், கருவழித்தல், to bring about abortion.

பிள்ளைகொடுத்தல், சோரப் புணர்ச்சியால் கற்பிணியாக்கல், seducing a woman and make her conceive.

பிள்ளைக்கட்டி, கருப்பங்கட்டி, an abscess of the womb.

பிள்ளைக்கற்றாழை, ஓர் வகைக் கற்றாழை, இதனால் தலைவலி, கண் குத்து, மூலம், குன்மம், உஷ்ணம், வறட்சி இவைகள் போம். குளிர்ச்சி யுண்டாகும், மலசுத்தியாகும், a kind of aloe; see புள்ளிக் கற்றாழை.

பிள்ளைக்காக்கும் பேதி, see வலம்புரிக்கொடி.

பிள்ளைக்காளி, ஓர் செடி, a plant.

பிள்ளைக்கிரீச்சரம்.

பிள்ளைக்கீரை, முளைக்கீரை, amaranthus gangeticus.

பிள்ளைக்குறி, பெண்களுக்குக் கருப்பந்தரிக்கும் அடையாளம், symptoms of concceivement.

பிள்ளைக்கேங்கல், longing to have a child.

பிள்ளைக்கோசம், கோஷ்டம், a drug - costus - Costus speciosus.

பிள்ளைக்கோட்டை, அரையாப்பு venereal bubo about the groins.

பிள்ளைச்செடி, ஓர்வகைச் செடி, a tree - Alexandrian laurel.

பிள்ளைச்சோறு, cooked rice for the child.

பிள்ளைத்தக்கல், கருவழியாதிருத்தல், retention of pregnancy.

பிள்ளைத் தக்காதிருத்தல், கருவழிதல், to miscarry.

பிள்ளைத்தக்காளி, மணத்தக்காளி, a plant - Solanam nigrum.

பிள்ளைத்தாய்ச்சி, கருப்பிணி, pregnant woman.

பிள்ளைத்தாய்ச்சி நோய், woman become subject to various diseases as dysentery. nausea, vomiting, discharge of blood from the uterus, pain in the uterus, dropsical swelling, fever etc. Great care should be taken in the treatment of pregnant woman.

பிள்ளைத்தாட்சிக் கொடி, கெற்பக் கொடி, veins appearing on the abdomen of pregnant woman.

பிள்ளைத் தேங்காய், நாற்றுத் தேங்காய், the best kind of cocoanut for rising nursery.

பிள்ளைத் தேள், ஓர்வகைத்தேள், young scorpion; 2. மட்டைத் தேள், a kind of scorpion.

பிள்ளைத்தோழி, குழந்தை வளர்க்கும் செவிலி.

பிள்ளைநோய், குழந்தை வியாதி, children's disease.

பிள்ளைப்பரிகாரி, மருத்துவிச்சி, midwife.

பிள்ளைப்பால், முலைப்பால், human breast milk.

பிள்ளைப்பிணி, see பிள்ளை நோய்.

பிள்ளைப்பிராயம், பாலப்பருவம், boy hood.

பிள்ளைப்பிறப்பு, சமுச்சரணம், child birth.

பிள்ளைப் பூச்சி, ஓர் பூச்சி, an insect of - Gryllus.

பிள்ளைப் பெறல், குழந்தையைப் பெறல், to deliver child.

பிள்ளைப்பெறாமலடி, மலடி, a barren woman.

பிள்ளை பெறுதல், to give birth to a child.

பிள்ளைப்பெற்ற காய்ச்சல், பிரசவத்தினால் ஏற்படும் சுரம், Puerperal fever.

பிள்ளைப்பேறு, பிரசவமாதல், child bearing; 2. மக்கட்பேறு, child birth.

பிள்ளைப்பேறு பார்த்தல், to attend to delivery.

பிள்ளைமகனிளையோர், இளைஞர், young person.

பிள்ளைமகன், தேங்காய், cocoanut.

பிள்ளைமடல், leaf of cocoanut tree.

பிள்ளைமரம், தென்னைமரம், cocoanut palm.

பிள்ளைமருது, வெண்மருந்து, a kind of tree - Terminalia paniculata.

பிள்ளைமருந்து, வசம்பு, a medicinal drug - sweet flag - Acorus calamus.

பிள்ளைமை, பிள்ளைத் தன்மை, childish; 2. தலைச்சன் பிள்ளையின்று எடுக்கும் ஓர் மாந்திரீக மை, a collyrium extracted or prepared from the first born child.

பிள்ளையார், பூ, ஓர் வகைப்பூ, குப்பை வேளைப்பூ, a kind of flower used for Vinayaga flower of vinca rosea (நித்திய கலியாணிப் பூ)

பிள்ளையார் வேடங்கொள்ளல், கர்ப்பிணியாதல், conceiving becoming pregnant.

பிள்ளையுண்டாயிருத்தல், கருப்பிணியாயிருத்தல், to be pregnant.

பிள்ளையுண்டாதல், கருத்தரித்தல், பெண்கள் மாதவிடாய் காலத்தில் 4 நாளும் விஷ்ணு காந்திச் சாறு அகஸ்தியர் லிங்கக் குழம்பில் இழைத்துக்கொடுக்கக் கருத்தரிக்கும், conceivement. If Agastiar linga kozambu is given with the juice of Evolvulus alsinoides.

பிள்ளைவண்டு, ஓர் வண்டு, a kind of bettle.

பிள்ளைவாசி, ஓர் வகைக் கொடி, a kind of creeper.

பிள்ளை விழுதல், கருவழிதல், to miscarry.

பிற இசிவு, a kind of fits.

பிறகது, வலம்புரி, which see.

பிறகசீரம், அகில், a fragrant wood-eagle wood.

பிறகருவி, உடம்பிற்குண்டான 60 தத்துவம், the sixty thathuwas of the body.

பிறகிசநீதம், நெய், ghee - clarified butter.

பிறகிபத்திகம், அசோகு, a tree - Saraca indica.

பிறகீர்த்தி, சமனத்துவயம், a unknown drug.

பிறகுத்தம், see வஞ்சிக்கொடி.

பிறக்கணம், ஓர் நோய், a disease; 2. ஓர் கணநோய், a disease of the children.

பிறக்கம், மான் கொம்பு, horn or deer.

பிறக்கருவி, see பிறகருவி.

பிறக்கவியம், மயிலாடுங்குருத்து, a tree.

பிறக்கு, பின் புறம், back side.

பிறக்குதல், பிறத்தல், to be born.

பிறங்கல், மலை, mountain.

பிறங்கி, கருநெல்லி, black indian gooseberry (a rare variety)

பிறங்கு நாறி, புறங்கை நாறி, see, புறங்கைநாரி.

பிறசாதனம், தேக்கு, teak wood.

பிறசாதிகம், தக்கோலம், cubeb pepper - piper cubeba.

பிறசாதினி, பிறசாரணி, பிறசாரினி, கொடியார் கூந்தல், a kind of spreading plant.

பிறச்சின்னை, ஓர் மீன், a kind of fish.

பிறஞ்ஞைதப்பல், stupor.

பிறதகி, கரிமுள்ளி, which see.

பிறதனம், கடுக்காய், indian gall nut.

பிறதுரேயம், see இடவகம்.

பிறதெமம், பிறதேசி, கடுக்காய், see பிரதேமம்.

பிறத்தல், தாயின் கருப்பத்திலிருந்து வெளிவரல், to come out from the mother's womb-to be born.

பிறத்தி, வழுதலை, which see.

பிறத்திப்பூரம், பிறந்தியகபன்னி, நாயுருவி, a medicinal plant - Achyrauthes aspera.

பிறநீர்க்கண்டி.

பிறநீர்க்கொள்ளல்.

பிறநீர்க்கோவை, உடம்பில் கனல் மீறி நீர்க்கோவை யுண்டாகிப் பார்ப்பவர்கள் பயப்படும்படி வீக்கங் காணும் ஓர் நோய். a disease in which the body is bloated.

பிறநோய்ச்சுரம், பிறநோய்களினால் உண்டாகும் வெப்பு நோய், Ague associated with other diseases - Catenating ague.

பிறந்த குழந்தை, a new born child.

பிறந்தகோலம், பிறந்தமேனி, திருவாணம், stork nakedness.

பிறந்த நாள், சனித்த நாள், உலகத்திற்கு வெளிவந்த நாள், the day when one was born - birth day.

பிறந்தவம், பிறப்பு, birth.

பிறந்தாள், புறங்கால், back of the leg.

பிறந்தினைத்தல், becoming tired of birth, ''பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' (திருவாசகம்)

பிறந்தை, பிறப்பு, birth.

பிற்பலம், கடுக்காய், Indian gall nut; 2. திப்பிலி, long pepper.

பிறபாலிகா, அவல், the beaten rice.

பிறபேசி, external ligament.

பிறப்பாரி, பிறப்பார், நாய்வேளை, dog mustard plant - Cleome viscosa.

பிறப்பி, உண்டாக்கு, to originate, to produce; 2. சனிப்பி, to prepogate.

பிறப்பிடம், வெளிவந்தவிடம், அதாவது யோனித் துவாரம், vagina; 2. கருப்பை, womb, uterus.

பிறப்பித்தல், குழந்தையை வெளிப்படுத்தல், to cause to be born to get the foetus out of the womb.

பிறப்பிலம், மருட்கற்றாழை, a kind of aloe.

பிறப்பிறப்பறல், பிறப்பு மிறப்பு மொழிந்து காயசித்தி பெறுதல், attain salvatin with out having any re-birth.

பிறப்பு, விதையிலிருந்து முளைக் கிளம்புவதும், மூட்டையினின்று குஞ்சு வெளிப்படுவதும், கருவினின்று பிண்டம் வெளிவருவதும் பிறப்பெனப்படும், germination of the seed, coming of the young from an egg and delivery of the chid is known as birth.

பிறப்பு, அச்சம், fear; 2. உற்பத்தி, birth; தாயின் கற்பத்தினின்று வெளிவந்து பூமியில் பிழைத்திருத்தல், to live in the world having come out of the mother's womb.

பிறப்புக்குரிய, பிறப்புக்கிடமான generative as in organ.

பிறப்புத்திட்டம், the law of generation - See Meltzer's law in Medical dictionary.

பிறப்புவரிசை, the whole process where by the life is continues by reproduction or rebirth from the lowest stage to the highest stage. This is well explained in the chapter of சிவபுராணம், of Thiruvasagam.

''புல்லாகிப் பூண்டாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக்கமாகிப் பறவையாய்ப் பாம்பாகி பிறந்திளைத்தே னெம்பெருமான்.''

பிறப்பு வாசி, சென்மசுபாவம், in born nature; பிறப்பினாலேற்பட்டது, that which is caused from birth.

பிறமூலம், அஸ்தியில் அனல் ஏறி அபான வாயிலில் கத்திபோல் சதை வளர்ந்து உள்ளும் புறமாய் இருந்து கொண்டு மலவாயில் கடுத்து தினவை யுண்டாக்கு மோர் வகை மூலநோய், a kind of piles. Caused by excess of heat in the system and attended with itching sensation - external piles.

பிறரோகி, வறட்சுண்டி, a species of sensitive plant - Mimosa tripuctra.

பிறரோசிதம், see பிறரோகி.

பிறர்மனை நயத்தல், பிறன் மனையாளைப் புணரவிரும்பல், to love anoterh's wife.

பிறர்முகம் பார்த்தல், see பிறர்மனை நயத்தல்.

பிறலேபம், plaster.

பிறவடை, கண்ணைச் சுற்றிலும் போடும் பற்று மருந்து, an external medicine intended to be applied round the eye.

பிறவலி, கண்டதிப்பிலி, root of long pepper.

பிறவலிசன்னி, fever or delirium marked by convulsions.

பிறவாதசன்னி, பிள்ளை பெற்ற பெண்களுக்குக் கண்டு துள்ளத்துடிக்கும் உயிரைப் போக்குமோர் சன்னி, a fatal disease - a delirium which occurs during the puerperal period and cause death.

பிறவி, பிறப்பு, birth; 2. உற்பத்தி, to originate; 3. சகோதரம், issues of the same father.

பிறவி ஒழித்தல், to be free from rebirth.

பிறவிக் கல், இயற்கையான கல், natural stone as opposed to artificial stone.

பிறவிக் கற்பம், பிறவியை ஒழிப்பதற்காக சாப்பிடும் காய கற்பம், rejuvenating drug for getting rid of re-briths.

பிறவிக் குணம், இயற்கையான குணம், பிறக்கும்போதேயுள்ளது, natural quality or disposition which is in born - inborn tendency.

பிறவிக் குருடு, பிறக்கும்போதே குருடு, இது தாயார் கற்பத்திலிருக்கும் போது வேக மருந்து சாப்பிடல், விஷந் தீண்டல் பத்திய குற்றம் காரணமாகும், born blindness, existing from birth - Congenital Amaurosis.

பிறவிச் சுபாவம், இயற்கைச் சுபாவம் see பிறவிக்குணம்.

பிறவித்தங்கம், இயற்கையாயுண்டாகும் தங்கம், உலகத்தார், பார்க்காத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கம், தங்கு ரேக்கு, natural superior gold.

பிறவித் துயர், பிறப்பினாலுண்டாகும் மனவருத்தம், worries of life.

பிறவித்துவக்கு, பிறவியின் தொடர்ச்சி, continuity of birth.

பிறவித்துவந்தம், பிறவித் தொந்தம், which see.

பிறவித் தொடக்கு, பிறவித் தொடர், பிறவித்துக்கு, which see.

பிறவித் தொந்தம், பிறவி சம்பந்தமான, relating to birth.

பிறவிநபும் ஸகம், congenital impotency.

பிறவிநோக்கல், பிறவிநோக்குதல், பிறக்கத் தொடங்கல், about to be born.

பிறவி நோய், பிறப்பிலேயுண்டான நோய்; கற்பத்திலூறிய நோய், congenital disease heriditary disease - inborn disease.

பிறவிப் பாஷாணம், இயற்கைப் பாஷாணம், native arsenic as opposed to வைப்பு பாஷாணம், prepared arsenic.

பிறவிப் பொன். இயற்கைப் பொன், native or natural gold as opposed to synthetic gold or alchemic gold.

பிறவிமயக்கு, உற்பத்தியாகும் போதேயுள்ள மயக்கம், natural allurements of life.

பிறவி மலடு, இதில் வயிற்றில் 3-மடிப்புகள் விழுந்து இடுப்பு பருத்து உடம்பு பவித்து பிள்ளையுண்டாகாமை, in born barrenness or sterility.

பிறவி மறு, பிறந்த போதேயுள்ள மறு, moles and warts found from the birth.

பிறவி மூலம், Congenital harmorrhoids or piles. It is usually as cribed to defects in the semen and ovum of the parents. The polypic in this case are hardly visible and extremely painful. One suffering from this type of piles gets thinner and thinner every day and eats but very little owing to impaired digestion and as a result of which a croaking sound is heard in the intestines.

பிறவிருத்தியாதல், மலங்கழிதல், to have motion.

பிறவி வாசல், யோனி வாசல், osexternum; 2. கர்ப்பவாசல், ostium vagina.

பிறவிழும், பவழம், coral.

பிறவினை, காமம், lust.

பிறவீச்சு, retraction of the muscles of the nape.

பிறவீச்சு சன்னி, (புறவீச்சு) பிடரி வலித்து, நோய் மிகுந்து பேசப்பிடிக்க வொட்டாமல் மயக்கமுண்டாகி தலை கனத்து பாம்பு கடித்த விஷம் போல் உடம்பு நடுங்கித் திமிருண்டாய் நாள் தோறும் இரவில் துன்புறுத்தும், சில வேளை அடுத்தடுத்துக் குத்தல் கண்டு பற்கிட்டி வேர்க்கும், a disease of the nape of the neck marked by pain in the region, hence in ability to speak giddiness, heaviness of the head, shivering of the body, with numbness, and extreme is felt at nights; sometimes there will be sweating and lockjaw.

பிறவுடலுறுப்பு, other bodily organ.

பிறழ்ச்சி, நடுக்கம், shivering, quivering.

பிறன்மனை, அன்னியன் பெண்சாதி, another's wife.

பிறாகாண்டம், சரகண்ட பாஷாணம், a kind of arsenic.

பிறாமுட்டி, சிற்றாமுட்டி, a medicinal herb - Pavonia zeylanica; 2. சாயவேர் அல்லது இம்பூரல் வேர் - root of Oldenlandia umbellata.

பிறால்சவ்வு, flakes.

பிறாழடம், மூன்றெழுத்தி லொன்றாகிய 'சவ்வு' one of the three Mystic letters named 'Savvu'

பிறானாந்திய காலம்,

பிறிதாகி, மாகாளி, the root of a twiner பெருநன்னாரி, bigger variety of Sarsaparilla.

பிறிதேகியம், பொன் முசுட்டை, a twiner - Cissampelos pareira.

பிறியகம், கடம்பு, which see; 2. வேங்கை; the indian kino tree - Pterocarpus bilobus; 3. பிளவு சீரகம், which see; 4. ஞாழல்; which see - saffron.

பிறியா நங்கை, வேப்பிலை நங்கை, a plant.

பிறுதானிகா, see கருங்கொடி.

பிறுந்தம், கருங்கொடி, which see.

பிறுமிநாசி, see புட்கரமூலம்.

பிறைக்கபாடம், இருதயத்தின் நாடியின் உள்ளுறைச் சவ்வாலான மூன்று மடிப்புகள், இதுதடிப்பு உறப்புமாய் சிறுமுருந்து திரளையுமுடையதாய் வட்டித் ஓரம் சுவரில் பற்றியிருக்கும், semilunar valve of the heart made of three cusps; they are two in number one situated at the opening of the Aorta and the other at the opening of the pulmonary artery.

பிலறக்காய்ச்சல், மாதத்திற்கு கொரு முறை வரும் காய்ச்சல், lever coming once a month.

பிறைச் சவ்வு, கன்னி முத்திரை, hymen. இது இளம் பிராயத்தில் திரைந்து மடிந்து இளக்கமாயிருந்து வயது வருவதற்கு சற்று முன் அகன்று பூரணமாகும். இதன் மத்தியில் துவாரம் உண்டு. இதன் வழியாய் மாத சூதகம் வரும். It is thin membrane by which the vagina is partially closed. It his folded loosely in wrinkles until just before puberty when it becomes developed and expands. It had an opening in its centre for the escape of the menstrual secretion.

பிறை நாடி, see சந்திர நாடி.

பிறை மலர், அகத்தி, a tree - Sesbania grandiflora.

பிறைவளையமாகப் பூசல், see பிரை வளையமாகப் பூசல்.

பிறோனிதம், கெந்தி, sulphur.

பிற்கருவி, உடம்பிற்குண்டான 60 தத்துவம் see பிறகருவி.

பிற்காலம், முதுரை, old age; 2. அந்திய காலம், fag end of life; 3. இறந்த பிறகு, after death.

பிற்சாமம், நான்காஞ்சாமம், fourth period.

பிற்சாரணை, see உரோமகி.

பிற்பகல், மத்தியானத்திற்குப் பின்பொழுது, afternoon.

பிற்பலிசாபம், செப்பு நெருஞ்சில், which see.

பிற்பிறவி, அழுக்கு, after birth secundines.

பிற்றிகம், முள்ளி, thorny plant.

பிற்றை, நாளை tomorrow; 2. பிந்திய நாள், the next day.

பினத்தல், பிதற்றுதல், raving.

பினற்றல், see பினத்தல்.

பினாகபாணி, குங்கும பாஷாணம், a kind of arsenic.

பினாத்தல், see பினத்தல்.

பினுவுபுட்பி, நேர்வாளம், croton seed plant.

பினைதல், பிசைதல், to mix with hand.

பின்கரப்பான், ஓர் வீரணநோய், a kind of skin disease opposite of முன்கரப்பான்.

பின்கலை, தசநாடியிலொன்று, one of the ten nadis.

பின்கால், hind leg.

பின்சரம், அரிதாரம், yellow orpiment.

பின்சுரப்பு, கடைசியாகச் சுரக்கும் பால், the last milk taken from the teat at any one milking as it is particularly rich in butter as compared with fore milk.

பின்துடரி, see திகைப்பூடு.

பின்பனி, மாசி, பங்குனி மாதம், months of january and February when there is mist in the early morning.

பின்பிறாக்குவித்தை.

பின்புத்தி, பின் தோன்றுமறிவு, knowledge that comes latter.

பின்மூலம், சிற்றாமுட்டி, root of a medicinal herb - Pavonia zeylanica.

பின்வலி, பிரசவமல்லது புண்களை சத்திரம் செய்த பின் ஏற்படும் நோய், after pains as in delivery or operation.

பின்வளைந்த கருப்பை, retroverted uterus.

பின்வளைவு, பின்மடிப்பு, retroflexion.

பின்றுடரி, see நாயுருவி; 2. பெண்துடரி, opposite முன்றொடரி.

பின்றொடரி, see திகைப்பூண்டு; 2. ஆடையொட்டி, which see.

பின்னகம், மயிர் முடி, hair knot.

பின்னகன், பேதி, diarrhoea.

பின்னங்கால், பின் புறங்கால், hind lag; hind part of the foot.

பின்னங்கை, the arm above the elbow - Brachium.

பின்னடைப்பான், பசிநோயிலொன்று, one of the diseases caused by hunger.

பின்னந்தலை, பிடரி, back of the head and neck.

பின்னந்தொடை, தொடையின் பின்புறம், back of thigh - Ham.

பின்னந்தொடை நரம்பு, தொடை அல்லது முழங்காலின் பிற்பக்கத்து நரம்பு, one of the tendons of the Ham.

பின்னம், குறைவு, defect: 2. பழுது deformity; 3. கழிவு, tear, 4. பராகம், pollen of flower; 5. உறுப்புக் குலைவு, distortion of an organ or limb, சிதைவு; rupture; 7. எலும்பு முறிவு, fracture.

பின்னம், a perforation of any of the cavities or resceptacles of the body by the tip of any pointed instrument - Punctured wound or ucler.

பின்னல், கடற்பாசி, edible seaweed - Alga zeylanica.

பின்னல் கொடி, இளைகளின் தண்டே கொழு கொம்புகளின் மேல் பின்னிக் கொண்டு வளரும் ஓர் செடி, twiners.

பின்னற்கொடி, ஓணான் கொடி, a creeper - Convolvulus racemosus; 2. பெருமுசுட்டை, many flowered bindweed - Ipomoea staphy lina.

பின்னற்பாம்பு, sea eel.

பின்னாரி, முதுகின் கீழ்புறம், the lower portion of the back.

பின்னிசிப்பு, பின்னிசிவு, ஓர் இசிவு நோய், opisthotmos, see பாகிராயாமவாதம், தனுரஸ் தம்பவாதம், ஓணான் நெய்யினால் தீரும், ghee prepared out of chameleon cures the disease.

பின்னியாகம், பின்னியாக்கம், குந்திரிக்கம், Indian frankincense - Boswellia thurlfera.

பின்னிரோவம், முட்சுண்டை, a thorny plant - Solanum genus.

பின்னீர்க்கோவை, நீர்கோவையினாலுண்டாகும், கோழை வாய் வழியாய் வராமல் உண்ணாக்கு வழியாய் விழுங்கும்படி இறங்கல் as opposed to முன்னீர்க் கோவை, which see mucus or phlegm getting through the back opening of the nose. This is opposed to முன்னீர்க்கோவை.

பின்னுச்சி, சிசுபிறக்கும்போது அதன் தலையின் பின்புறத்தில் முக்கோண ரூபமாக தோற்றப்படும் ஓர் சிறு குழி, a triangular space at the back of the infants head where occipital and parictal bones meet - Posterior fontanelle.

பின்னுச்சித் தோற்றம், கிரமப்பிரசவத்தைக் காட்டுமோர் குறி, presentation of occipits vertex - a characteristic sign or natural labour.

பின்னேரம், சாயுங் காலம், evening.

பின்னை, புன்னைமரம், a flower tree - Alexandrian laurel - Celophyllum; insophyllum.

பின்னைக் காயளவு, புன்னைக் காயின் அளவு as big as the (புன்னைக் காய்) fruit alexandrian laurel — Celophyllum - insophyllum.

பின்னை நாள், மறுநாள்; nexy day; 2. பின்னாள், subsequent days.

பின்னைப்பூ, புன்னைப் பூ, flower of Alexandria laurel, see பின்னை.

பின்னையெண்ணெய், பின்னைக் காயிலிருந்து எடுக்கும் எண்ணெய், oil extracted from the kernel of the fruit of Alexandrian laurel.

பின்னோக்காடு, பிரசவத்திலேற்படும் பின்வலி, after pains in labour.

பின்னோக்கு, பின் பார்வை, to see behind; 2. சென்ற காலத்தை எண்ணிப் பார்த்தல், to think of the past.

பீ

பீ, மலம், faeces - excreta; 2. கழுதை விட்டை மரம், ordure tree - Sterculia guttata; 3. பெரும்பீ, coromandel ailanto see பீநாறி.

பீகசாரி, இளையபெண், young woman.

பீகம், சீரகம், cumin seed - Cuminum cyminum.

பீக்கம், எட்டிக்கொட்டை, nuxvomica seed.

பீக்கருவேல், ஓர் வகைக் கருவேலமரம், a species of கருவேல், - Acacia farnesiana.

பீக்காக்கை

பீக்கிலாத்தி, சங்கங்குப்பி, the armpit shrub with a bad smell - Clerodendron inerme.

பீக்கை, வசளை, which see.

பீக்கொஞ்சி, ஒரு மரம், a tree - Coromandel jamoon alias Eugenia bracteata.

பீங்கானோடு, பீங்கானுடைந்த துண்டு, a broken piece of porcelain.

பீங்கான், வெள்ளைக் களிமண்ணினால் செய்த பாண்டம், China ware - Porcelain.

பீங்கான்கண், the vitreous humour of the eye - Vitreum; 2. செயற்கைக் கண், artificial eye.

பீசகம், ஓர் மரம், வெட்பாலை Tellichery bark - Wrightiana tinctoria; 2. கைகளும் தலையும் யோனி வாயிலை பிரசவ காலத்தில் அடைத்துக் கொள்ளல், presentation of vertex with prolapse of hands.

பீசகவயம், முயற் செவிக்கள்ளி, a kind of spurge.

பீசகோசம், விதைகளை யண்டாக்கிக் கொண்டிருக்கும் பாகம், pericarp.

பீசசிங்கி, ஓர் தைலம், a medicated oil.

பீசஞ்சம், தாமரை மணி, lotus beads.

பீசதபம், பீசரம், orchitis; 2. அண்டவாயு, testitis.

பீசதாதுவிருத்தி, a condition in malignant tumour - Anaplasia.

பீசநரம்பு, சுக்கிலம் ஓடுவதற்கு கற்றகுழல்; சுக்கிலக்குழல், spermatic cord.

பீசநாடி, பீசத்துக்கு இரத்தத்தை யெடுத்துச் செல்லும் இரத்தகுழல், Spermatic arteries.

பீசநீர்க்கோவை, ஓதம், hydrocele.

பீசபந்து, மாமரம், mango tree.

பீசபூரசுரசம், பழுத்த மாதுளை ரசத்தில் இந்துப்பு சேர்த்து இருதய சூலைக்காகச் சாப்பிடக் கொடுக்குமோர் ஆ.வே.மருந்து pomegranate juice mixed with Sind salt which is given for heart disease.

பீசபூரணம், கொம்மட்டி, மாதுளை, a kind of citron.

பீசபூரம், கொடிமாதளை, a variety of pomegranate.

பீசப்புல், ஓர்வகைப்புல், a kind of grass Danicum antidotale.

பீசப்பை, சுக்கிலம் தங்கும் பை, Sac containing sperm; 2. விரைப்பை, the skin covering the testicles.

பீசமகம், முவ் வெள்ளரி, a kind of cucumber.

பீசமறைவு, அண்ட மிலாதவன், one with no testicles - Cryptorchism; 2. அண்டம் கீழிறங்காது வயிற்றிலேயே மறைத்திருத்தல், undiscened tests.

பீசமிருநாள், தாமரை வளையம், stem of lotus cut into pieces.

பீசம், அண்டம், testicles; 2. ஆண்குறி, membrum verile; 3. தாமரைப்பூச் சுருள், pericarp; 4. சுக்கிலம், semen verile; 5. விரை, seed; 6. சந்ததி, off spring progeny; 7. மூலம், orgin, cause (as in பீசமந்திரம்); 8. வாலைப்பூ நீர், the essence of fuller's earth; 9. பூரகம், the vital air passing through the right nostril; 10. ஆண் குறியின் கீழே தொங்கும் இரவண்டு விரைகள், இது இந்திரிய முண்டாவதற்கும் ஆண் தன்மைக்கும் ஆதாரமாயிருக்குமுறுப்பு, one of the two glands that secrete the seminal fluid in males; 11. பீச எழுதது, a mystic letter - the syllable which forms the essential part of the man tram of any diety.

பீசம்வாங்கல், விரையெடுத்தல், castration, emasculation.

பீசரம், see பீசதபம்.

பீசர்,

பீசலதை, விரைக்கயிறு, spermatic cord.

பீசவாதம், அண்டவாதம், swollen testicles.

பீசவாயு, அண்ட வாயு, orchitis.

பீசவீக்கம், விரைவீக்கம், swelling of the scrotum or testis.

பீசறாகண்டி, காட்டாமணக்கு, which see.

பீசாட்சரம், ஓங்காரம், the mystic syllable with which the mantram of any diety opens; 2. விந்து, semen.

பீசாமலம், கொருக்காய்ப்புளி, a thorny tree - Pithecolobium dulce.

பீசானி, விஷப்பாலை, a plant of the species of having poisonous quality.

பீசி, பீசத்தையுடையது, that which contains the seed.

பீசை, see பீசைப்புல்.

பீச்சகத்தி, சிற்றகத்தி, which see.

பீச்சகம், வரகு, a cereai - Paspalum scrobiculatum.

பீச்சைக்கைவாகு, இடது கைப்பழக்கம், left handedness; see பீச்சைக்கை.

பீச்சங்கு, ஓர் வகை நாற்றமுடைய சங்கஞ்செடி, cleome.

பீச்சங்குழல், பீச்சாங்குழல், மலசலம் வாங்கும் ஓர் சூத்திரக்குழல், syringe.

பீச்சல், கழிச்சல், to purge; 2. தண்ணீர் பாய்ச்சல், to syringe water.

பீச்சாக்கத்தி, பீச்சாங்கத்தி, see பீச்சகத்தி.

பீச்சி, ஓர் அத்தி, wild fig - Ficus asperrima alias Ficus hispida.

பீச்சிபழம், தற்பூசினிப்பழம், water melon - Cucurbita citrullus.

பீச்சிப்பூ, ஓர் வகை மல்லிகைப்பூ, a kind of Jasmine - jasminum grandiflorum.

பீச்சு, பீச்சல், to syringe; 2. கழிதல், to eject Watery stool.

பீச்சுகுழல், see பீச்சங்குழல்.

பீச்சுதல், பீச்சங்குழலினால் பீச்சுதல், clyster.

பீச்சுப்பிரயோகம், injection.

பீச்சுமருந்து, ஊசி குத்தி இரத்தத்திற்குள் செலுத்தும் மருந்து, injecting medicines through hypodermic syringe.

பீச்சுவிளா, see பீச்சுவிளாத்தி.

பீச்சுவிளாத்தி, ஓர் நாற்றமுள்ள, மரம், பெருமரம், a tree giving bad stink - Sterculia; foetida. 2. ஓர் விளாமரம், a kind of wood apple tree.

பீச்சைக் கால், இடது கால், left leg.

பீச்சைக்கை, இடது கை, left hand.

பீஞ்சல், see பீச்சுவிளாத்தி.

பீஞ்சாசிகம், தகரை, which see.

பீஞ்சுகபழம், கடுக்காய்ப் பழம், fruit of Terminalia chebula.

பீஞ்செறி, see பீச்சங்கு.

பீடகம்,

பீடபற்பகம்.

பீடமம், முள் துளசி, thorny holy basil.

பீடம், குதம், anus.

பீடம், polypus as in nose, ear etc.

பீடயூதி, ஒரு வகை மல்லி, jasminum humile.

பீடனம், பீடித்தல், suffering from.

பீடன்பாக்கு, மலையாளத்திலிருந்து வரும் ஒரு வகைத் துவர்ப்பு சத்து மிகுதியாயுள்ள பாக்கு.

பீடிகை ஆசனபந்தனி, பீடிகை எலும்பு, ஆசன எலும்பு, இவைகளின் கட்டுநார், Sacro ischaitic liagments.

பீடிகைக்கவிகை, பீடிகை எலும்பின் பள்ளம், hallow of sacrum.

பீடிகைச்சந்துப் பொருத்து, sacro ilac symphysis.

பீடிகை நரம்பு, sacral nerves.

பீடிகைபுச்ச பந்தினி, sacro coccygial ligament.

பீடிகையென்பு, முள்ளந்தண்டு எலும்புகளில் கீழ்ப்பகுதியில் வால்போல் சிறுத்து முக்கோணமாகக் காணும் ஐந்து எலும்புகள், sacrum; 2. இது கூபகத்தின் பின் பக்கமாயும் முள்ளந்தண்டில் அடிவாரமாகவுமிருக்கிறது.

பீடித்தல், துன்புறுத்தல், inflicting pain; 2. துன்புறல், to suffer through pain or disease.

பீடிப்பு, துன்புறுகை, suffering.

பீடு, வலி, pain, 2. துன்பம், distress; 3. பெருமை, greatness.

பீடை, துன்பம், suffering.

பீட்சபித்தம், உடம்பு முழுமையுந் தடித்து, சிறு சிறு கட்டிகள் எழும்பி

சலம் வடிந்து பலவீனம் உள்ளங் கை காதெரிச்சல் முதலிய குணங்களைக் காட்டும் நோய், a disease marked by bloating of the body with small boils, weakness, burning sensation of the palms and soles etc.

பீட்டை, இளஞ்சூல், which see; 2. இளங்கதிர், tender head of corn.

பீதகசுரம், a kind of fever.

பீதகசேபிதம், தாம்பூலம், betel.

பீதகட்டம், சந்தனம், sandal.

பீதகதலி, செவ்வாழை, a species of red plantain - Muse sapientum (rubrum).

பீதகந்தகம், 4 வகை கந்தகங்களு ளொன்று, one of the four kinds of sulphur.

பீதகந்தம், பன்றி, pig.

பீதகபத்திரம், சிறிய முள்ளங்கியிலை, small radish leaf.

பீதகம், அரிதாரம், orpiment; 2. இருவேலி, cuscus root; 3. மஞ்சள், yellow; 4. தேன், honey; 5. பித்தளை, brass; 6. பொன்னிறம், golden colour.

பீதகலிகம், see பீதரோகணி.

பீதகல், பீதரோணி, which see.

பீதகற்றாழை, மருட்கற்றாழை, a kind of aloe.

பீதகாட்டம், செஞ்சந்தனக் கட்டை, red sandal wood.

பீதகாண்டகம், செம்முள்ளி, a red variety thorny shrub - Barlaria prionitis.

பீதகாபேரம், பித்தளை, brass; 2. மஞ்சள் நிறம், yellow colour.

பீதகாரகம், பீதகாரம், வேங்கைமரம், kino tree - Plerocarpus indicus, செம்புளிச்சை.

பீதகாரம், செம்புளிச்சை, which see வேங்கை மரம்,

பீதகாவேரம், மஞ்சள்; turmeric.

பீதகேசம், பொற்றலைக் கையாந்தகரை, see கரிசாலை.

பீதகேசரம், சிறு நாகப்பூ, a shrub - Mesua ferrea.

பீதசண்பகம், ஓர் வகை மஞ்சள் நிற சண்பகம், a yellow champaca flower tree.

பீதசந்தனம், பொதிகை மலையில் விளையும் செஞ்சந்தன மரம் red sandal grown in the Pothigai or Agasthiar hill in Tinnelveli Dist.

பீதசம்பகம், see பீதசண்பகம்,

பீதசாரம், வேங்கை மரம், see பீதகாரம்; 2. சந்தனம், sandal; 3. செம்மல்லிகை, a red species of jasmine.

பீதசாரதம், சருக்கரை வள்ளி, sweet potato - Ipomoea batatas.

பீதசாரதி, வேங்கை, see பீதகாரம்.

பீதசாரம், வெண் சந்தனம் - Sandal Santalum album; 2 வேங்கை மரம், see பீதசாரி; 3. செவ்வள்ளி, a creeper Dioscoria purpurea. 4. செவ்வல்லிக்கொடி, water - plant - red Indian water lily - Nymphae rubra.

பீதசாரனம், பீதசாரம், which see.

பீதசாரி, சந்தனம், sandal tree or sandal wood.

பீதசாலம், see பீதசாரம்.

பீதசிம்மகதோஷம், அபத்தியத்தினால் பிறக்கும், இதினின்று சன்னியும் கிளைக்கும், a disease caused by not observing diet. It may give rise to delirium.

பீதசிலந்தி, ஓர் வகை சிலந்திப் பூச்சி, a kind of spider.

பீதசுகாதீதம், மஞ்சணாத்தி அல்லது நுனா, a tree with fragrant flowers and yellow wood - Indian mulberry - Morinda tinctora.

பீதசூதி, செம்மல்லிகை, a red variety of Jasmine.

பீதச்சா, நந்தியாவட்டம், a plant with white flowers - Tabernoe montana coronaria alias Nerium cronarium.

பீததாரு, செம்புளிச்சை, a plant - Erythroxylon monogynum; 2. செங்கொடிவேலி, red Ceylon leadwort - Plumbago zeylanica (rubrum); 3. தேவதாரு, red cedar tree - Bastard sandal; 4. புன்னை, a tree - Alexandrian laurel.

பீதுண்டம், பொன் வாய்ப்பறவை, a kind of bird with yellow beak.

பீதந்தாவாரை, பொன்னாவாரை, a shrub - Cassia auriculata.

பீததுருமம், மரமஞ்சள், tree turmeric - coscinium fenestratum.

பீததுவையம், கஸ்தூரி மஞ்சள், musk turmeric - Curcuma aromatica

பீதநம், அரிதாரம், yellow orpiment; 2. குங்குமம், saffron powder.

பீதநி, மூவிலைப்புன்னை, a kind of புன்னை with three lobes.

பீதநிலம், மண்பூமி, soil of yellow mud.

பீதநேசம், பித்தளை, brass - compound of copper and zinc.

பீதபத்திரம், மலைக்காசினி, a kind of mountainous plant.

பீதலம், வில்வம், a sacred tree bael-Crataeva religiosa alias, Aegle marmelos; 2. மஞ்சட் கத்திரி, yellow brinjal.

பீதபித்தம், பித்த நீருடன் தடிப்பான கபநீர் சேருவதனால் உண்டாகிய மஞ்சள் பித்தம், a kind of thick bile combined with watery phlegm.

பீதபீசம், வெந்தயம், seeds of fenugreek.

பீதபுட்பி, ஆவாரை, a shrub - Cassia auriculata; 2. கறிப்பீர்க்கு, ridged gourd; 3. பேராமுட்டி, drug - pavonia odorata.

பீதபூகம், கொம்மட்டி மாதுளை, a kind of citron.

பீதபூகிதம், செண்பகம், tree with very fragrant flowers - Michelia champaca.

பீதபூதி, செம்மல்லிகை, a red variety of jasmine - Jasminum humile.

பீதபூரம், கசப்பு மாதுளை, a kind of citron.

பீதப்பெண், குங்கும பாஷாணம், a kind of prepared arsenic.

பீதமணி, கனக புட்பராகம், one of the nine gems - to per of golden colour.

பீதமீ, பத்மினி சாதிப்பெண், highest class of the four classes of women divided according to their lust.

பீதமுகம், see பீதபூரம்.

பீதமுண்டம், தூக்கணங் குருவி, pendulus or loxia bird.

பீதம், அரிதாரம், yellow orpiment; 2. பொன், gold; 3. சந்தனம், sandal; 4. நீர், water; 5. ஓர் வகைச் சாந்து, a kind of ungeant; 6. பொன்னிறம், gold colour; 7. மஞ்சள், turmeric; 8. அசோகு, Asoka tree - Saraca indica; 9. அச்சம், fear; 10 சடைச்சி, a plant, 11. குடித்தல், drinking, 12. நான்கு வித வச்சிரங்களில் ஒன்று, a gem yellow coloured diamond.

பீதயூதி, செம்மல்லிகை, a species of jasmine whose flowers are red tinted.

பீதராசம், பொன்னிறம், gold colour.

பீதராசவர்த்தம், ஓர் வகையான மஞ்சள் நிறமான இராசவர்த்திக்கல், a kind of yellow precious stone of the species of Lapis lazule.

பீதரோகணி, பீதரோகிணி, கண் ரோகங்களுக்கு உபயோகிக்கும் இமயமலைச் சாரலில் விளையும் ஓர் செடி; இதன் வேரினால் கருவிழி நீலகாசம் கிருஷ்ண மண்டலம் இமை நீர்ப்பில்லம் முதலியவை தீரும், a plant growing in the regions of Himalayas whose root in useful in eye diseases. Root is of yellow colour hence the name; gold thread - Thalictrum foliolosum.

பீதர், மஞ்சள் நிறம், yellow colour.

பீதலகம், பீதலம், பித்தளை; brass - combination of copper and zinc.

பீதலோகம், பித்தளை, brass. see பீதலம்.

பீதவண்ணம், பீதவர்ணம், மஞ்சள் நிறம், yellow colour; 2. கடுக்காய், a variety of Indian gall nut; 3. செவ்வள்ளி, red sweet potato.

பீதவதகம், மஞ்சள் வண்டல், yellow precipitate.

பீதவாணன், 20 மேகங்களிலொன்று, one of the twenty kinds Mega diseases.

பீதவிளா, பொன்னிறமாகக் காய்க்கும் விளா.

பீதள், நெருப்பு, fire; 2. சூரியன், sun.

பீதனகம், புனம்புளி, a plant.

பீதனம், கடுக்காய், Indian gall nut; 2. இச்சி, a tree.

பீதனி, மஞ்சள், turmeric; 2. மூவிலைப் புன்னை, see பீதநி; 3. முன்னைமரம், see முன்னை.

பீதனேகம், பீதலகம், which see.

பீதாந்தலைக்கொடி, Crotoleria venucosa.

பீதாப்பிரகம், ஓர்வகை மஞ்சள் அப்பிரகம், இதில் தாம்பிரம் வங்கம் இவைகளின் குணங்கள் இருக்கின்றன. a yellow variety of mica. It has porperities of copper and tin.

பீதாரு, வெள்வேல், babu tree with white bark - Acacia leucophloea or A. ferruginea.

பீதி, அச்சம், fear; 2. குடிப்பு, drink; 3. நோய்பயம், morbid; anxiety see நோயாளி, 4. மனோபயம், hypochondriasis.

பீதிகை, செம்மல்லிகை, red jasmine - jasminum humile; 2. பொன்மை, yellow or gold coloured unguent; 3. மஞ்சள் நிறம், yellow colour.

பீதை, பொன்னிற பூவுள்ள மருதோன்றி, a shrub with yellow

fragrant little flowers - Lawsonia spinosa; 2. மஞ்சள், turmeric.

பீத்துருமோதி, சோதிவிருட்சம், which see.

பீத்தரு, (பீ+தரு) பெருமரம், see பீத்தாரு.

பீத்தாரு, தேவதாரு, a fragnant wood tree - Bastard sandal; a kind of pine tree - Eyrthroxylona aureolatum; 2. பெருமரம், see பீநாறி and பீத்தரு.

பீத்தாருசருமம், பெருமரத்துப்பட்டை, bark of பெருமரம்.

பீத்தாளி, முசுக்கட்டான் பூச்சியைப் போல் முசுமுசுப்பாயும் இலைமுனை கூராகவும் மேற்பக்கம் ஊதா, சிவப்பு, சாம்பல் நிறமாகவும் கிள்ள பால்வடியும் ஓர் பூடு, a kind of plant.

பீத்தும்பை, dung tumbay - justicia ciliaris.

பீத்தோல், மேற்றோல், Epidermis.

பீநண்டு, வயல் நண்டு, common crab found in the holes of rice fields.

பீநாங்கிதசுரம், ஓர்வகைச் சுரம், a kind of fever.

பீநாத்தி, see பீநாறி.

பீநாறி, பெருமரம், a tree with bad odour - Sterculia foetida; 2. சங்கங்குப்பி, cleome; 3. இருள்செடி, which see; 4. குப்பைமேனி அல்லது நித்திய கல்யாணி - vincarosea.

பீநாறிசங்கங்குப்பி, see பீநாறி.

பீநாறிச்சங்கு, பீச்சங்கு, which see.

பீநாறிப்பட்டை, பெருமரத்துப் பட்டை, bark of Sterculia foetida.

பீநாறியெண்ணெய், medicated oil prepared with sterculia foetida.

பீநாற்றமரம், see பீநாறி.

பீநிசக்கிருதம், பினிச நோய்க்கு பயன்படுத்தும் மருந்து நெய், medicated ghee useful for disease of the nose.

பீநிசம், see பீனிசம்.

பீநிலம், Sapindus foliatus alias S.emarginatus.

பீந்தோல், பீத்தோல், epidermis.

பீபா, Holigarna,

பீப்பாக்கு, நுங்குப்பாக்கு, (நுங்கைப் போன்ற இளம்பாக்கு) tender areca nut with bad smell.

பீமசாரி, see மதகரி வேம்பு.

பீமபீசம், ஓர் வகை அண்டநோய், a kind of testicular complaint.

பீமமண்டூரம், யவட்சாரம், திப்பிலி, மிளகு, சுக்கு, மோடி, சித்திர மூலம் சம எடை கொண்டு 16 பலம் மண்டூர பற்பம் சேர்த்து இரும்பு பாண்டத்தில் இதற்கு 8 பங்கு கோமூத்திரம் விட்டு கட்டியாகும் வரையில் கிளறி இறக்கி, கடுக்காய் அளவு சாப்பிட 7 நாள் கொள்ள பரிநாம சூலை போம், a preparation with iron dross or impure of iron (Ferroso ferric oxide) and cow's urine as chief ingrediants prepared as mentioned above. It is usefule for Parinama soolai.

பீமம், பருமை, bulkiness; 2. அச்சம், fearfulness.

பீமரம், பீநாறிமரம், tree with offensive smell - Sterculia foetida.

பீமூக்கு மரம்,

பீயங்கன், இரசம், mercury.

பீயாலம், பீயால், காட்டு மாங்காய்ப் பருப்பு, அதாவது, சாரப்பருப்பு, wild mango kernel of Buchanania latifolia.

பீயூசம், அமுதம், nector; 2. இளம்பகம். பால், milk of the cow which is young milk of the cow which has a very young calf.

பீயை, ஓர் நாறும் சணல், a kind of hemp - Tetrameles nudiflora.

பீரங்கிலோகம், ஓர் வகை லோகம், gun metal.

பீரத்தைலம், பூவரசத் தைலம், a medicated oil prepared the fruit. bark of portia tree, useful for skin disease.

பீரபூதம், மாதுளை, Pomegranate tree - Punica granatum.

பீரமந்தம், அரசு, peepal tree - Ficus religiosa.

பீரம் பீர்க்கு, a vegetable - ridge gourd - Luffa acutangula; 2. பூவரசு, portia tree; 3. வாகைமரம், flowering tree - Mimosa; 4. பலம், strength.

பீரிடல், (இரத்தம்) வேகமாய்ப் பாய்தல், gushing.

பீரிட்டடித்தல், பீரிட்டோடல், இரத்தம், முலைப்பால் வேகமாய்ப் பாய்தல், to flow very rapidly - Streaming.

பீரிதம், சதகுப்பை, dill seed - Anethum sowa.

பீரு, வெள்ளாடு, goat; 2. புலி, tiger; 3. புருவம், eye brow.

பீருகம், ஆந்தை, owl; 2. கரடி, bear.

பீருகா, பீதரோகணி, which see.

பீருசாக்கல், ஆகாய நீல நிறம் அல்லது பச்சை நீலநிற சாதி கல், Ferooza - Turquoise stone.

பீருதந்தி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root - Root of Asparagus Surmentosus.

பீரும்பீர்க்கு, பூவரசு மரம், Portia tree - Thespesia populnea.

பீரோத்தம், முருங்கை, a tree - Moringa, see சின்னாருகை a plant.

பீர், அச்சம், fear; 2. பீர்க்கு, which see; 3. முலைப்பால், woman's breast milk.

பீர்க்கங்காய், கறிப்பீர்க்கு, ridge gourd - Luffa acutangula.

பீர்க்கங்காரம்,

பீர்க்கு, ஓர் கொடி, a climber ridge gourd climber, 2. பேய்ப்பீர்க்கு, a wild bitter kind gourd.

பீர்ச்சாங்குழல், see பீச்சாங்குழல்.

பீர்ச்சுதல், பீரிடச் செய்தல், to cause streaming as in blood or woman's milk, 2. மலங்கழிதல், to ease.

பீர்த்தட்டி, மிக்க சுரங்காய்ந்து குடித்தவர்களைப் போல் தலை சுற்றி வாய் பிதற்றி வயிறு உப்பி கழிந்து நாக்கு கறுத்து விக்கல், இளைப்பு தாகங்கண்டு பத்து நாளையில் கொல்லும் ஓர் சன்னி, a delirious fever marked by high temperature, realing of the head, raving diarrhoea with bloating of abdomen, black tongue, hiccup thirst etc., It proves fatal in ten days.

பீர்மாந்தம், குழந்தைகளுக்கு வயிறு பொருமிப் பால் நிறமாகக் காணும் ஓர் வகை அசீரண பேதி, a diarrhoea in children characterised by milky white motions, with gurgling sound in the abdomen which is caused by indigestion.

பீர்மோதினி, மல்லிகை, jasmine.

பீலகம், எறும்பு, ant.

பீலகயம், செந்தழை, shrub, a reddish yellow variety of pandanus - Fragrant screwpine - Pandanus odoratissimus.

பீலாம் கண்ட சோலார் மணி, Moraca chinencis.

பீலி, பனங்கருத்து, shoot of palmyra palm; 2. பொன், gold; மயில், peacock; 4. ஓர் வியாதி, a disease; 5. நத்தையோடு, shell of the snail.

பீலிகசோபை, சுரக்கட்டி, enlargement of spleen.

பீலிகநோய், மண்ணீரல் நோய், disease of the spleen.

பீலிகம், மண்ணீரல், spleen, வயிற்றில் மேல் இடதுபக்கமுள்ள ஓர் மாமிச கண்டம், an abdominal organ stituated in the left hypochonderic region.

பீலிகை, வயற்றில் மண்ணீரலைப் பற்றிக் குழவி போல் திரண்டு குறுக்கே கிடந்து புரளவும் மேல் நோக்கி ஏறவும் செய்து ஒக்களித்து அன்னத்தைத் தள்ளி பலங் குறைந்து புளித்தேப்பமிடும் ஓர் வகை நோய், a disease of the spleen attended with loss of appetite, belching, weakness, vomit etc.

பீலிகைக்கட்டி, மலத்தை மறுத்து மந்தித்து வயிற்றினில் பிரண்டு, பலத்தை குறைத்து ஈரல் பெருகிக் கனத்துத் திரண்டு சாப்பாடு குறைந்து ஒக்காளமும் ஏற்படும். (யூகிமுனி-1200) enlargement of spleen characterised by constipation, loss of appetite, big abdomen, nausea, eructation etc.

பீலிகை வாயு, மண்ணீரல் கெடுதியால் நேரும் ஓர் வித வாயு நோய், a disease of the spleen மலத்தை யிறுக்கும், மந்திக்கும், உடம்பினில் பலத்தைக் குறைந்து, ஈரல் பெருகி கனத்துத் திரண்டு சாப்பாடு குறைந்து ஒக்களித்து ஏப்பமுண்டாக்கு மோர் வாயு, the symptoms are almost as in பீலிகைக் கட்டி, but there will be excess of wind humour. see பீலிகைக்கட்டி.

பீலிகோதரம், மண்ணீரல் வீங்கி வயிறு பெருத்துக் காணுமோர் நோய், enlargement of spleen with the dropsy of the abdomen. its symptoms being lastitude, low fever; impaired digestion, loss of strength, collection of fluid in the abdomen, jaundice - see பழஞ் சுரத்துக் கட்டி.

பீலிக்கினி, சிவதை, a plant with purgative effect - ipomaea turpethum.

பீலிவாகை, stipulate sirissa - Albizza stipulata.

பீலு, உள்ளங்கை, palm of hand; 2. உகாய்மரம், tooth brass tree - Salvadora persica alias S. indica. அணு, atom.

பீலுகம், சடைச்சி, which see, 2.கரடி, bear.

பீலுவாதம், பைபீல் வாதம், a logical reasoning that the world was formed of atoms.

பீலுவாதி, பைபீலவாதி, Epicurean philosopher.

பீவண்டு, ஒரு வகை வண்டு - a kind of beetle.

பீவரம், ஆமை, tortoise; 2. பருமை, bulkiness.

பீவரி, அசுவகந்தம், அல்லது அமுக்கிறா, horse root - Withania somnifera; 2. பருவப் பெண், young girl; 3. பசு, cow.

பீவேலம், பீவேல், ஓர் வகை வேலமரம், stinkink acacia - Acacia fernesiana.

பீவேலிகம், வேலிப்பருத்தி, a twiner - Dae; mia extensa.

பீவை, நீர், water.

பீழம், பீனாக்கிமரம், a tree.

பீழை, கண் பீழை, a plant - Carey a racemosa.

பீழைசாறல், கண்ணீல் பீளை காணுதல், to run eyes; gummy secretion of the eyes.

பீழைவச்சிரம், வடப்பூலா, a kind of poola shrub.

பீளல், பெண்குறி, genital organ of the female.

பீளை, கண்ணமுக்கு, gummy secretion from the eyes 2. ஓர் வகைக்கறிக்கிரை, a plant; it has lithontriptic and antilithic actions - wooly caper - Achyranthes lanata.

பீளைக்கண், பீளைசாரும் கண், Bleared eyes.

பீளைசாரல், பீளை கண்ணில் கட்டல், rheum in the eyes.

பீளைசாறி, ஓர் பூடு, a herb.

பீளைசாறுகை, பீளைசாறும் ஓர் வக்கை கண்நோய், bleared eyes; 2. பீளைசாறுதல், lippitude.

பீளைசேர்தல், பீளை சாறுகை, which see.

பீளைதள்ளல், see பீளைசாரல்,

பீள், கருப்பம், சினை, embryo foetus.

பீள்வாயு, கருப்பவாயு, a disease of the uterus due to wind humour.

பீறல், கிழிதல், tearing of the skin.

பீறிப்போடல், சதை கிழியச் செய்தல், to lacerate or tear in pieces.

பீறு, கிழிதல், laceration; 2. குதம், anus.

பீறுண்டுசாதல், மிருகங்களினால் கிழிபட்டு இறத்தல், to die of lacerated wounds caused by wild beasts mauled by wild animals.

பீனக்கி, நாக்குப்பூச்சி, earth worm round worm of the intestines.

பீனங்கண், இரசம், mercury.

பீனசக்காமாலை, மூக்கில் சளி பிடித்தலால் வரும் காமாலை, Catarrhal jaundice.

பீனசக்காய்ச்சல், பீனசச்சுரம், மூக்கு சளி பிடித்தலால் வரும் சுரம், catarrhal fever.

பீனசக்கிருதம், பீனசத்துக்கு உபயோகிக்கும் ஓர் மருந்து நெய், a medicated ghee useful for diseases of nose.

பீனசக்குறட்டை, ஓர் வகைக் குறட்டைப் பூடு, a climber; a variety of bitter gourd that cures catarrh of the nose - Trichoseanthes laciniosa.

பீனசத்தைலம், நல்லெண்ணெயும் நொச்சிச்சாறும் சேர்த்து காய்ச்சி இறக்கிய தைலம், a medicated oil prepared with gingelly oil and jice of vitex regundu (five leaved chaste tree) useful for nasal affections.

பீனசப் புல், ஒரு வகை புல், a kind of grass.

பீனசம், சிரசில் கனலெழுந்து சூலையால்ரோகம் அதிகரித்து சீல்போலும் சிராய் போலும் காணப்படும் ஓர் வித மூக்கு வியாதி; இதுபனி காற்றில் திரிவதாலும் குளிர்ந்த நீரில் முழுகுவதாலும், மிதமிஞ்சிய போகம் செய்வதாலும் மிகு நித்திரை மூக்கில் தூசியடைதல் முதலிய காரணங்கலினால் உண்டாகும், mucous running off through the nostrils due to an inflammation or ulceration in the head or to cold affection the nose or excessive indulgence in sexual intercourse, heating of head entrance of the minute particles of dust or smoke into the nostrils excessive application of hear or cold, voluntry retention of stools and urine; diseases of the nose.

பீனச வகைகள்: different varieties of Peenasam and their symptoms;

1. வாத பீனசம் - நாசி வறண்டு நீர் வடிந்து சளி நாற்றமில்லாது வரல், Vatha (wind humour) Peenasam - dryness of the nose, smell less mucous oozes out from the nose.
2. பித்தபீனசம் - மஞ்சள் சளி வடிந்து புலால் நாற்றம் வீசுதல், Pitha (bile humour) Peenasam - yellow mucous with bad smell comes from the nose.
3. சிலேட்டும் பீனசம், - நாசி மாறி மாறியடைத்து முத்துப் போல் நீர் வடிந்து நாறும், துணுக்குச் சளி விழும், மூக்கில் குத்தல் உண்டாம். Silesma (phlegm humour) Peenasam. each nostril is blocked alternately while clean fluid flows from the other and occassionally a bit of mucous may come out princking pain is present.
4. நீர்ப்பீனசம் - நாசி நீர் வடிந்து மழை காலத்தில் தும்மல், கழுத்து வலி பிடரியும் முகமும் ஊரல். Neer (water) Peenasam fluid runs down from the nose and during rainy season, sneezing, pain in the nape.
5. சிழ்ப்பீனசம் - அதிக சூட்டில் கால் முதல் நாசி வரை புண்ணாகி சீழ் வடிந்து தலைவலி காணல், Sigh-(Pus) Peenasam-pus comes from the nose and causes head ache. It is due to inflammation.
6. இரத்த பீசனம் - கபாலத்தில் வட்ட வட்டமாய் புண்ணாகி வாசி வழியாய் உதிரம் வரும், தலை வலிக்கும், Raktha (Blood) Peenasam, blood oozes from the noze, head ache is felt.
7. சிராய்ப் பீனசம் - நாசியில் ஈருள்ளி கூடுபோல் சீழ் திரண்டு மணம் தெரியாது, விடாது தலை வலிக்கும், Sirai - Peenasam is characterised by constant head ache loss of smell, and some solid substance of the size of garlic frequently falls from the nose.

நெல்லிமுள்ளி, கடுக்காய், கஸ்துாரி மஞ்சள், கையாந்தகரைச் சாறு விட்டரைத்து, தலை உடம்பில் தேய்த்து 5 நாளைக்கு ஒரு தரம் மூழ்கிவரப்போம் to cure this disease grind Indian gooseberry, gall nut skin, and musk turmeric with the juice of eclipta alba and apply the paste to the head and body and bath. This must be repeated once in five days.

பீனசரோகம், நாசிரோகம், disease of the nose, see *பீசனம்*.

பீனம், பாசி, duch weed; 2. கொடிப்பாசி, water weed; 3. பருமை, bulkiness; 4. வயிறு, belly.

பீனயக்கம், புரசு, a tree, bastard teak - butea frondosa.

பீனாறி, *பீநாறி*, cinca rosea, see *பீநாறி*.

பீனாறிப்பட்டை, *பீநாறி* மரத்தின் பட்டை, bark of *பீநாறி*, which see.

பீனிசம், பீனசம், மூலத்தில் கனலேறிக் கபாலத்தில் நீரையேற்றி ஒரு நாசியையடைத்து மற்றொரு நாசியில் நீர் வடிந்து அடிக்கடி தும்மலுடன் பிடரியும் தலையும் கனத்து வாரந்தோறும் கபாலம் வறண்டு நீர் திரண்டு நாற்றமடித்து உடம்பு வெதும்பி, நாவில் ருசியும், மூக்கில் மணமும் அற்று சிரசுநீர் நெஞ்சில் இறங்கித் துன்புறுத்தும் ஓர் வியாதி, an increased flow of mucous from the nose fauces etc, owing to the inflammation of the membrane or cold in the head.

பீனிசம் போக்கி, தைவயலி, not-identified.

பீனிசவயதி, பீனிசத்தை நிவர்த்திக்கு மருந்து, medicine that cures Peenasam.

பீனிச வியாதி, see *பீனிசம்*; 2. நாட்பட்ட சலதோஷம், chronic cold.

பீனிசவ்விரை, சீமை அவரை, a kind of lablab.

பு

புகட்டல், புகட்டுதல், உட்செலுத்துதல், to force inside the body as in medicines by injection or by syringe; 2. பருகச் செய்தல், to administer medicines or food to children by force or to adults in disease.

புகட்டுமருந்து, குதத்தின் வழியாய் மருந்தைப் பீச்சங்குழலினால் உட்செலுத்துதல், a liquid substance injected into the rectum for cleanising the bowels etc. - Lelyster.

புகம், பாக்கு, areca nut - Arcca catechu.

புகரு, பிராய் மரம், a tree with milky juice - Trophis aspera.

புகர், கபில நிறம், brown colour; 2. வெள்ளி, silver; 3. நிறம், colour; 4. அழகு, beauty.

புகர் நிறம், சாம்பல் நிறம், ash colour.

புகர் நீபம், வெண்கடம்பு, white kadamba.

புகர் முகம், யானை, elephant (spotted face)

புகர்வு, சோறு, cooked rice.

புகலிடம், an institution for the support, safe keeping and care such as the insane, blind destitue etc.

புகல், உடல் body.

புகழ், புத்தி, sense; 2. அகத்தி, a tree - Sesbania grandiflora.

புகழ், புகழ், முக்கிரட்டை, a prostate or creeper plant - Boerhavia procumbens.

புகழ்ப் பூ, பொன்னாவிரை, a plant - Cassia sophora C. occidentalis.

புகழ் மங்கை, எருக்கு, a milky shrub - Calotropis gigantea.

புகழ் மங்கைப் பால், எருக்கம் பால்; the milky juice of madar - Calotropis gigantea.

புகழ்மரம், அகத்தி, see புகழ்.

புகழ்வீசு சந்திரன், பச்சைக் கருப்பூரம், crude camphor - cinnamomim camphora.

புகள் அகத்தி, a leguminous tree - Coronilla grandiflora.

புகாமோகி, விஸ்வாமித்திரப் புல், a kind of grass.

புகார், பனிப்படலம், mist, fog; 2. மந்தாரம், cloudy; 3. மேகம், rainy cloud.

புகுடி, புருவம், eye brow.

புகுத்தல், உட்செலுத்தல், inserting; போகவிடல்; to let in.

புகுவாயில், இரைக் குழல், இறுதி, the termination of the oesphagus.

புகை, தூபம், fume, smoke; 2. நீராவி, steam, 3. பனிப்படலம், dew, fog; 4. புகையிலை, tobacco; 5. கருவிழியில் பூ விழும் ஓர் கண்வியாதி, an eye disease - Cataract of the eye.

புகைவகைகள் அவற்றின் தன்மை, varieties of smoke and their qualities; வேள்விப் புகை தீர்க்காயுள்; சுடுகாட்டுப் புகை ஆயுள் குறையும், நறும் புகை ஆரோக்கியம்; தைலப்புகை வாதம் போம்; இரசப் புகை கந்தம் பாஷாணப் புகை நோயுண்டாகும், sacrifical smoke enhances the life and age the smoke emanating from the burning corpse dicreases the life and age; fragrant fumes from burning incense is healthy; fumes from the medicinal oil allays the provocation of wind humour; fumes from burning sulphur, arsenic mercury etc. cause several diseases.

புகைகட்டுதல், see புகையூட்டுதல்.

புகைகாட்டல், தூபங்காட்டல், to fumigate.

புகை குடித்தல், புகை பிடித்தல், to smoke e-g கஞ்சா பிடித்தல்.

புகைக்கொள்ளல், see புகையிழுத்தல்.

புகைக்கண், நீல விழியுள்ள, blue eye.

புகைக்கம்மல், ஓர் கண்ணோய், an eye disease.

புகைக்கம்மல், ஓர் கண்ணோய், ar eye disease where the vision is blurred.

புகை சாப்பிடல், கஞ்சா பிடித்தல் smoking ganja etc.

புகைச்சரக்கு, நெருப்பிலிடட புகையும், கெந்தகம், ரசம் பாஷாணம் முதலியன, drugs tha send fumes when put on burnin unders.

புகைச்சல், இருள், darkness; 2. கண் மங்கல், dimness of vision; : வயிற்றெரிவு. burning of the stomach 4. இருமல், cough due t

inflammation; 5. தொண்டையில் காணும் ஓர் உணர்ச்சி, a sensation of irritation in the turoat inducing cough; 6. கண்மங்கலாயும், உருவம் அநேகமாயும் தோன்றும் ஓர்வகைக் கண்ணோய், a disease of the eye where in an object is seen as many; 7. மனத்திகைப்பு, கண் கூச்சம், இமைத்தினவு முதலிய குணங்களைக் காட்டி, கண்கள் சிறிது இரண்டு பார்வை பலவிதமாய்த் தோன்றும் ஓர் கண்ணோய், an eye disease marked by be wilderment, irritation of eyelids, intolerance of the eyes to light, smoky vision etc.

புகைச்சற்காதி, எவட்சாரம், salt petré-nitre.

புகைதல், தொண்டையில் காணும் ஓர் உணர்ச்சி, irritation of the throat; 2. சினம் குறிப்பு, fuming with anger, burning in the heart.

புகை தள்ளல், சுருட்டுப் பிடிப்பதை நீக்கிப் பத்தியமாயிருத்தல், prohibition of smoking when medicine is taken or when on diet.

புகை தாண்டிடுவாள், கொசு, musquito.

புகைத்திராவகம், புகையாலுண்டாகிய திராவகம், liquid obtained by cooling the fumes eg. சாம்பிராணி தைலம்.

புகை நாற்றம், புகை வாசனை.

புகைநிறி காரணம், எவச்சாரம், nitrate of potash.

புகை நீர், திராவகம், acid, any liquid obtained by distillation, e-g, வெடியுப்பு திராவகம்.

புகைநீர் கடை நீர், திராவகம் காய்ச்சும் போது முதல் இடை ஆக இருண்டு நீரும் தள்ளி கடைசியாக வரும் நீர், the lastly collected liquid from distillation.

புகைந்திருமல், inflammatory cough.

புகைபடாமண், பச்சை மண்பானை, unburnt mud vessel.

புகை பிடித்தல், சுருட்டுப் பிடித்தல், to smoke; 2. மருந்துப் புகையின் முன்னே நிற்றல்,exposure to the fumes of disinfection.

புகைபோடல், நறும்புகை காட்டிச் சுத்தப்படுத்தல், to disinfect through fumes and smoke.

புகைப்பற்று, புகைப்புற்று, ஒட்டடை, cobweb where the smoke deposit.

புகைப்பிரயோகம், அகஸ்தியர் விரணவைத்தியத்தில் இச் சிகிச்சையை 16 வகைகளாகச் சொல்லப்பட்டுள்ளது. இதை புண், புரைக் குஷ்டம், பரங்கிசூலை, முடக்குவாதம், பிள்ளை கிரந்தி, கண்டமாலை, பீனசம் முதலியவைகளுக்கு காட்டக் குணப்படும். இச்சிகிச்சை வைத்தியர்களால் கையாளப்படுவது உசித மெனக் கருதப்படும், சில சமயம் வாய்ப்பிடிப்பு, பல்வலி முதலிய குற்றங்கள் ஏற்படும், அதற்கு கஷாயம் தயாரித்து வாய் கொப்புளிக்கும்படி நேரிடும், the uses of fumigation see Agustiar vrana vaidyam.

புகைபோக்குவாய், புகைகூண்டு, chimney in a fire place.

புகைமடக்கி, வெண்காரம், borax.

புகைமணம், புகை நாற்றம், the smell of smoke.

புகைமாய்ச்சல், ஓர் வகைக் கண்ணோய், an eye disease.

புகையடுப்பு, மெழுகுத் தைலம், எரிக்க உபயோகிக்கும் அடுப்பு, இதற்குப் புகை போவதற்குத் தனியாக வசதி அமைந்திருக்கும், a variety of oven.

புகையாகா, சுருட்டுப் பிடித்தல் உதவாது, smoking is not good.

புகையாற்றி, ஒட்டறை, deposit of smoke.

புகையிருமல், புகைந்து இருமல், cough through irritation.

புகையிலை, புகைபிடிக்கவுதவும் இலை, காட்டுப் புகையிலை, இதனால் வாய் வறட்சி பலவீனம், பித்தாதிக்கம், விந்து நஷ்டம் உண்டாம். மருந்தை முறிக்கும், பற்கள் வலிபோம், மலம் கழியும், பீனசம் போம், leaf used for smoking; tobacco, it causes dryness; of the mouth weakness increase of bile humour and loss of semen. It counter acts the good effects of medicine; alleviates tooth ache, removes constipation and cures peenasam (catarrha) - Leaves of Nicotiana tobaccum; பிரமமுனி செய்த யாகத்தில் புகையினின்று தோன்றிய இருள் மாயை செடியாக முளைத்தது, இது தான் புகையிலையாகும். see கஞ்சா, It is considered that the tobacco plant has cropped from the fumes of the sacrificial fire made by Brahma muni.

NOTE:- The tobacco contains nicotine. When tobacco is used constantly necoline poison is absorbed in the system and causes many sufferings - dyspepsia, sleeplessness, headache, loss of vigour, throat irritation heart and lung diseases and cancer.

புகையிலைச் சாம்பல், ash of burnt tobacco.

புகையிழுத்தல், inhalation of medicated fumes.

புகையுட்கொள்ளல், see புகையிழுத்தல்.

புகையுறை, ஒட்டறை, cobweb where smoke deposits.

புகையூபம், தோணிமரம், wood for preparing boats.

புகையூட்டல், புகைகாட்டல், to apply smoke; 2. மருந்துத் திரியின் புகையை விரணத்திற்குள் செலுத்தல், to fumigate.

NOTE:- (by G.D.) புகைகாட்டுவதால் காய்கள் சீக்கிரம் பழுக்கின்றன, applying smoke makes fruits to ripen quickly.

புகையூட்டுகை, the act of fumigation, suffumigation.

புகையூதல், புகையூட்டல், to fumigate; 2. புண் புரைகளுக்கு மருந்தின் புகை காட்டல், exposure of ulcers and wounds to medicinal vapour to make them heal quickly.

NOTE:- This is used in case of asthma cough, aversion to food, cleansing the mouth, throat affections, rathavatham, nausea etc. Alleviates the pain in ulcer arrests its discharge and makes it clean - disinfectant and non viscid.

புகையூரல், புகையூறல், புகைப்பற்று, deposit of smoke.

புகையேற்றல், see, புகையூட்டல்.

புகைவாங்கல், மருந்துப்புகையை மூக்கினால் உட்கொள்ளுதல், அல்லது உள்ளிக்கிழுத்தல், inhalation of medicinal fumes.

புகைவு, தொண்டையிலுண்டாகும் உணர்ச்சி, irritation of the throat.

புக்கமால் மரகதம், one of the nine gems emerald.

புக்கம், உதயம், day dawn; மூத்திரக் குண்டிக்காய், kidney.

புக்கரம், தொட்டி பாஷாணம், red arsenic.

புக்கி, புக்கிகா, பிராய் மரம், a tree - Trophia aspera.

புக்கில், உடம்பு, body which is the abode of the soul as connected with transmigration.

புக்கு, புக்குலி, வில்வம், a sacred tree - Crataeva - religiosa.

புக்குத் திருப்பி, see வட்டத் திருப்பி

புக்தம், உணவு, food.

புங்கங்காய், see புங்கங்கொட்டை.

புங்கங்கொட்டை, பூவந்திக் கொட்டை, soapnut; 2. புங்க மரத்தின் கொட்டை, the fruit of indian beech - Pongamia glabra.

புங்கம், சாதம், cooked rice; 2.அம்பு. arrow; 3. see புங்கன்.

புங்கம்பால், புங்க மரத்தின் பால், milky juice extracted from the root of Pongamia glabra - the bark of the root is scraped and shavings are squeezed to obtain the milky juice.

புங்கலகம், தணக்கு, a tree - Gyrocarpus jacquine.

புங்கலம், ஆத்துமா, soul.

புங்கவம், எருது, bull; 2. அம்பு, arrow, 3. பசு, cow.

புங்கவன், கெந்தக பாஷாணம், natural arsenic being one of the 32 kinds.

புங்கவெண்ணெய், see புங்கெண்ணெய்.

பெருநூல், அகஸ்தியர் இராமதேவர் செய்த தமிழ் வைத்திய நூல்கள்; அகஸ்தியர் செய்த 12 காண்டங்களடங்கிய 12,000. வேறு நூல்களில் காணாமார்க்கம் இந்நூலில் காணலாம். Name of two Tamil medical works compiled by Agastiar and Ramadevar separately.

பெருநெருஞ்சி, யானை நெருஞ்சி, a large thistle — Tribulus longinosus; Bedalium meria.

பெருநெருப்பு, பெருந் தீ, conflagration i.e., காடாக்கினி.

பெருநெல்லி, நெல்லிமரம், a tree Indian gooseberry — Phyllanthus emblica.

பெருந்தக்காளி, தக்காளி, see பெரிய தக்காளி.

பெருந்தடிமல், Influenza.

பெருந்தட்டைப் பயறு, காராமணிப்பயறு, as opposed to சிறு தட்டைப்பயறு, cow pea Vigna unguiculata.

பெருந்தரா, திராய்ப்பூடு, a prostate plant — Fumaria parviflora.

பெருந்தலைக் கறையான், ஓர் வகைக் கறையான், big species of white ant.

பெருந்தலைத் திமிங்கிலம், large head whale — Sperm whale — Euphysetes macrocephalus. The hools have and enormous head with numberous teeth in the lower jaw, the upper teeth being concealed in the gums. The substance umbergris *(மீனம்பர்)* is a concrection found in their intestines. Spermaceti. which is a fatty substance found in the head cavities; it is white tasteless and crystaline.

பெருந்தாமரை, மலைத்தாமரை, a tree — Simlax macrophylla.

பெருந்தாரா, வனத்தாரா, a wild duck a heron.

பெருந்தாழை, பெரிய தாழை, Big screw pine — Pandanus odoratissimus; 2. சீமைக்கற்றாழை, great aloe; foreign aloe — Furcraca gigantia; 3. யானைக் கற்றாழை, Agave — Agave sisalana or Agave veracrwz.

பெருந்தாளி, மலைத்தாளி, a large species of creeper — Convolvulus.

பெருந்திணை, பொருந்தாக்காமம், sexual connection without consent and by violence rape. See வழுவுடைக் காமம்.

பெருந்திப்பிலி, யானைத் திப்பிலி, elephant long pepper — Scindapsus officinalis.

பெருந்திரட்டு, காலாங்கி நாதர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a Tamil Medical Science compiled by Kalanginather.

பெருந்திராய்,

பெருந்திருக்கை, a kind of fish with long tail.

பெருந்தில்லை, ஓர் மரம், a species of தில்லை tree — Exoecaria agallocha.

பெருந்தீனன், பெருந்தீனிக்காரன், glutton.

பெருந்தீன், பேருணவு, rich food.

பெருந்துத்தி, துத்தி, a big variety of country mallow — Abutilon polyandrum alias A. indicum.

பெருந்தும்பை, ஒரு வகைத் தும்பை, Leucus cephalotes.

பெருந்தும்மட்டி, பெரிய வகைத் தும்மட்டி, which see.

பெருந்துவரை, பெரிய துவரை, மலைத் துவரை, a plant yielding big sized red gram — Cajanus indicus alias C. Cajan.

பெருந்துறட்டி, சூறை, a plant — Zizyphus rugosus — சதுரகிரி மலையிலுள்ள ஓர் பூடு.

பெருந்துளசி, மலைத்துளசி, a large variety of Holy basil — Ocimum gratissimum.

பெருந்தெல்லு, See யானைத் தெல்லு.

பெருந்தேசி, கொடியெலுமிச்சை, a variety of lemon without seeds.

பெருந்தேட் கொடுக்கி, கருங் கிரந்தியைப் போக்கும் ஓர் செடி, வெந்தேட் கொடுக்கி, a big species of தேட் கொடுக்கி, which see.

பெருந்தேன், பேரிலையான், கூட்டுந்தேன், a good honey produced by or collected by large bees.

பெருந்தோடை, ஆடாதோடை, a shrub Adathoda vasica.

பெருப்பிறசாவா, கற்றாழை, Indian aloe — Barbados aloes — Aloe vera.

பெருமஞ்சரி, தேரையர் கரிசலிற் சொல்லிய ஔஷத வர்க்கத்தி லொன்று, one of the drugs mentioned in Karisal by Theran.

பெருமணிக்கோட்டுவான், ஒரு பெரு நீர்ப்பறவை, a large water bird.

பெருமண்டவாதம்,

பெருமந்தாரை, காட்டுமந்தாரை, a wild flowering tree of Butea genus.

பெருமயிர்க்கொன்றை, royal peacock flower shrub or tree poincian regia.

பெருமரச்சக்கை, பெருமரத்தோல், bark of பெருமரம், which see.

பெருமரத்துப்பட்டை, பெருமரவேர்ப் பட்டை, root bark of coromandel — Ailanthes excelsa.

பெருமரத்துப்பால், இதுவே மட்டிப்பால், exadation of நாறு மரம், Ailanthes excelsa.

பெருமரம், பெருங்கள்ளி, a big tree — Plumosa alba; 2. பீநாறி, a stink tree — Sterculia foetida; 3. நாறுமரம் Coromandel — Japanese and Malabar are different species, they are respectively Ailanthes, excelsa; A glandulosa, & A. malabaricus. Decoction of the bark of stem & root of A. excelsa is a tonic; 4. கழுதை வீட்டை மரம், — stercalia guttata.

பெருமராசிதம், வெள்ளைக்கொழுஞ்சி, white flowered orange.

பெருமருந்து, ஈசுரமூலி, பாம்பு விஷம் முறியும்படி கொடுக்கும் மருந்து, a twiner — Aristolochia indica; given for snake bites.

பெருமலர்க்கொன்றை, பெரும் பூக்கொன்றை அல்லது செழுமலர்க் கொன்றை, large flower cassia — Cassia florida.

பெருமலச்சேர்க்கை, மலச்சிக்கு, constipation.

பெருமலம், புங்கு, Pongamia glabra.

பெருமலைகலக்கி, ஓர் பூண்டு, a plant — Adiantum caudatum.

பெருமல்லரி, பெருமல்லி, பெருமரம், which see.

பெருமல்லிகை, பேராமல்லி, a species of jasmine — Jasminum undulatum; 2. தசமூலத்தொன்று; one of the ten plants used in preparing tonic, medicaments.

பெருமா, யானை, elephant, a large animal.

பெருமாண்டி, செருப்படை, a prostate plant — Molugo lotoides or coldenia procombens.

பெருமாந்தம், ஓர்வகை மாந்த நோய், a disease in children due to indigestion.

பெருமான், விந்து, semen; 2. ரசம், mercury.

பெருமிட்டை, பெருமுட்டை, பீ நாறி, a tree with bad smell — Sterculia foetida.

பெருமீன், யானைமீன், large fish.

பெருமுக்குளிக் கீரை, இதுவே முக்குளிக்கிரை, mukkuli green — Portulaca pilosa.

பெருமுசுட்டை, ஓர் பூண்டு, a plant — Bind weed — Ipomea staphylina.

பெருமுண்டினி, திருவாத்தி, a shrub or small tree — holy mountain ebony — bauhinia tomentosa.

பெருமுத்தக்காசு, பெருங்கோரைக் கிழங்கு, large sedge — Cyperus umbellatus.

பெருமுத்திரிகம், சிறுவழுதலை, a plant wild Indian brinjal — Solanum indicum.

பெருமுள்ளி, காட்டுமுள்ளி அல்லது காடகம், large nail dye — Barleria genus.

பெருமுள்ளிலவு, பேயிலவு, tree yellow silk cotton — Cochlospermum gossypium.

பெருமுன்னை, பேய் அல்லது மலைமுன்னை, a tree—Premna serratifolia.

பெருமூங்கில், மலைமூங்கில், mountain bamboo or large bamboo — large variety of Bambusa arundinacea.

பெருமூசகி, தேக்கு, teak tree — Tectona grandis.

பெருமூச்சு, நெடுமூச்சு, sighing; hard breathing.

பெருமூச்சுக் கொள்ளல், பெருமூச்சு விடல், sighing; 2. மேல்மூச்சு, hard breathing; 3. ஆழ்ந்தமூச்சு, deep breathing Yogi's breath as opposed to சிறுமூச்சு ordinary breathing.

பெருமூலி, பெருமருந்து சுற்றுக் கொடி, a twiner — Aristolochia indica.

பெருமூலிப்போக்கு, மருத்துவத்தில் பெருமூலியை பலவிதமாக உபயோகித்தல், the many ways of employing the drug பெருமூலி, in medicine.

பெருமூளை, பெரியமூளை, cerebrum.

பெரும் மூளை கோளம், cerebral hemisphere.

பெருமேகம், மேகநோய், Syphilis.

பெருமை, பெருங்குமிழ், a tree — Gmelinea arborea; 2. பெருவழுதலை, big brinjal.

பெரும்பசளை, செம்பசளை, red spinach — Spinacia oleracea rubrum.

பெரும்பசிரி, பெரிய இலைகளையுடைய பசிரிக்கீரை, common spinach — Spinacia oleracea; 2. செம்பசளை, See பெரும்பசளை.

பெரும்பஞ்சட்டை, பிரப்பூந்தாளி, — Litsaea tomentosa.

பெரும்படுவன், a kind of skin disease affecting the legs.

பெரும்பஞ்சமூலம், as opposed to சிறு பஞ்சமூலம் — பாதிரி, வாகை, பெருங்குமிழ், வில்வம், தழுதாழை — Stereospermum suaveolans. Albizzia labbek, Gmelina arborea, Aegle marmelos, and Clerodendron phlomoides as opposed to சிறுவழுதுளை, சிறுநெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறு மல்லிகை, பெருமல்லிகை.

பெரும்பஞ்சமூலம், தழுதாழை, a shrub or tree grown in the hedge — Clerodendron phlomoides.

பெரும்பஞ்சமூலம், ஐந்து மூலிவகைகள், five medical plants:

1. தழுதாழை, Clerodendron phlomoides.
2. பாதிரி, Stereospermum Suaveolens.
3. பெருங்குமிழ், Gmelina arborea.
4. வாகை, Albizzia lebbek.
5. வில்வம், Aegle marmelos.

பெரும்பயறு, மொச்சைப் பயறு, field bean — Dolichos; 2. பெருங் காராமணி, big cow pea — Vigna unguiculata.

பெரும்பருத்தி, இலண்டன் பருத்தி, London cotton.

பெரும்பருந்து, கூகை, a species of kite.

பெரும்பறவை, எண்கால் பறவை, a fabulous bird with eight legs named சரபம்.

பெரும்பனசை, பெரும்பனையன், ஓர்வகை அம்மை, a variety of pox.

பெரும்பனம்பூ, palmyra — Cotyledon found inside the germinating palmyra nut.

பெரும்பன்னாடை, large பன்னாடை which see.

பெரும்பாகற் கிழங்கு

பெரும்பாச்சோற்றி, see பெரும்பாற்சொற்றி.

பெரும்பாடு, பெண்களுக்கு மிதமிஞ்சிக் காணும் சூதகவொழுக்கு, an immoderate secrection of the menstrual discharge — Menorrhagia; 2. பெண்கள் மாதவிடாய் ஆகுங்காலத்தில் ஒழுகும் இரத்தம் சரியாய் வராது தடைபடுவதினால் பெரும்பாடு உண்டாகும்; கருப்பையின் நுனியிலுள்ள இரத்த சரங்கள் பலம் குறைந்து நார்கள் தளர்ச்சியாகி கருப்பை கன்றி உடம்பில் இரத்தம் உபரியாகிக் காணும்; See வாதப் பெரும்பாடு.

பெரும்பாண்டம், பூசணி, pumpkin.

பெரும்பாண்டு.

பெரும்பாதிரி, பெரிய பூவுள்ள பாதிரிமரம், a tree with large flowers — dolichandrone rheedii.

பெரும்பாந்தள், பெரும்பாம்பு, a kind of large snake.

பெரும்பாய்ச்சல், கண்ணீர் பெய்து கொண்டிருக்கும் ஓர் கண்ணோய், an eye disease marked by heavy tears.

பெரும்பாலை,

பெரும்பாற்சொற்றி, — Ruellia Secunda.

பெரும்பிணி, குறைநோய், leprosy.

பெரும்பிண்ணாக்கு, பிண்ணாக்குக் கீரை, as opposed to சிறுபிண்ணாக்குக் கீரை, Melochia corchori folia.

பெரும்பிரண்டை, ஓர் வகைப் பிரண்டைக் கொடி a large creeping plant of the species of பிரண்டை — Vitis quadrangularis.

பெரும்புரமி, see மலைப்பிரமி.

பெரும்பிலா, பொன்னாவிரை, which see.

பெரும்பிளவை, இராச பிளவை, corbuncle.

பெரும்பீர்க்கு, பெரிய பீர்க்கு large ridgedgourd as opposed to சிறு பீர்க்கு small variety.

பெரும்பீலிகை, enlarged spleen.

பெரும்பீழை, பெரும் பூளை, which see.

பெரும்பீளை, இதுவே பாஷாண பேதி, இச்செடியினால் கல்லடைப்பு தீரும், as opposed to சிறு பீளை — Achyranthes lanata.

பெரும்புடம், see கனபுடம்.

பெரும்புடல், பேய்ப்புடல், a creeper, see பேய்ப்புடல்.

பெரும்புண், பெரிய புண், a large sore.

பெரும்புத்திகா, தண்ணீர் மிட்டான், கொடி a climber — Asparagus sarmentosis.

பெரும்புலால், ஓர் மீன், a large fish.

பெரும்புல், ஓர் வகைப் பெரிய புல், a large sized grass.

பெரும்புளி நறளை, a creeper, large புளி நறளை, which see.

பெரும்புள், கூகை, a large owl.

பெரும்புள்ளடி, as opposed to சிறு புள்ளடி.

பெரும்புறா, large sized pigeon.

பெரும்பூகி, தேங்காய், cocoanut.

பெரும்பூசினி, கலியாண பூசனி, சாம்பார் பூசனி. இதனால் மூத்திரக் கிரிச்சரம் சாரமேகம் இடுமருந்து, பித்த சுரம், பேய்ச்சொறி பிரமேகம் போம், ash pumpkin (fruit) — Benincosa cerifera.

பெரும்பூணிதம், see பெருஞ்சுரை.

பெரும்பூதாலம், கல்லால், which see; 2. ஓர் வகை பூவரசு, a tree — Thespesia populnea.

பெரும்பூ நாகக் கிருமி, சிலேட்டுமத்தால் இரைப்பையிலுண்டாகும் ஏழுவகை பூச்சிகளிலொன்று, round warm. see சிலேட்டுமக் கிருமி.

பெரும்பூம் பாதிரி, see பெரும் பாதிரி.

பெரும்பூம்பாதிரி —Dolichondrone rheedii.

பெரும்பூளை, பெரும் பீழை, see பெரும்பீளை; 2. கண்பீளைச் செடி, see பெரும்பூம்பாதிரி.

பெரும்பூனைக்காலி, பூனைக்காஞ் சொறி which see.

பெரும்பேதி, அதிசாரம், diarrhoea.

பெரும்பொழுது, ஆறுபருவம், six seasons of the year. 1. இளவேனில் காலம், spring season; 2. முதுவேனில் காலம், summer; 3. மாரிகாலம், rainy season; 4. குளிர்காலம், cold season; 5. முன்பனிக்காலம், early dew, evening dew; evening dew; 6. பின்பனிக்காலம், late dew i.e. morning dew.

பெரும்போகம், வரம்பு கடந்து செய்யும் கலவி, excess of sexual intercourse.

பெருரோகக் குடோரி, குட்டத்தைத் தீர்க்கு மருந்து. அன்றியும் பாம்கடி விஷம், கண்டமாலை பிளவைக்கும் கொடுக்கலாம், a medicine to cure leprosy, snake bite, scrofula and carbuncle.

பெருரோகம், பெருநோய் அல்லது குட்டம், leprosy.

பெருலவங்கப் பட்டை, இதுவே லவங்கப்பட்டை, thick or large Cinnamum bark.

பெருலாகிதம், ஓர் புடல், a variety of snake gourd creeper.

பெருவகை, காய்கறி வகைகளில் பெரியது; பெருராசி; large variety — Amongst vegetable kindom.

பெருவணில், large squirrel.

பெருவயிறு, உடம்பு வெளுத்து, வற்றி, சீரண கருவிகள் மந்தித்து, மலந்தீய்ந்து, சிறுநீர் சுருங்கி, அன்னம் செல்லாது வயிறு பெருத்தல், abdominal dropsy; 2. வாதமும் கபமும் கூடிக் கொதித்தெழுவதால் வயிற்றில் வாய்வு திரண்டு கொப்பூழ் வீங்கி கண் வெளுத்து, கை காலுடம்பு உளைந்து அசதியாகி, விலாப்புறம் வலித்து வயிறு பெருத்து மினுமினுத்துக் காணும், சிறுநீர் குறைந்து போம், Ascites due to the diseases of liver and spleen.

பெருவரை, பெரிய மூங்கில், large bamboo.

பெருவலாகம், மருட்கற்றாழை, a variety of aloe.

பெருவலி, மிக்கவலி, much pain; 2. இழுப்பு, fits.

பெருவழி, பெண்குறி, vagina; 2. யோனித் துவாரம், vaginal passage.

பெருவழுதலை, பெருவழுதுணம், பெருங்கத்திரி, a variety of brinjal plant bearing big fruits — Solanum indicum.

பெருவள்ளி, பெரிய வள்ளிக் கிழங்குக் கொடி, a creeping plant — Discorca sativa; 2. யாமிகக் கிழங்கு — Discorca alata; 3. ஆறுவள்ளிக் கிழங்கு, large esculent root; 4. மரவள்ளிக்கிழங்கு, tapioca — Mnihot utilissima.

பெருவாகை, பெரிய வாகைமரம். a large tree — Mimosa flexuosa; 2. வேலிப்பருத்தி, a creeper — Daemia extensa.

பெருவாகைப்பட்டை, bark of பெருவாகை, which see.

பெருவாதி, பழம்புளி, old tamarind.

பெருவாத்தி, see பெரியவாத்தி.

பெருவாயன், கழுதை, ass.

பெருவாயன் பால், கழுதைப்பால், milk of an ass.

பெருவாய்நீர், கழுதை மூத்திரம், urine of an ass.

பெருவாய்வழி, பெண்யோனி வழி, vaginal passage.

பெருவாரி, கொள்ளைநோய், an epidemic disease.

பெருவாரிக்கட்டி, pestilential bubo.

பெருவாரிக் கழிச்சல், epidemic dysentery.

பெருவாரிக் காமாலை, epidemic jaundice.

பெருவாரிக் காய்ச்சல், கோதாரிக் காய்ச்சல், pestilential fever — Influenza; 2. கொள்ளைக் காய்ச்சல், plague; 3. கட்டிக் காய்ச்சல், plegue.

பெருவாரிகரம், fever of small pox; in fluenza.

பெருவாரிச்சுரம், See பெருவாரிக் காய்ச்சல்.

பெருவாரி நோய், தொற்று வியாதி, pest pestilence.

பெருவாரிப் பினக்காமாலை, epidemic catarrhal jaundice.

பெருவால், விழுதுடைய பெரிய ஆலமரம், a large banyan tree with many adventitious roots.

பெருவிச்சி, as opposed சிறுவிச்சி.

பெருவிடாய்க் கொள்ளல், மிக்க தாகத்தால் பீடித்தல், being affected with intense thirst.

பெருவிடுகொள், ஓர் பூடு, a plant.

பெருவிடுகொள்ளி, see பெருவிடுகொள்.

பெருவிடுக்காள், காவளை, devil leucas — Leucas linifolia.

பெருவியாதி, குட்டம், leprosy; 2. கிரந்தி நோய், venereal disease — syphilis.

பெருவியாதி, உடல் சிவந்து திமிரேறி — பரிசமற்று மூக்கிமையினடி, நாவு தடித்து, கை கால் குறுகி வெடித்து புண்ணாகி முகம்வியர்த்து, காதில் சீழ் வடிந்து நாற்றம் வீசும் ஓர் குட்ட நோய்; பெருவீக்கம், leprosy marked by numbness mutilation of toes and fingers, fissures, ulcers with foul smell etc.

NOTE:- It is a chronic disease of the skin which goes to the extent of affecting the under lying tissues even to the nerves and bones. It is a constitutional disease through heredity and it can also be accquised through contact or occasional association. Persons naturally predisposed to it may escape the contagion. Though children of leprous parents may escape the disease, the subsequent generations may be affected. Dietic errors in food combinations such as milk and fish, liquid and only foods, etc., may also bring about the disease. Several are the causes attributed to it in Indian Medicine and modern theory says it is caused by the germ basillus leprose.

Symptoms:- are burning and itching sensetion, change of complextion, extreme insensibility, to the touch, piercing sensation, ulcerations and sores all over the body with foetid discharges. The other symptoms vary according to the varieties which are eighteen in number according to Indian Medicine.

All the skin diseases other than the above varieties in European Medicine will fall under Soodrakustam. In the advanced stage of leprosy will be found discoluration of the whole body, change of features, ulcerations all over the body with fetid discharges, sheding or flesh in fragments mutilation of the limbs obliteration of the entire nose etc. Even bones and marrow are affected.

பெருவிரணம், large ulcer.

பெருவிரல், காலின் பெருவிரல், great toe; கையின் பெருவிரல், thumb.

பெருவிரல் மடிப்பு, a condition in which the great toe is displaced under the others— Undertoe.

பெருவிரல் மூட்டு, காலின் பெருவிரல் மூட்டு, the basal joint of the great toe.

பெருவிரற்சதை, a muscle that extends the thumb — Antithenar.

பெருவிரியகா, கீழ்க்காய் நெல்லி, Indian phyllanthus — Phyllanthus niruri.

பெருவிரியன், ஓர் வகை விரியன் பாம்பு, a variety of snake.

பெருவிளா, விளாமரம், wood apple tree — Feronia elephantum.

பெருவிளி, நறுவிளி, a tree — Cordia angustifolia.

பெருவீடுகொள், கொள்ளுச் செடி, horse gram — Dolichos biflorus.

பெருவீளி, விரச மரம், a tree.

பெருவெக்கை நோய், வைசூரி நோய், small pox; 2. வாந்தி பிராந்தி.

பெருவெங்காயம், மலை வெங்காயம், big onion.

பெருவெலுமிச்சை, see பேரெலுமிச்சை, large sized lime — Italian lemon.

பெருவெளி, ஏக வெளி, open sky.

பெருவேளை, a plant — Polanicia icosandra; 2. நாய்வேளை, deaf or wild mustard — Cleome viscosa.

பெருவேம்பு, மலை வேம்பு, mountain neem common bead tree — Melia azatiract.

பெர்பெரி, Berry Berry plant.

பெலசாலியரிசி, வெள்ளரிசி, white rice.

பெலப்பித்தல், பலப்படுத்தல், to invigorate.

பெலம், பெலன், வல்லமை அல்லது பலம், Strength.

பெவசியமாதல், உறுதியாகச் சித்திபெறல், to attain succes — Surely.

பெலன் செய்தல், வல்லமை யுண்டாக்கல் invigorating.

பெலிவலமூலி, பெருமருந்து, ஒரு சுற்றுக் கொடி, — Indian birth wort — aristolochia indica.

பெல்காம் அக்ரோட்டு, பெல்காம் சேத்து அக்ரோட் பருப்பு, Belgaum walnut — Aleurites triloba or Juglans regia.

பெல்லடோனா, Belladona.

பெல்லடோனாவுப்பு.

பெல்லம், பெருமுத்தக்காசு, which see.

பெல்லி, சூனியம், sorcery.

பெல்லெளணம், 2 நாயுருவிச் செடி, Indian burr — Achyranthes aspera.

பெறல், பெறுதல், to give birth; 2. பிரசவித்தல், to deliver child; begetting.

பெறுக்குதல், துடைப்பத்தினால் சுத்தம் செய்தல், sweeping with the broom.

பெறுக்குமாறு, விளக்குமாறு, broom.

பெற்ற குழந்தை, பிறந்த சொந்தக் குழந்தை, one's own child.

பெற்ற மலடு, கருவற்றதினால் உடல் பெருத்து வலித்து சிறுநீர் கழுதை மூத்திரம் போல் இறங்குமோர் வியாதி, a disease in woman caused by sterility after giving birth to one or two children. See கதலிமலடு.

பெற்றாரற்ற பிள்ளை, தாய் தந்தையரில்லாக் குழந்தை, parentless child — Orphan.

பெற்றார், தாய் தந்தையர், parents.

பெற்றியறிதல், as in 'பிணிக்கேற்ற பெற்றியறிந்து' or தேக நிலைமைக்கேற்ற பெற்றியறிந்து தன்மையை அறிதல், to study the nature of anything.

பெற்றிழந்த மலடி, குழந்தைகளைப் பெற்றும் ஒன்றாவது தங்காமல் இறந்ததின் நிமித்தம் பிள்ளை பெறாத மல்டியாகவே கருதப்படும் பெண், a women whose children are all dead.

பெனல் பழம், ஐரோப்பா தேசத்தில் விளையுமோர் வாசனையுள்ள பழம், Fennel fruit.

பென்னுகம், கழற்சி, a thorny creeper.

பென்னை, யானை, elephant; 2. பூதவிருட்சம், Banyan tree.

பே

பே, நுரை, foam; froth.

பேகடம், ஓர்வித மீன், a variety of fish.

பேகம், தவளை, frog, ஓர் வகை அப்பிரகம், a variety of mica.

பேகன், ஆண் தவளை, male frog; 2. கடை வள்ளல் எழுவரிலொருவன், one of the seven generous persons of Tamilnad.

பேகி, பெண் தவளை, female frog.

பேசகம், ஆந்தை, owl.

பேசகி, யானை, elephant.

பேசங்கம், see மாங்கிஷபேதி.

பேசமுடியாமை, பேசக் கூடாமை, absence of the power of speech — Apponia.

பேசலம், ஊமை, a dumb person; 2. குயில் Indian cuckoo.

பேசாதி காயம், பிராணாயம், the physical and silent state of a yogi who is absorbed in scientific breathing.

பேசாநிலை, மௌன நிலை, the state in which the yogi is passed into trance.

பேசி, உடம்பிலுள்ள அசைவுகளுக்குக் காரணமான தசை நார், muscle; 2. இரண்டு மாதத்திய கருப்பிண்டம், two months old foetus; 3. முட்டை, egg.

பேசிகோசம், முட்டை, egg; 2. முதிராத பிண்டம், embryo.

பேசிச்சவ்வு, fascia covering the muscles; thin sheath of fiberous tissue.

பேசித்துவம், muscularity.

பேசிபாரிசம், நரம்பை, தசைநார் இவைகள் சம்பந்தமான பாரிச வாயு; a disease — Essential paralysis.

பேசியிலக்கணம், மனிதவுடம்பின் தசைநார்களைப் பற்றிய ஓர் நூல், Myology.

பேசியிழைகள், muscular fibres.

பேசிலம், யானை, elephant.

பேசிவாசிகை, சடாமாஞ்சில், a medicinal grass — Valerian or Indian spikenard — Cyperus stoloniferus.

பேசிவாதம், see மேகவாயு.

பேசிவிவரணம், மனித வுடம்பின் தசை நார் விவரத்தையும் குணாதிசயங்களையும் பற்றிய ஓர் நூல் — Myography.

பேசுங்கனிமாதர், எலுமிச்சம் பழம், lime fruit.

பேசுமெழுத்து, மனம், opposed to பேசாவெழுத்து வாசி.

பேச்சக்கா யெறும்பு, பேய்க்கா யெறும்பு, which see.

பேச்சாயி, see பேச்சியம்மை.

பேச்சி, நாதவுப்பு, salt prepared from efflorescence found in the soil of fuller's earth.

பேச்சியம்மை, அறிஞரால் பேசப்படுபவளாகிய லட்சுமித் தாய், Goddess Lakshmi, 2. மதுரை வைகைக் கரையிலுள்ள ஒரு அம்மை.

பேச்சுக்குளரல், பேச்சு தடுமாற்றம், distorted or imperfect utterance of speech — Cararthria.

பேச்சுத்திடம், well pronounced; clear speech.

பேச்சுமூச்சில்லாமை, சொர்ணையில்லாமை, unconscious state, swooning; 2. மரணங் கிட்டல், nearing death.

பேச்சுமெதுவு, மெல்ல சன்னமாக பேசுதல், slowness of utterance — Brady phemia.

பேச்சையிலை.

பேடகம், மீன், a fish.

பேடணம், பொடி செய்தல், to pulverize; to powder.

பேடம், வெள்ளாடு, goat

பேடன், பேடி, அலி, Hermo phrodite.

பேடி, பெண்ணாடு, she goat.

பேடிசம், see பேடிசவித்தை.

பேடிசவித்தை, மயக்குந் தொழில், hypnotism.

பேடித்தனம், அலித்தன்மை, state of impotency.

பேடு, அலித்தன்மை, impotancy; 2. பெண் பறவை, female bird; hen.

பேடுமூஞ்சி, பெண்பிள்ளை முகரூபம், womanish face.

பேடை, பறவைப் பெண், female of birds.

பேணிப் பார்த்தல், நோயாளிகளைக் கவனித்தல், Nursing.

பேதகமணி, பேதகி, வெண்காரம், borax.

பேதகம், பேதம், difference.

பேதநம், பன்றி, hog.

பேதபுத்தி, sense of difference.

பேதமயம், கும்பகம், suppresion of breath.

பேதமிஷக், (யுனா) கஸ்தூரிப் பிரமி, an Unani drug.

பேதம், பேய்க் கொம்மட்டி, fruit of a creeper; bitter melon — Colocynth — Citrullus Colocynth; 2. வேற்றுமை, change; variation.

பேதரம், தில்லைமரம், a tree yielding milky juice — Excoecaria agallocha.

பேதரம்பால், தில்லைப்பால், the milky juice of the thillai tree which affords a gum.

பேதனத்தி,

பேதனமருந்து, மலத்தை இளக்கச் செய்யும் மருந்து, laxative medicines.

பேதனம், இறுகிய மலத்தை உடைக்குந் தன்மை, laxative.

பேதனா, சீமை மாதுளை விரை, quince seed-syrian rue — Pyrus cydonia alias Cynodia vulgaris.

பேதனி, see பேதன மருந்து.

பேதாகம் பேதம், பூனைக்காலி, which see.

பேதாதிகம், காட்டிலுப்பை, a tree; wild mowah — Bassia latifolia.

பேதாதிபேதம், பலபேதம், different kinds of varieties.

பேதாபேதம், see பேதாதிபேதம்.

பேதாரிக் குறண்டி, பாற்குறண்டி, milk corandy — Lepidagathis pungens.

பேதானா, see பேதனா; கருஞ்சிவப்பும் பிசுபிசுப்புமுள்ள ஓர் விதை — quince seed.

பேதி, இந்துப்பு, epsom salt; 2. இரசம், mercury; 3. பேதம், change; variation; 4. கழிச்சல், purging; 5. நேர்வாளம், croton seed; 6. அசீரணக் கழிச்சல், diarrhoea; 7. வாந்திபேதி, cholera; 8. பேதி மருந்து, purgative; 9. அன்னபேதி, green vitriol; 10. குடலிலுள்ள மலங்களை யுடைத்து வெளிப்படுத்துந் தன்மை, the quality of evacuting the bowels.

பேதிவகை; varieties of diarrhoea;

1. வாந்திபேதி, cholera.
2. சீதபேதி, dysentery.
3. இரத்தபேதி, bloody motion.
4. புழுபேதி, motion due to worms.

பேதி கட்டல், பேதியாதலை நிறுத்தல், to stop motion.

பேதிகந்தகம், see இரேவல் சின்னி, ceylon gamboge product of garcina morella.

பேதிகாரி, ஆற்றுத் தும்மட்டிகாய், fruit — bitter apple — Citrullus colocynthus; 2. பேதி மருந்து, cathartic.

பேதிகாலிகம், சிவதை வேர், Indian jalap; turpeth root — Ipomaea turpetham.

பேதிகா, காட்டுக் கருவேப்பிலை, wild curry leaf murraya poenigii.

பேதிகுன்மம், வயிறு வலித்து கழிந்து உடம்பு வறட்சியினால் உலர்ந்து மருந்துண்டாலும் தங்காது வியர்த்து தண்ணீராய் விடாது பேதியாகும் ஓர் நோய், (யூகி —1200) a disease marked by motions with pain abdomen, dryness of the body with emaciation etc.

பேதிக்கிழங்கு, சீனக்கிழங்கு, jalappa — a purgative drug — Ipomaea purge.

பேதிக்கினி, antilax.

பேதிக்குக் கொடுத்தல், பேதிக்குக் கொள்ளல், பேதிக்குக் குடித்தல், to take a purgative in the form of liquid, oils, pills, powder etc.

பேதிக்கொட்டு,

பேதிசுராங்குசம், சகல சுரங்களுக்குமாகக் கொடுக்கப்படும் ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic medicine given for fevers.

பேதிச்சி, கருப்புச் சித்திர மூலம், black plumbago plant — Plumbago capensis.

பேதிதயம், காட்டுக்கத்திரி, wild brinjal — Solanum.

பேதித்தல், பேதியாதல், purging (in alchemy); 2. மாறுபடச் செய்தல், to change chemically; 3. வேற்றுமைப்படுதல், to bring about chemical decomposition; நாடி வித்தியாசப்படல், change in pulsation.

பேதித்து நடத்தல், நாடி வித்தியாசப்பட்டு ஓடுதல், variation or deviation in the beating of pulse.

பேதிபண்ணுதல், விரேசனம் செய்தல், to cause purging.

பேதிபுடுங்கல், பேதியுண்டாதல், to be attacked with diarrhoea.

பேதி பூபதி மாத்திரை, ஊதுமாந்தத்திற்கு தயாரித்துக் கொடுக்கும் மாத்திரை, a pill prepared and prescribed for diarrhoea attended with swelling arising from indigestion in children.

பேதிப்பு, see பேதம்.

பேதிப்போக்கு,

பேதிமருந்து, பேதியுண்டாவதற்குக் கொடுக்கும் மருந்து, a medicine given for cleansing the bowels; cathartic, purgative.

பேதி மாத்திரை, பேதியை யுண்டாக்கு மாத்திரை, pills causing motions.

பேதியாகுமூலி, பேதியை யுண்டாகும் சரக்கு. anything that causes motions such as சிவதை, நேர்வாளம், நிலாவரை etc.

பேதியாதல், having motions.

பேதியாவரை, சூரத்தாவிரை, Tinnevelly senna.

பேதியாவிகம், நேர்வாளம், croton seed.

பேதியுப்பு, saline purgative.

பேதியுறை, see பேதிமருந்து,

பேதியைக் கட்டு மூலி, வசம்பு, sweet flag — Acorus calamus.

பேதிரஞ்சனம், see தணக்கு, a tree.

பேதிவாளம், நேர்வாளம், croton seed.

பேதின்னீர், தமரகம், which see.

பேது, மதிமயக்கம்; mental derangement. 2. உன்மத்தம், mania; insanity.

பேதுகம், காட்டுச் சீரகம், a plant — wild cumin — Vernonia anthelmintica.

பேதுறல், மதி மயங்குதல், being perplexed; 2. புத்தி கலங்குதல், confusion of mind.

பேதுறுதல், see பேதுறல்.

பேதை, கள், toddy or any intoxicating liquid; 2. வெகுளி, young person of simplicity — Ingenue; 3. ஏழு வயதுப் பெண், 5 to 7 years girl — (அமுத நிலை - உச்சி); 4. பெண், woman; 5. பேடி. eunach.

பேதையர் பொன், மாற்றுப் பொன், fool's gold.

பேத்துவம், அமுதம், nectar; 2. நெய், ghee,

பேத்தை, ஓர்வகை மீன், a kind of fish; 2. காமாலை வீக்கம், swelling to jaundice.

பேத்தைபற்றுதல், காமாலை வீக்கமுண்டாதல், to contract swelling by dropsy.

பேப்பாட்சி, see பேய்ப்பாட்சி, a plant.

பேமாசிகம், பேய்க்கடலை, wild pulse.

பேயகத்தி, சீமையகத்தி, ringworm shrub — Cassia alata.

பேயகற்றுதல், பேயோட்டுதல், to remove the devilish nature; 2. மயக்கந் தெளிவித்தல், decharming.

பேயகிக்காளான், பேய்க் காளான், wild mushroom.

பேயத்தி, கசப்பத்தி, காட்டத்தி, a wild and bitter kind of figtree — Ficus hispida, fruit and bark emetic; bark antiperiodic. இவ்வகையில் பட்டாணியைப் போல் சிறு காய்களையுடையது ஓர் இனம், — Ficus polycarpa.

பேயத்திப் பட்டை, bark of பேயத்தி which see. It is antiperiodic and emetic.

பேயம், கஞ்சி, rice gruel; 2. நீர், water; 3. பால், milk; 4. குடிக்கு மருந்து, liquid medicine e-g. Decoction.

பேயம்மான் பச்சரிசி, சின்னம்மான் பச்சரிசி, thyme leaved spurge — Euphorbia thymifolia alias E. macrophylla.

பேயருளாந்தை, பூதபுட்பம், a species of trumpet flower — Oroxylum indicum.

பேயவரை, காட்டவரை, wild beans having medicinal properties — Canavalia gladiata.

பேயனம், கோதும்பை a variety of leuncus

பேயனுள்ளி, பேயுள்ளி, காட்டுள்ளி, wild onion.

பேயன் கனி, பேயன் வாழை, ஒரு வகை வாழை பழம்; மலமிளக்கியாக பயன்படும், a variety of plantain fruit used as laxative.

பேயா, நோயாளிக்குக் கொடுக்கும் ஓர் விதக் கஞ்சி, conji given for convalscents.

பேயாமணக்கு, ஓர் ஆமணக்கு, a wild castor oil plant.

பேயால், கல்லால்; ஓர் வகை ஆல் — Ficus dalhonsis.

பேயாவாரை, நாற்றத் தகரை, a kind of beans used in medicines — Cassia occidentalis.

பேயாவிரை, see பேயாவாரை.

பேயாவீரம், ஆவாரை, Tanner's cassia Cassia auriculata.

பேயிஞ்சி, பேயீஞ்சு, Cycas revoluta.

பேயிண்டு, see பேயிஞ்சி.

பேயிட சுவாளிகா, பேய்க் கரும்பு, wild variety of sugarcane — saccharum arundinacum.

பேயிருமல், சுக்குவான், whooping cough.

பேயிலவு, முள்ளிலவு, a tree, silk cotton tree — Bombax malabaricum.

பேயிலிசிகம், நாகதாளி, cactus.

பேயிலுப்பை, காட்டிலுப்பை, wild mowalh — Bassia latifolia.

பேயூடம், பேயூஷம், அமுதம், nectar; 2. பசு, cow, 3. புதுவெண்ணெய், fresh butter.

பேயூமத்தை, மருளூமத்தை, a variety of dhatura — Xanthium orientalis.

பேயூவிதம், நாய்க்கற்றாழை, a variety of aloe.

பேயெலுமிச்சை, காட்டெலுமிச்சை, wild lime.

பேயெள்ளு, காட்டெள்ளு, wild sesame.

பேயோடாடி, சிவகரந்தை, which see.

பேயோட்டி, ஓர் மரம், a tree.

பேயோணான், காட்டோணான், a wild lizard.

பேய்க்கண்டல், see கண்டல், a tree Rhizophora mangla.

பேய்க்கடம்பான், பிசாசுமீன், devil fish; 2. ஓர் கடல்மீன், octopus.

பேய், பிசாசு, devil; 2. கசப்பு, bitter

பேய்க்கஞ்சான், see சாணாக்கிகிரை.

பேய்க்கடலை, கசப்புக்கடலை, a bitter kind of gram.

பேய்க்கடுக்காய், சிறுகடுக்காய், a tree — myrobalam of Travancore — terminelia paniculata

பேய்க்கண்டகம், பேய்த்தேற்றா, wild clearing nut strychnos potatorum.

பேய்க்கத்திரி, wild brinjal.

பேய்க்கரிப்பான், காட்டுக் கரிப்பான், wild, variety of eclipse plant.

பேய்க் கருங்காலி, வெள்ளைக் கருங்காலி, white variety of Acacia catechu.

பேய்க்கருடன் கிழங்கு, wild sky root — Bryonia epigaea.

பேய்க்கடி, Rabies or canine madness; an acute disease of the central nervous system occuring in dogs and other animals by means of bites. When it occurs in human beings it is called hydrophobia.

பேய்க்கருணை, wild yam.

பேய்க்களா, wild களா, which see.

பேய்க்கல், வெள்ளைச் சுக்கான்கல், white lime stone.

பேய்க்கற்றாழை, பெருமேகம் போம்; அதிக நீர், உடம்பெரிச்சல் போம், இது இரும்பைத் தங்கமாக்கும், a variety of Aloe which is capable of transmuting iron into gold-demon aloe — Aloe ramosa; 2. ஆனைக் கற்றாழை, elephant aloe — American aloe — Agave Americana; 3. கசப்புள்ள சோற்றுக்கற்றாழை; இது கிடைப்பது அரிது, bitter aloe.

பேய்க்கரும்பு, காட்டுக்கரும்பு; கரும்புபோல் உருவமுடையதும் மதுரச் சுவையில்லாததுமான ஒரு வகைப் புல்லினம்.

பேய்க்கனி, பேயன் வாழை, a variety of plantain used as laxative.

பேய்க்காயெறும்பு, a small black ant with long feet. see பேச்சுக்கா யெறும்பு.

பேய்க்காளான், மஞ்சட் காளான், a kind of yellow mushroom.

பேய்க்காந்தாள் — Rhizophra mucronata.

பேய்க்குமட்டி, பேய்க் கொம்மட்டி அல்லது ஆற்றுத் தும்மட்டி, a wild gourd — bitter apple or melon — Citrullous colocynthis.

பேய்க் குறிஞ்சான், அஞ்சனத்திற் குதவும் மருந்து, a herb used in magic.

பேய்க்குன்றி, காட்டுக் குன்றிமணி, a wild species of குன்றி, which see.

பேய்க்குருந்து, - Atlantia ceylanica.

பேய்க்கொம்மட்டி, ஆற்றுத்தும்மட்டி — a prostate plant — Cucumis colocynthis.

பேய்க்கொம்மட்டி எண்ணெய், கும்மட்டி எண்ணெய், oil prepared out of the fruit ஆற்றுத் தும்மட்டி, which see.

பேய்க்கொள், காட்டுக் கொள், wild horse gram.

பேய்க்கொல்லி, ஓர் செடி, a plant.

பேய்ச்சாளை, ஓர் மீன், a kind of fish.

பேய்ச்சி, see பேய்ப்பீர்க்கு.

பேய்ச்சிங்கி, பேய்முசுட்டை, a creeper.

பேய்ச்சீந்தில், see ஆகாச கருடன், sky root creeper; 2. கருஞ்சீந்தில் black variety of சீந்தில் which see; 3. ஆகாச கருடன் கிழங்கு அரையாப்பு, வெள்ளை, கொறுக்கு இவைகள் போம், பாம்பு நடுங்கும், the sky root is a remedy for venerial disease — gonorrhoea & chancre.

பேய்ச்சீபிதம், see நிலப்புரண்டி, a plant.

பேய்ச்சீயக்காய், a shrub — Rusty mimosa — Acacia pennata.

பேய்ச்சீலியம், see பேய்க்கடலை.

பேய்ச்சுண்டை, நாய்ச் சுண்டை, a plant — Solanum gigantium.

பேய்ச் சுரபி, பேய்க்காளான் which see.

பேய்ச்சுரை, இது சுரைக்கொடியைப் போல் காய்கள் மட்டும் வில்வக்காயைப் போல் பருமனாய் இருக்கும். இக்காயைப் புசித்தால்

கசக்கும். இதன் விதையை மாத்திரம், கொண்டு வந்து குழித்தைலமாக இறக்கி கழஞ்சித் தைலத்தில் நெய் தேன் சமன் சேர்த்து சூத செந்தூரத்தில் குழைத்துப் புசிக்க மூர்ச்சையாகும். அச்சமயத்தில் ஒருவர் இருந்து மேற்படி தைலத்தைத் தேகத்திலும் பாதங்களிலும் தடவுவதுடன் ஒரு அகப்பை பசும் பால் வீதம் 21-நாள் வரையில் உட்கொள்ள கொடுக்க மூர்ச்சை தெளியும். தேகமும் சித்தியாகும்.

"அடிணும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்"
(வெற்றிவேற்கை)

"போர் நிறுத்திப் பேய்ச்சுரையறுத்து
(நாயகர் அகவல்)

This looks like ordinary bottle gourd creeper but the fruit is like that of bael tree. It is bitter to taste. An oil is extracted from its seeds by the process of குழித்தைலம். If $1^1/_4$ pagoda weight or 40 Jeweller's bead weight of this oil is mixed with equal quantity or weight of honey and ghee, and mixed with calcined red powder of mercury and taken, the person swoons. At that time a person must smear this oil over the body and sole of the foot of the swooned person and also feed the person with $^1/_2$ ollock of pure cow's milk. It nursed in this way for 21 days, the person being releived of the swooning condition, rises up with full consiousness. His body and mind are rejuvenated.

பேய்ச்சுரைக்கட்டி, கட்டி எழும்புமிடத்தில் நெருப்பினால் சுட்டது போல் எரிவுண்டாகி கருப்பு, சிவப்பு, கொப்புளங்களாய் உடம்பு முழுதும் பரவி, பேய்ச் சுரைப் பிஞ்சைப் போல் காணும், a skin disease marked by black and red blebs all over the body with burning sensation. The blebs appear like tender of பேய்ச் சுரை. Hence the name.

பேய்ச்சுரைப்பரணி, பேய்ச் சுரைக்குடுக்கை a small round case or vessel made out of the shell of பேய்ச்சுரை; see எட்டிச்சிமிழ்.

பேய்ச்சூலை, நாபியைச் சுற்றி வலித்து ஆணுக்கு வலப்பக்கமும் பெண்ணுக்கு இடப்பக்கமும் வீங்கிக் காணும் ஓர் நோய், யூகி 1200) a disease wherein there is pain round the navel with swelling on the right side in the male, and with swelling on the left side in female.

பேய்ச்சேதிகம், see பேய்க் கற்றாழை, demon aloe — Aloe ramosa.

பேய்ச்சேம்பு, see கல்லடிச்சேம்பு, wild Indian kales (unidentified).

பேய்ச்சேம்புக் கிழங்கு, tuber of பேய்ச்சேம்பு.

பேய்ச்சொறி, மேக சம்பந்தத்தினால் அடிக்கடி உடம்பில் தினவு கண்டு காசுபோல் தடித்து சிவந்து மறையும் ஓர் வகைச் சொறி நோய், a skin disease marked by scratching sensation and small patches on the body. It is said to be caused by venerial origin — Sacbies — Itch.

பேய்த்தக்காளி, பெருந்தக்காளி, large tomato plant — Solanum lycospersicum.

பேய்த்தண்ணீர், மது நீர், liquor — any intoxicating liquid.

பேய்த்தரிதி, see காட்டுக் கத்திரி, wild indian brinjal — solanum indicum.

பேய்த்தம்பட்டை, காட்டுத் தம்பட்டை, wild sword bean — Canavalia lusiformis.

பேய்த்தலைக்கையான்.

பேய்த் தாமரை, மலைத் தாமரை, a species of lotus — a tree.

பேய்த் தாழை, wild screw pine which has no smell — White variety.

பேய்த்திமிட்டி, see பேய்க் கொம்மட்டி.

பேய்த்தும்பை, காட்டுத் தும்பை, a plant — Phlomis zeylanica.

பேய்த்தும்மகி, நச்சுப்புல், poisonous grass.

பேய்த்தும்மட்டி, see பேய்க் கொம்மட்டி அல்லது வரிக் கொம்மட்டி.

பேய்த்துயர் போக்கி, எட்டி, a tree — nuxvomico.

பேய்த்துவரை, கசப்புத் துவரை, bitter redgram.

பேய்த்துவிகம், பேயன் வாழை, a variety of plantain fruit used as laxative.

பேய்த்துளசி, நாய்த்துளசி, அஞ்சனத்திற்குதவும், white basil — Indian tea used in magic.

பேய்த்தூசிகம், See பேய்க்கடலை.

பேய்த்தேர்.

பேய்த்தேற்றான், பொறித்தேற்றான், a kind of clearing nut.

பேய்நரி, வெறிகொண்ட நரி, rabid jackal.

பேய்நாய், வெறிநாய், rabid dog.

பேய்நாய்க்கடி, bite of a rabid dog.

பேய்நாய்க்கடி சன்னி, வெறிகொண்ட நாயின் வாய்நீர் கடித்த காயத்தில் இறங்கி இரத்தத்தில் சென்று நரம்புகளுக்குப் பரவும் ஓர்வகை நோய். இதனால் விரணமுண்டாகி கண் மயக்கம், தாள் பிடிப்பு, வாய் நீரூறல், சுரம், தாகம், மூர்ச்சை, மார்புவலி முதலிய குணங்களுண்டாகும். a disease produced by the bite of a mad or rabid dog, one of the characteristic symptom is an aversion to or dread or inability to swallow water or other liquids சலபயரோகம் — Hydrophobia other symptoms are: vague feeling of unconciousness, melancholy, gloom, irritability of temper, frightfull dreams and shivering. Sometimes twitching of the face, fear and dismay, stiffness of the neck, difficulty of breathing with suffocative supasms especially when the patient attempts to drink, turgid face protruding eye balls. foaming at the month, claws at the throat. Incubation period is one to four days after which the patient dies from exhaustion. It should be distinguished from tetanus.

பேய்நிலை நோய், பிசாசு கொண்டவர்களைப் போல் குணங்குறி காட்டும் நோய், Hysteria.

பேய்நெல், மலைநெல், paddy grown in mountains.

பேய்நோய், பேய் பிடித்ததனால் ஏற்படும் நோய்கள். the demoniacal disease Hysteria, epilepsy, dancing mania and other disorders of the nervous system are considered as demoniacal diseases.

NOTE:-The demon theory is one in which the malignant spirit is supposed to have been provoked whether witting by or unwitting by enters the body of the offender and annoys him in various ways and afflicts him with certain kinds of diseases.

பேய்ந்தை, புள்ளித் திரட்டை யென்னும் உணவுக்குதவும் ஓர் கடல் மீன், a sea fish fit for eating.

பேய்ப்பசலை, பேய்ப்பசளை, கசப்புப் பசலிக் கீரை, a wild kind of Portulaca.

பேய்ப்பசி, oracious appetite — abnormal increase in the sensation of hunger — Hyperorexia, Bulimia.

பேய்ப்பரிதி, பேயுள்ளி, wild onion.

பேய்ப்பருத்தி, காட்டுப்பருத்தி, wild cotton.

பேய்ப்பலமிரட்டி See பேய்மிரட்டி.

பேய்ப்பலவன், படுவன் கீரை, a kind of greens.

பேய்ப்பலா, see பேய்ப்பிலா.

பேய்ப்பலாதி, குப்பைக்கீரை, rubbish greens.

பேய்ப்பாகல், நாய்ப்பாகல், a creeping plant which see.

பேய்ப்பாகிகம், பேய்பாற் சொற்றி, which see.

பேய்ப்பாக்கு, காட்டுப்பாக்கு, wild arecanut.

பேய்ப்பாசிகம், பேயத்தி, wild fig.

பேய்ப்பாச்சி, see பேய்ப்படாசி.

பேய்ப்பாடால், ஓர் காட்டவரை, wild dolichos.

பேய்ப்பாதிகம், see பேயுமத்தை.

பேய்ப்பாலை, நாய்ப்பாலை அல்லது நஞ்சறுப்பான் பூடு, a plant — Tylophora asthmatica.

பேய்ப்பாற் சொரி, see பேய்ப்பாற் சொற்றி.

பேய்ப்பாற்சொற்றி, அதிசாரம் உட்சூடு, இரத்தக் கிராணி போம் மெலிந்த குழந்தை பருக்கும், a creeping plant — a kind of Rucilla secunda.

பேய்ப்பாற்சோற்றி, see பேய்பாற்சொற்றி.

பேய்ப்பாணிகம் see பேய்க்கொள்ளு.

பேய்ப்பிடி, பேய்மருட்டி, which see

பேய்ப் பிடித்தல், demoniacal possession.

பேய்ப் பிண்டம், a monstrous foetus whose head is represented by a spapeless mass Hemiacephala.

பேய்ப் பிலா, கொட்டைப்பலா a tree — Artocarpus hirsuta.

பேய்ப்பீர்க்கங்கூடு, பீர்க்கங் கூடுபோல் மனிதவுடம்பு முழுவதிலும் பரவியிருக்கும் நாடி வர்க்கங்களின் கூட்டம், the net work of nervous system which exist in the human body.

பேய்ப் பீர்க்கு, கசப்புப் பீர்க்கு, wild and bitter kind of ridged gourd — Luffa amara.

பேய்ப்பீர்க்குத் தைலம், தாதுவைக் கட்டும் ஓர் வகைத் தைலம், a medicated oil which binds the semen.

பேய்ப் பீர்க்கு விதை, இதனால் துட்டகடி விஷம் போம், seed of பேய்ப்பீர்க்கு, cures poisonous bite.

பேய்ப் பீலிகம், see பேய்ப் பாக்கு.

பேய்ப் புகையிலை, மலைப்புகையிலை, mountain tobacco.

பேய்ப்புடல், பேய்ப்புடோல், கசப்புப்புடலை, a very bitter kind of wild snake gourd — Trichasanthes laciniosa 2. கீழே தள்ளும் மயக்கம் போம், it cures severe giddiness.

பேய்ப் புடவி, see பேய்க்காளான்.

பேய்ப் புல், நஞ்சுப்புல், a red species of poisonous grass. It is full of little dots; 2. தினையைப் போல் திரண்டிருக்கும் சுணைப்புல் இது மலையில் முளைக்கும். மார்பு நோய், எலிவிஷம் வாயு குத்தல் போம், a kind of pubescent grass growing on mountains. It is useful for chestpain, rat bite etc.

பேய்ப் பூலா, a plant — Indian buck thorn — Rhamnus wightii.

பேய்மதி, மருளுமத்தை, which see.

பேய் மருட்டி, see பேய்த்தும்பை; இரட்டைப் பேய்மிரட்டி; விடாக்காய்ச்சலில் வியர்வை யுண்டாக்க வேண்டி வேதுபிடிக்க உபயோகிக்கும் ஓர் செடி, Malabar cat mint — Anisomcles Malabarica — a medicinal plant used when children have convulsions owing to excess fever.

பேய் மலடி, பேய்மலடால் பாதிக்கப்பட்ட பெண், woman affected by பேய்மலடு, which see.

பேய் மலடு, பேயால்வரும் மலட்டுத்தனம், sterility caused by devils.

பேய் மாடி, புளிநரளை, which see.

பேய் மாந்தம், indigestion in children said to be caused by devil.

பேய்மாலம், அறியாமையும் சிறுபிள்ளைத்தனமுமான செயல்கள்.

பேய் மாலிகம், see பேய்க்குமட்டி.

பேய்மாலை, மாமாலைச் செடி, a plant.

பேய் மிரட்டி, வெதுப்படக்கி, a plant — Ballota distícha இரட்டைப் பேய்மிரட்டி என்று ஓர் வகை யுண்டு. This is Anisometes malabarica எரு முட்டைப் பீநாறி என்றும் அழைக்கப்படும்; 2 கிலுகிலுப்பை, a plant whose seeds rattle In the legumen — Crotalaria verrucosa.

பேய்மிரட்டு, ஓர் வகைக் கிரகதோஷம்; இது பேய்மிரட்டிக் கஷாயத்தாற் போம், a malady due to bad planetary positions. This is cured by the decoction of பேய்மிரட்டி.

பேய் மிருகக்கடி, the bite of a rabid animal such as dog, jackal, wolf, cat etc — Hydrophobia.

பேய் மிளகாய், ஒரு வகை மலைமிளகாய் — a variety of chilly — Capsicum fastigiatum.

பேய்முசுட்டை, சிறுமுசுட்டை, a creeper — Silver weed — Malabar convolvulus — Argyreia malabarica.

பேய்முஷ்டி see பேய்முசுட்டை, Ipomea malabarica or I candicans.

பேய்முல்லை, காட்டு முல்லை, a species of jasmine — Jasminum angustifolium.

பேய்முள்ளி, see காட்டுமுள்ளி.

பேய்முன்னை, காட்டுமுன்னை, Elephant creeper — Argyreia speciosa.

பேய் மொச்சை, காட்டு மொச்சை, wild field bean — Dolichos lablab vartypicus.

பேய் மோச்சி, see பேய்மிரட்டி.

பேய்வரகு, காட்டு வரகு, a wild variety of Kodo millet.

பேய்வரளி, see ஆற்றலரி.

பேய்வாதம், வயிறு, நெஞ்சுக்குழி கண்ட முதலிய விடங்களில் வீக்கங் கண்டு நிமரவும் குனியவும் முடியாத ஓர் வாத நோய், a disease due to wind humour marked by swelling in the abdomen, neck & chest pit and inability to bend or stretch.

பேய்வாதுமை, கசப்பு வாதுமை, a bitter almond.

பேய் வாழை, பேயன் வாழை, a variety of plantain fruit given as laxative — martaban banana — Musa sapientum (marta banica.)

பேய் வித்தை, சூனிய வித்தை, black art socery. witch craft.

பேய் வித்தைக்காரன், மாந்திரீகன், enchanter.

பேய்வெட்டி, அமுக்கிரா, horse root — Withania somni ferra.

பேய் வெண்காயம், நரி வெங்காயம், wild onion.

பேய் வெருட்டி, பேய்மருட்டி, which see; 2. கிலுகிலுப்பை, which see.

பேய்வெள்ளரி, கசப்பு வெள்ளரி, bitter cucumber.

பேய் வேலன், see பேய்வேல்.

பேய் வேல், a tree — Acacia farnesiana see பீவேல், stinking acacia.

பேய் வேளி, பேய்க்கொள்ளு, wild horsegram.

பேரகத்தி, அகத்தி மரம், a tree — sesbania grandiflora.

பேரகம், சோளம், maize.

பேரசதி, அதிசுழுத்தி, coma.

பேரஞ்சனம், ஓர் வகைக் கடலை, a kind of pulse.

பேரடம், வெண்ணொச்சி, a garden plant, a white shievs of நொச்சி — Vitex negundo.

பேரண்டச் சூரணம், calcined powder of human skull bone.

பேரண்ட பேரொளி, மூளை, brain.

பேரண்ட முடிவு, தலையின் விஷக்கல், a poisonous stone said to be inside the skull.

பேரண்டம், தலையோடு, human skull bone; 2. மூளை, brain; 3. உப்புமணி, கட்டிய கல்லுப்பு,

இதனால் வெடியுப்பு கட்டும், beads made of binding salt; 3. வழலை, which see; 5. நரி, jackal.

பேரண்டவெளி, மூளை, brain; 2. உச்சி, cerebrum.

பேரண்டாதி, see பேராமணக்கு.

பேரகத்தி, கறிமுள்ளி, a plant which see 2. அத்திமரம், fig tree.

பேரத்திரி, பேய்க்கரும்பு, wild sugarcane.

பேரால், பெரிய ஆரால் மீன், a kind of fish.

பேரமட்டி, பேரமுட்டி, பேராமுட்டி, குருவிச்சிப்பூடு, a plant — Pavonia odorata.

பேரம், உடம்பு, body.

பேரரத்தை, பேரறத்தை, பெரிய அரத்தைப் பூடு, இதனால் வாத முன்னிசிவு, பின்னிசிவு, வலிப்பு சன்னி பாதம் நடுக்கற்சுரம் இளைக்கம் புண் தலைப்பாரம், பெண் ருது தோஷம் போம், a plant greater galangal — Alpinia galanga. It cures fits. delirium shivering fever, heaviness of the head, menstrual disorder etc.

The plant has greenish fragrant flowers. Javanese plant imported. Brown under ground stem (rhysome) is used in medicine. It has a faint aromatic smell and pungent taste. It is used as infusion or decoction and rarely as powder in fevers, rheumatism and catarrhal affections. Seeds possess similar medicinal properties. It is substituted for British pepper mint *(புதினா)*. the smaller variety lesser Galangal *(சிற்றரத்தை)* is more used than the bigger variety (greater galangal)

பேரவம், நரி, jackal; 2. நரி வழுக்கை, a plant.

பேரவரை, பெரிய அவரைச் செடி, a creeper of large sized beans — Dolichos lablab.

பேரவுப்பு, see சத்தியுப்பு, a kind of salt.

பேரவுரி, நீல அவுரி, Indigo plant.

பேரறுகு, பெரிய அறுகம்புல், யானை அறுகு, large sized அறுகம்புல், which see.

பேராச்சுரம், விடாச்சுரம், continuous fever.

பேராநிம்பம், வேம்பு, Margosa tree — Azadirachta indica.

பேராந்தை, நிலாமுகிப்புள், large kind of owl — Greek Partridge.

பேராமக் கணம், குழந்தைகளுக்குக் கை கால் குளிர்ந்து கண் வளையமாகி திடுக்கிட்டு ஏங்கி வயிறு பொருமிக் கழியும் ஓர்வகை நோய், a disease in children attended with chillness of the extremities, noisy bowels diarrhoea etc.

பேராமட்டி, see பேரமுட்டி.

பேராமணக்கு, பெரிய ஆமணக்குச் செடி, castor plant of large seeded variety — Ricinus inerrnis—Ricinus Communis as opposed to சிற்றாமணக்கு. Its oil is not used in medicine. only that of the smaller variety is used in medicine. the former is used as *(விளக்கெண்ணெய்)* lamp oil.

பேராமம், பேராமக்கணம், which see.

பேராமரோதம், see பேராமக் கணம்.

பேராமல்லி, ஓர் மல்லிகை, a creeper long tubed — Arabian jasmine — Jasminum Sambac alias Jasniinum undulatum.

பேராமுட்டி, See பேராமுட்டி; 2. மயிர்களை நீக்க உபயோகிக்கும் ஓர் சரக்கு, this is an hair destroying drug.

பேராமை, இளைப்பு, மேல்சுவாசம், சலமடைத்துக் கொள்ளல் முதலிய குறிகளைக் காட்டுமோர் நோய், a disease with following symptoms retention of urine heavy breathing and fatigue.

பேராமை, See பேராமக் கணம்.

பேராமைக்கட்டி, வயிற்றில் காணும் பருத்த ஆமக்கட்டி, Tumour in the abdomen.

பேராம்பல்கட்டி, உடம்பெங்கும் வீங்கி தண்ணீர் கோத்து மேல்மூச்சாகித் துன்புறுத்தும் நோய்; உடல் பொருமி, மாதர் மேலிச்சையுண்டாகிப் புளிப்பு மேலாசையாகும், a disease characterised by swelling all over the body heavy breathing, liking for sourthings and women.

பேராரல், as opposed to சிற்றாரல் மீன்; பழமலக்கட்டு போம், a kind of fish.

பேரால், பெரிய ஆலமரம், big banyan tree — Ficus bengaleusis.

பேராவனல், உடம்பழற்சி, body feeling very hot.

பேராவரை, பேராவிரை, பொன்னாவிரை, which see.

பேராளி, மூளை, brain.

பேரிகி, பேய்த்துவரை, which see.

பேரிக்காய், ஓர்வகைத் தித்திப்புக்காய்; அம்பளங்காய், Pears country — Pyrus Communis.

பேரிசவேதி, பேய்த்துவரை, which see.

பேரிடையாள், சிற்றாமணக்கு, a species of castor which bears small seeds — Ricinus communis.

பேரிதழ் பெண்களின் அல்குலிலிருந்து இரு பக்கமும் இறங்கி ஆசன வாயிலண்டை சென்று ஒன்றாக இணையும் உதட்டைப் போன்ற தடித்த சதை பாகம். இது பின்னே போகப் போகப் பருமை குறையும், வெளிப்பக்கத்தில் மயிரடர்ந்த தோலினாலும், உட்புறத்தில் சளிச் சவ்வினாலும் மூடப்பட்டுள்ளது. — Labium majora.

பேரிரைப்பை, Rumen.

பேரிலந்தை, சீமையிலந்தை மரம், foreign jujube tree — Zizphus mauritiana.

பேரிலாழம், நாகப்பித்து, which see.

பேரிளம் பெண், நாற்பது வயதுப் பெண், அமுதநிலை — அல்குலில், a woman of 40 years old.

பேரீகம், வட்டத்திருப்பி, root of a creeper —Cissampelos pareira; 2. வச்சிரவல்லி, a climber — Vitis quadrangularis.

பேரீகா, வெண்சோளம், white maize.

பேரீச்சங்காய், கற்சூரம், fruit of the date palm - dates — Phoenix dactylifera.

பேரீச்சங்குருத்து, இக்குருத்தைப் புசிக்க குன்மவலி போம், இம்மரத்தின் இலைகளைக் கழித்து விட்டு, நடுவில் சோதிக் கிழங்கைப் போன்ற வெண் குருத்து உள்ளடங்கியிருக்கும். இதனால் குன்மம், வாந்தி, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல் போம்; இது தின்பதற்கு இனிப்பாகவிருக்கும், the terminal shoot. It is used for gunmam, dyspepsia. vomiting, gurgling of the abdomen etc.,

பேரிச்சம்பழம், அரேபியா, பாரசீகம் ஆகிய தேசங்களில் விளைந்து தேன்விட்டு பதப்படுத்திய கர்ச்சூரப்பழம், dried fruit of date — Phoenix sylvestris. இதனால் பித்தம், மதம் மூர்ச்சை நோய்கள், சுரம், தாகம், இரத்த பித்தம், நீரிழிவு, வாயிலைப்பு மலபந்தம் அருசி முதலிய நோய்கள் போம், It is used for the following diseases, fever, thirst, constipation, diabetes tastelessness and இரத்த பித்தரோகம்.

பேரீச்சம் பாளை, the spadix of date palm.

பேரீச்சவெல்லம், jaggery prepared out of the date palm sweet toddy.

பேரீச்சு, பேரீந்து, பேரீஞ்சு, பேரீச்சம் பழம், which see.

பேரீத்தம் பழம், see பேரீச்சம் பழம்.

பேரீரா, ஓர் சீனச்செடி, a Chinese plant.

பேரு சமுத்திரம், ocean, sea; 2. சூரியன், sun; நெருப்பு, fire; 4. பொன்மலை, gold mountain.

பேருசாக்கல், see பீரு சாக்கல்.

பேருடுப்பை, a plant — Eriolaena hookeriana See புளிச்செவ்வந்தி.

பேருடை, பெரியவுடை மரம் — Dolichondrmi crispa.

பேருணவு, மிதமிஞ்சின சாப்பாடு, eating to excess; eating too much food; 2. உயர்ந்த உணவு, rich meals — Principal food.

பேருணவுண்போன், பெருந்திண்டிக்காரன், gourmand.

பேருண்டம், கருப்பந்தரித்தல், கருப்பமுண்டாதல், conceiving.

பேருண்டி, see பேருணவு.

பேருதி, பெரிய உதிய மரம், large elephant webera — Odina wodier.

பேருந்தம், நரி, jackal.

பேருப்பு, சத்தியுப்பு, which see.

பேருமரி, , ஓர்வகை உமரிப்பூடு, see பவளக்காலி, a delicate britle saltish herb.

பேருரையாள், பேர் சொல்லால், see பேர் சொல்லான்.

பேருழா, as opposed to சிற்றுழா ஓர்வகைப் பெருந்துளசி. இச்செடியினிலை ஆசன வளைய மூன்றினுள் உள்வளைய

முளையினாலேற்படும், ஆசனக் கடுப்பைப் போக்கும், a kind of large ocimum sanctum. It releaves the irritating pain in the anus — sphincter.

பேருள்ளத்தாழி, வெங்காயம், onion.

பேரூணன், பெருந்திண்டி தின்போன், Glutton; 2. நீர்க்காக்கை, cormorant.

பேரெலுமிச்சை, big lime — Citrus medico limonum.

பேரெள், ஓர்வகை எள், a kind of gingelly seed.

பேரேலம், See பெரிய ஏலக்காய்.

பேரொளி, மூளை, brain.

பேரோசனை, ஓர்வகை உபரசச் சரக்கு, இதன் சத்தினால் பிரளாமல் கவுனத்தில் ஓடலாம். one of the 120 natural substances, with its power one can run in the air — sky.

பேர், பெரிய, large.

பேர்உப்பு, சத்தியுப்பு, which see.

பேர்க்கசி, கட்டுக்கொடி, coagulating creeper — Cocculus villosus.

பேர்க்காவி, புளிநறளை, woolly heart vine — Vitis lanata.

பேர்சொல்லான், வசம்பு, sweet flag — Acorus calamus.

பேர்மல்லி, கஞ்சாங்கோரை, a plant, white basil — Ocimum album.

பேலிகம், காட்டுக் கத்திரி, wild brinjal.

பேலிகா, நீர்மேல் நெருப்பு, which see.

பேலிகை, எச்சில், spittle.

பேலுதல், மலங்கழித்தல், to go to stools.

பேவாயான்விட்டை, பேவாய்விட்டை, நரிவிட்டை, faeces of jackal.

பேழை, பெருவயிறு, large abdomen.

பேழ்வாய், பெருவாய், large mouth.

பேளர், ஓர் வைத்திய நூலாசிரியர், the name of an author of a medical work.

பேறக்காசி, கருமுள்ளி, Indian night shade — Solanum indicum.

பேறாவிரை, see பேராவிரை.

பேறுகாலம், பேற்றுக்காலம், பிள்ளை பெறுங் காலம்.

பேறெள், பேரெள், which see.

பேனம், நுரை, froth, foam; 2. கடல்நுரை, cuttle fish bone.

பேனாதிமாத்திரை, ஓர் கண்ரோக மாத்திரை.

பேன் தலையிலுண்டாகும் பூச்சி, a small creature formed in the hairs of the head louse.

பேன் கொட்டை, காக்காய் கொல்லிவிரை. seeds of a plant cocculus indicus alias Anamitra cocculus. இது மீன்களை மயங்கச் செய்து கரைவெளியில் கொண்டு வந்து சேர்க்கும். இதில் பேன்

சாகும். The seeds are used to kill lice. When employed to the fish, they get fainted and are washed to the shore.

பை

பை, தோற்பை, a membranous sac as in தினிப்பை, மூத்திரப்பை, a recepacle in animals for food & Water and urine; 2. குடல், bowels; 3. அழகு beauty; 4. நிறம், colour; 5. பச்சை, green; 6. பாம்பின் படம், the hood of a cobra; 7. மந்தகுணம், slow nature.

பைகம்பச்சாரம், see ஏகம்பச்சாரம்.

பைகோ சிவப்பு, பைகோவில் விளையும் இரத்தினம், Ruby found in Pegu.

பைங் கண், பசிய கண், beautiful eyes.

பைங் கதை, பச்சை மூங்கில், green bamboo.

பைங் காய், பச்சைக்காய், raw fruit.

பைங் கிளி, பச்சைக்கிளி, green parrot.

பைங் குழி, கருப்பங்கொள்ளுமிடம், womb uterus.

பைங்கூலிகம், பச்சைப்புல், green (not dried) grass.

பைங்கூழ், நோய், disease; 2. பச்சைப் புல், green (fresh) grass; 3. பயிர், crops.

பைங்கூன், காவட்டம் புல், a kind of grass — citronella — Andropogon nardus.

பைங்கொடி, பசுங்கொடி, a green creeper; 2. மெல்லிய பெண் (உவமையாகு பெயர்), a lean girl or woman.

பைங்கோரை, see சுளுந்து, torch tree — Ixora pariflora.

பைசந்தி, ஓர்வித சத்தம், sound from lungs; 2. கருபந்தரிக்குமிடம், womb; uterus.

பைசாசத்துத்தி, பேய்த்துத்தி, a kind of abutilon.

பைசாசத்தும்புலா, பேய்த்தும்புலா, a plant.

பைசாசத்தும்புலி, தூம்பரவாலி, a plant.

பைசாசத்தும்பை, பேய்த்தும்பை, which see.

பைசாசத்தூரிதம், see பேயுமத்தை.

பைசாசநெல், மலைநெல், paddy grown in mountains.

பைசாப்புணர்ச்சி, பெண் தூங்கும்போது அல்லது மயங்கிக் கிடக்கும் போது புணர்தல், having sexual connection with a woman while is sleeping or unconscious; 2. பலவந்தமாய் அல்லது சம்மதமில்லாது கலவி செய்தல், seducing a woman by force or without her consent; 3. 64 லீலைகளில் ஒன்று. one of the 64 postures of sexual intercourse with a woman as described in Eretic Science called Kokkogam compiled by Kokkogamuni.

பைசாசமுள்ளி, காட்டு முள்ளி, Solanum lacquini.

பைசாசம், இரும்பு, iron; 2. பிசாசம், devil; 3. பேய், elf.

பைசாசி, சடாமாஞ்சில், a kind of medicinal grass valerian or Indian spiknard — Cyperus stoloniferus.

பைசு, பால், milk.

பைஞ்லம், மக்கட்பரப்பு, man kind; 2. மானிடப் பிறப்பு, human race; 3. பசிய நீலம், greenish blue.

பைதிருதி, கொடிச் சம்பங்கி, sampac creeper.

பைத்தம், பித்தம், bile.

பைத்தல், கோபம், anger; 2. பச்சையாதல், becoming green.

பைத்திகம், see பைத்தம்.

பைத்தியகாரத்தனம், the state of being imbecile — Anility.

பைத்தியக்காரன், பித்தம் பிடித்தவன், a mad or insane man.

பைத்தியக்காரன், பித்தம் பிடித்தவன், a mad or insane man.

பைத்தியங்காரி, புகையிலை, tobacco.

பைத்தியங்கொண்டாடுகிற, cory bantic.

பைத்திய சன்னி, அடிக்கடி எழுந்து ஓடி தரையிற்புரண்டு வாய்விட்டலறி சீலையை யுரிந்து கிழித்து, ஆடிப்பாடிக் கைக்கொட்டும் ஓர்வித சன்னிநோய், delirium.

பைத்தியச்சுரம், பித்தத்தினால் வெறியை யுண்டாக்குமோர் வகைச் சுரம், a kind of fever brought about by excess of bile humour causing perplexity of mind or madness which is due to the bilious affection.

பைத்திய தஞ்சம், பைத்தியக்காரர்களை வைத்துக் காக்குமிடம், — Lunatic asylum.

பைத்தியநாடி, பித்தநாடி, pulse indicating the bile humour; bilious condition indicated by pulsation; 2. பைத்தியக்காரரின் நாடிநடை, the pulsation indicating insanity.

பைத்தியநீக்கி, பைத்தியத்தை நீக்கு மூலிகைகள், மிளகு, சித்தரத்தை, கோஷ்டம், அதிமதுரம், கிரந்தி நாகம், விலாமிச்ச வேர், சீரகம், காட்டுச் சீரகம், பிளப்பு சீரகம், கொத்துமல்லி, செங்கடுகு, வெண் சிவதை வேர், குங்குமப்பூ, அட்டுப்பு, கல்லுப்பு, drug that alleviate insanity.

பைத்தியப் புலப்பம், delirium.

பைத்தியப் புலம்பல், பிதற்றல், raving.

பைத்தியமான, பித்துகொண்ட, rabid; பைத்தியங் கொண்ட, mad.

பைத்தியமிறக்குவோன், பைத்திய நோயைத் தீர்ப்போன், a specialist in the treatment of insanity — Alienist.

பைத்தியமிறங்கல், பித்தம் குறைதல், reduction of bile humour; reduction of madness.

பைத்தியமேகம், பித்தமேகம், mega disease due to vitiation of bile humour.

பைத்தியம், பித்தமானது சிரசின் மேலேறி அகங்காரத்தை எழுப்புவதினால் புத்திக்கு பிரமை தோன்றி மனம்விட்டு கூத்தாடி வெளிவந்து பிசாசு கொண்டவன் போல் திரியும் ஓர்வித நோய். A mental affection causing a disordered intelect and furiousness due to action of bile entering the brain - delirium - non compos mentis; madness.

NOTE:- Insanity is a mental disease in which the mind is restless and vacant; the understanding and knowledge are subject to errors; actions become purposeless and speech incoherent. The fits of insanity increases in intensity immediately after meals and during new moon and full moon days.

The causes are sudden panic, loss of wealth death of close relative especially lover or dear children. disappointements in life insults to dieties, evil spirits, malignant stars etc., and taking certain drugs like seeds of dhatura and eating too much of ganja or its preparations. The sense of propriety of conduct is lost and the sense becomes clouded and the result is insanity.

Some beings which partake the nature of dieties such as Ghandarvas, Yakshas, Asuras, Nagas and Devils possess men by entering the human body in new moon or full moon. In insanity springing from the agency of super humen beings, the power of speech, knowledge of religious truths increase to unnatural proportions. The character of insanity depends much upon the type of the being he is possessed with as for instance by rakshas or evil spirits, he is of a turbulent character as weeping, dancing, abusing, striking, placing his organs in a ridiculous attitude, bawling out, running naked angry rebukes etc. Insanity not cured in 13 years becomes incurable.

பைத்யரோகம், See பைத்தியம், a disease, lunacy. Insanity and other mental disorders are due to want of mental equilibrium; *2.* பித்தமயக்கம், giddiness; *3.* தலை சுற்றல், vertigo.

பைத்தியச்சாலை, பித்தர்சாலை, dark house.

பைத்தியவிகாரம், பைத்தியத்தால் அடையும் மாறுதல், change in attitude and character due to insanity.

பைந்தினை, ஓர்வகைத் தினை, a kind of millet — Italian millet — setaria italica.

பைந்தீலிகத், பேய்ச்சுண்டை அல்லது நாய் சுண்டை, shrub — Solanum gigantium.

பைபீலம், இரும்பு, iron.

பைமூலவாதம், எறும்புகளின் பேச்சறிதல், a science studying the language of ants; *2.* பிபீலவாதம், a system of philosophy amongst ancients (similar to Epicurean philosophy) about the theory of atoms and atomic nature.

பைபீலிகை, எறும்பு, ant.

பைமாசு, பம்பளிமாசு, a variety of citrus fruit — Pummelo — Citrus grandis.

பைம் பேயகம், பேய்ச் சீந்தில் which see.

பைம்பொன், yellow gold; fine or pure gold; *2.* பவள மல்லிகை, which see.

பைம் பொன் மல்லிகை, see பவளமல்லிகை.

பைம்பொன் மாதலிகம், பொன்னூமத்தை, yellow flowered dhatura — Datura fastuosa (a variety of).

பைம் பொன்னரளி, தங்கரளி அல்லது சொர்ணபட்டி, a large shrub with pretty yellow flowers — Stenolobium stans.

பையம், விலாமிச்சை வேர், which see.

பையுள், நோய், disease; *2.* வலி, pain.

பையோடு பெறல், கர்ப்பபையோடு குழந்தையைப் பிரசவித்தல், to deliver child covered with membranous sac.

பைரவம், பேயகத்தி, which see; *2.* பயங்கரமுகம், fearful features.

பைரவம், ஆயுள்வேதமுறையில் தயாரிக்கும் சிந்தூரங்கள் இவை பலவகை: ஆனந்த பைரவம், சொர்ணானந்த பைரவம், சுத்த பைரவம், பிரம்மானந்த பைரவம் முதலியனவாம், இதனால் சுரம், திரிதோட நோய்கள் போம். mineral preparations in Ayurveda are generally named as பைரவம், and usually given for various fevers.

பைரவ வாஞ்சனம், சன்னி பாதகாலங்களில் ஆயுள்வேத முறையில் தயாரித்து கண்ணிலிடும் கலிக்கம், eye solve prepared according to Ayurveda and used in fevers.

பைரவன், see வயிரவன்.

பைரவி, பத்திரகாளி, wife of Siva.

பைரவி மாத்திரை, ஆயுள்வேத முறைப்படி செய்த ஓர் நாபி மாத்திரை, an aconite pill prepared by Ayurvedic method.

பைவாலி — cysticercus cellulosa.

பொ

பொகாரா, ஆலுப பொகாரா, அல்லது ஆலு பகோடா, fruit — bokhara plum — Prunus communus.

பொகில், பூவின் மொக்கு, flower bud.

பொகுட்டு, தாமரைக் கொட்டை, the seed of the lotus; *2.* மலை hill, mountain.

பொகுவல், ஓர் பறவை, a bird.

பொக்கணந்தூக்கி, பொக்கணப்பிச்சி, முடக்கொற்றான் கும்மட்டி, which see.

பொக்கணம், பெருமருந்து, a twining plant — Indian birth wort — Aristolochia indica.

பொக்கணி, விரிந்த தொப்புள், open navel.

பொக்க நேத்திர சன்னி, இதனால் விக்கல் தாகம் சுரம், கண்ணீர் வடிதல் மயக்கம், காதடைப்பு முதலிய குணங்களைக் காட்டும் நோய், பாதிரி வேர்க்கஷாயத்தால் குணப்படும், a disease characterised by fever, tears, hiccups, thirst, giddiness etc. The decoction of the root of பாதிரி — Stereospermum suaveolens.

பொக்கமா முலைச்சி, நாறு கரந்தை, species of basil with offensive smell — Vernonia arborea.

பொக்கலாம், பெருமருந்து, see பொக்கனம்.

பொக்கல் வாய், பொக்குவாய், a defective mouth without teeth — toothless mouth.

பொக்கவிகை, நாறுகரந்தை, a plant — Vernonia arborea.

பொக்கிணத் துப்பி, பெருங்கிழங்கு, a plant which see.

பொக்கிணத்துப்பி, பெருங்கிழங்கு, a plant which see.

பொக்கி லவணம், திலாலவணம், a kind of salt.

பொக்கு, பல்லில்லாமை, absence of teeth — Anodontia.

பொக்குக்கல், செம்பாறைக்கல், red stone.

பொக்குணந் தூக்கி, கும்மட்டி, a creeper — Bryonia callosa.

பொக்கு மேகம், ஒரு நோய், a disease.

பொக்குலி, சாலாம்பிசின், resin of Indian dammer — shorea robusta.

பொக்குவாய், see பொக்கல் வாய்.

பொக்குளம், கொப்புளம், boil.

பொக்குளிப்பான், கொப்புளிப்பான், a kind of measles.

பொக்கை, பல்லில்லாத, absence of teeth — Agomphosis.

பொக்கைவாய், பல்லில்லாதவாய், toothless mouth.

பொங்கடி, யானை, elephant as being large footed.

பொங்கம், நெற்றி, ; 2. வால் மிளகு, cubeb.

பொங்கரி, தூற்றாத நெற்பொரி, parched and unbruished paddy.

பொங்கர், இலவமரம், silk cotton tree; 2. சோலை, flower garden; 3. வாடிய பூ, withered flower; 4. மலை, mountain.

பொங்கலன்னம், பொங்கற் சாதம், a rice preparation with green dholl, ghee and condiments.

பொங்கல், சமைத்தல், cooking; 2. கஞ்சி வடிக்காமற் சமைத்த அன்னம், rice cooked without decanting the water with which it is boiled; 3. பொங்குதல், boiling; 4. கள், fermented liquor; 5. மிகுதி, profusion, excess; 6. நாகம், zinc; 7. கொதித்தல், ebullition.

பொங்கற்சாதம், See பொங்கலன்னம் and பொங்கல்.

பொங்காரம், see பொங்கல்; 2. மிகுதுக்கம், much affliction.

பொங்காரரிமல்லி, வர்ண அந்திமல்லி, four o'clock plant bearing coloured flowers — Mirabilis jalappa.

பொங்காரி, வெண்காரம், borax.

பொங்காரி சரக்குமித்துரு, see பொங்காரி.

பொங்கி, ஓர்வித பளிங்கு, hulse glass; 2. இசுபகோல்விதை an Unani drug; seed — Spogel fleawort — Plantago decumbens.

பொங்கிய கொங்கை, இரசித பாஷாணம், a kind of arsenic.

பொங்கிய தோஷம், பொங்கிய வாளம், சங்க பாஷாணம், a kind of native arsenic.

பொங்கிய விதனம், ஓர் கண்ணோய்; இது கண் மங்கி வீங்கி, இரவில் வலியுடன் அதிக பீளை சாறும், — ophthalmia.

பொங்கிலியம், see மட்டிப்பால்.

பொங்கிலீகம், நீர்முள்ளி, a thorny plant — Hygrophila auricalata alias Asteracantha longifolia.

பொங்கு, பொங்குதல், boiling and over flowing.

பொங்குதல், கொதித்துக் கிளர்தல், ebullition: 2. சாதம் சமைத்தல், cooking rice; 3. கொதித்தல், boiling.

பொங்குநீர், கொதிக்க வைத்த நீர், boiled water.

பொங்குமித்தம், பித்தாதிக்கம், excess of bile humour.

பொசி, துத்தம், which see.

பொசிதல், கசிதல், oozing out; 2.நீர் பறிதல், soaking through; 3. நீரரும்பல், exuding.

பொசித்தல், உண்ணல், eating.

பொசிப்பு, secretion.

பொசிவு, கசிவு, oozing out as in இரத்தக் கசிவு, effusion.

பொசுக்கு, குசுவிடல், to break wind; 2. பொசுக்குதல், burning; roasting.

பொசுங்கல், கருகினது, that which has been blackened and over roasted or chared.

பொசுங்குதல், as in மயிர் பொசுங்குதல். வெப்பத்தினால் தீய்தல், to burn to charcoal by excess of heat.

பொஸ்தகாய், see போஸ்தகாய்.

பொச்சடித்தல், வெறுநாக்கைக் கடித்தல், to bite the tongue.

பொச்சம், உணவு, food; 2. தேங்காய் மட்டை, the outer fibrous cover of a cocoanut.

பொச்சாலி, ஓர் வகை நெல், a kind of paddy.

பொச்சை, காடு, forest; 2. கரிகாடு, coalfield; 3. சிறு மலை, hill; 4. மலை, mountain; 5. புழுக்கூடு, bee hive.

பொச்சை வயிறு. தொப்பை வயிறு; paunch belly.

பொடக்கலிவம், see நெட்டிதளம்.

பொடங்குநாறி, see பிடங்கு நாறி.

பொடபத்திரி வேர்,

பொடம், ஆவாரை, a shrub, — Cassia auriculata.

பொடி, சூரணம், Powder; 2. பற்பம், calcined white powder; 3. புகையிலைப் பொடி, snuff, 4. பூந்தாது, pollen of flowers; 5. பொடித்தல், to pulverise.

பொடிக்கட்டு, சிறுகட்டுக்கொடி, a creeper; broom creeper — Small variety of Cocculus villosus.

பொடிக்கிருமி, சிறுகிருமி, small worms; germ.

பொடிச்சிகம், நாரை, stork.

பொடிச்சிரங்கு, சிறு சிரங்கு, small itch.

பொடிச்சிலை, மஞ்சட்கல், a kind of yellow stone.

பொடித்தலை, விடத்தலை, a tree.

பொடித்தல், தூளாக்கல், reducing to powder; முளைத்தல், sprouting.

பொடித்திடல், மயிர் சிலிர்த்தல், hair standing on its end; 2. முளைத்தல், springing up. shooting as in hairs; 3. பொடிசெய்தல், pulverising.

பொடித்திரித்தாழை, see தழுதாழை.

பொடித்துப் போடல், தூள் செய்து கலத்தல், to powder and mix.

பொடிபட்டுப் போதல், as in நோய்நீங்கல், getting rid of the disease.

பொடிப்பண்ணல், மாவாக்கல், grinding to fine powder; 2. சுண்ணமாக்கல் to calcine.

பொடிப்பூரிகம், நிலக்கடலை, ground nut — Arachis hypogaea.

பொடி மீன், small fish.

பொடிமூலி, பூநீறு, efflorescence grown on the soil of the fuller's earth.

பொடி இருமல், சிணுக்கிருமல், slight cough; 2. குத்திருமல், irritating cough.

பொடி வரகு, a kind of millet.

பொடி வித்தை, small magic.

பொடிவிளக்கணம், பொன் முதலியவற்றை பொருந்தவைத்து ஊதல், soldering, cementing.

பொடுகு, ஓர் பூண்டு, a plant; 2. அகறு, dandruff.

பொடுதலை, ஓர் பூண்டு, a prastate plane - Lippia nodiflora alias verbena nodiflora.

பொடுதலை, சீதபேதி, அதிசாரம் இருமல் போம், உடம்பு பலக்கும், it cures diarrhoea. dysentery and cough.

பொடுதலைக் கொஞ்சி.

பொடுதலைக்கொழுந்து, tender leaves of பொடுதலை.

பொடுதலை லேகியம், இதனால் உஷ்ண வாயு சம்பந்தப்பட்ட ரோகங்களெல்லாம் குணப்படும். electuary prepared out of பொடுதலை which see. It cures diarrhoea and digestive troubles.

பொடுதாசி, புழுக்கப்பட்டை.

பொட்டகத்துத்தி, பெட்டகத்துத்தி, a variety of abutilon.

பொட்டகக் கறுங்கம், முயல், rabbit.

பொட்டணம் ஒத்தல், ஒத்தடங் கொடுத்தல், giving fomentation with a bundle containg drug.

பொட்டணங்கட்டல், packing in a paper or a species of cloth.

பொட்டணம், பொட்டலம், a bundle of drugs or leaves for fomentation.

பொட்டாணி கட்டல், வேடுகட்டல், formation of scum over milk or such other liquids; tieing a piece of cloth to the mouth of a vessel containg water to pit drugs on it and boil them in vapour.

பொட்டலிடல், தலைமயிர் வறண்டு தும்பு படர்தல், a disease of the hair in which it becomes dry and dusty — Crasia.

பொட்டல், மயிர் முளைக்காமை, as தலைப்பொட்டல்; தலை வழுக்கை, bald head.

பொட்டளி, உண்டையாகக் கட்டல், to bundle up.

பொட்டளை, வெடியுப்பு, Salt petre.

பொட்டிலுப்பு, சுத்தி செய்யாத வெடியுப்பு, unpurified salt petre — Nitrate of potash.

பொட்டிலுப்பு செந்தூரி, நிலக்குரோசனை, which see.

பொட்டிலுப்பு திராவகம், வெடியுப்புத் திராவகம், nitric acid — Acidum nitricum.

பொட்டிலை, பொட்டிலுப்பு, nitre.

பொட்டு, துவரை முதலிய பயிறுகளின் மேல் தோல், husk of pulses; 2. ஓர் புழுபூச்சி. an insect in its cater pillar state; 3. ஓர் சத்திரக்கருவி, one of the 26 surgical instruments; 4. தானியப் பொட்டு, as in ஓமப், husk; 5. temporal region of the face.

பொட்டுக்கரண்டி, தெலுங்கு பிராமணர் கையாளும் தாலிபொட்டின் அளவு கொண்ட இரும்புக் கரண்டி, tea spoon; 2. உச்சிக்கரண்டி, medium sized spoon; 3. முட்டைக்கரண்டியளவு, table spoon.

பொட்டுக்கறிவள்ளி, (spot+curry+Dioscorea genus) புதுச்சேரி வள்ளி, which see.

பொட்டுக்காரை, ஓர் வகைச் சிறிய மீன், a variety of small fish.

பொட்டுத்தாமரை, வட்டத்தாமரை, round leaved lotus — Macaranga indica.

பொட்டுத் துவரை Coromandal ebony — Diospyros insignia.

பொட்டுப் பூச்சி, ஓர் சிலந்திப் பூச்சி, a spider.

பொட்டுவிரசு, white long flowered sebestin — Cordia octandra.

பொட்டெலும்பு, temporal bone.

பொட்டை, குருடு, blindness.

பொட்டைக்கண், குருட்டுக்கண், blindness.

பொட்டைக் கழித்தல், பயிறுகளின் மேல் தோலைப் போக்கல், removal of husk from pulses.

பொட்டைத்தலை, மயிரில்லாத அல்லது வழுக்கைத் தலை, clean shaven or bald head.

பொதி, அரசு, a tree — Ficus religiosa; ஆரை, an herb in the Marshy land. a kind of greens with four lobes — Pseudoferns — Marsilea quadrifolia.

பொதிகை, பொதிய மலை, இதில் அகஸ்தியர் என்னும் சித்தர் மற்ற சித்தர்களோடு இப்பொழுதும் இருப்பதாக சொல்வதினால் இதற்கு அகஸ்தியர் வாசம் என்றும் பெயர், Pothigai hills near Cape Comorin in Tinnevelly Dt. said to be the present residence of the great Siddhar named Agastya and his disciples.

பொதிகைச்சார், பொதிகைச்சார்பு, பொதிகைமலைப் பக்கம் சாரல், adjoining பொதிகை hill.

பொதிகை தட்சணன், அகஸ்தியன், Sage Agastiar.

பொதிகை நாயகன், அகஸ்தியன் Sage Agastiar.

பொதிதல், மறைதல், concealing; 2. மூடுதல், covering.

பொதிந்து மூடல், காற்றுபுகாதபடி கெட்டியாக மூடுதல், to cover airtight.

பொதிப்போதா, பெருநாரை, a large species of stork.

பொதிமணற்றரை, மணல் செறிந்த நிலப்பகுதி; இது பெரும்பாலும் கடற்கரையை அடுத்த நெய்தல் நிலங்களின் பரப்புகளிலேயே யமையப் பெற்றிருக்கும், sandy land.

பொதியநாபி, மயிர், hair.

பொதியமுனி, தமிழ்ச் சித்த வைத்தியத்திற்கு முதன்மையான அகஸ்தியர் என்னும் முனிவராகி சித்தர், the chief of Siddhars (sages) named Agastya — the founder of Tamil Siddha Medicines.

பொதியம், see பொதிகை; பொதிகை மலை, தென்மலை, a mountain near Cape Comorin, the chief seat of Siddhars.

பொதியன், பொதிகை மலையில் வாசம் செய்யும், அகஸ்தியன் என்னும் சித்தன், the Great Siddha named Agastya living in Pothigai hills.

பொதியில், see பொதிகை; பாண்டி நாட்டிலுள்ள தொரு மலை; இது தேவர்களுக்கும் சித்தர்களுக்கும் பொதுவிடமாதலால் இதற்கு பெயர், a public place where Devars and Siddhars Meet.

பொதிர்ப்பு, நடுக்கம், shivering; 2. அச்சம், fear.

பொதிவிருட்சம், அரசு, a tree — Ficus religosa.

பொதினா, புதினாக்கீரை, mint — Mentha arvensis.

பொதீலகம், பூனைப்புல், a kind of grass.

பொது, சாதாரணம், ordinary; 2. பொதுவினம், general; 3. எங்கும் பரவியது, Universal — Common.

பொதுமருந்து, எங்கும் கிடைக்கக்கூடிய மருந்து, சாதாரண மருந்து, ordinary medicine obtainable every where; 2. எல்லா வியாதிக்கும் ஒரே மருந்து, universal remedy; one remedy for all diseases; 3. எல்லா மருந்திலும் சேரும் சரக்கு. common ingrediant.

பொதுமுறை, general direction.

பொதுவர், இடையர், middle men.

பொத்தி, பெண்குறியை துணியால் மறைப்பது, female cloth covering the private part; 2. மடல், spathe.

பொத்திகடித் தைலம், பொதுவாக அழிசிரங்கிற்கும் பெண் குறிப் புண்களுக்கும் உபயோகிக்கும் தைலம், a medicated oil useful for skin diseases.

பொத்திக்கரப்பான், தண்டுக்கிரந்தி, ulcer or venereal sore of the penis.

பொத்திக்கீரை.

பொத்திக் காளான், மரப்பொந்துகளில் முளைக்கும் ஓர்வகைக் காளான், a kind of mushroom grown in the holes of the trees.

பொத்திமலம், ஆண்குறி, பெண்குறிகளிற் சேரும் அழுக்கு. dirt accumulated in the male or female (private parts) genitals.

பொத்து, ஆண்குறி, male organ; 2. பெண் குறி, female genital; 3. மூடுதல், covering; 4. மறைத்திருப்பது, that which is covered.

பொத்துதல், மூடுதல், to cover; 2. மறைத்தல், to hide.

பொத்துமலம், see பொத்திமலம்.

பொத்துமான், ஓர் வகை மான், a kind of deer.

பொத்தை, பிலாச்சை, the sea frog; 2. பருத்தது, that which has grown stout or big.

பொத்தைக் கள்ளி, முப்பட்டைக் கள்ளி, traingular spurge — Euphoria tirucali this triangular but twisting.

பொத்தைக்கால், யானைக்கால், elephant leg.

பொத்தைப் புளிமரம், பொந்தம்புளி, பப்பரப்புளி, which see.

பொத்தையன், நீர்கோத்த வுடம்புள்ளவன், a stout person; one grown big owing to water accumulation in the system; 2. பருத்தவுடம்புள்ளவன், a fat,

பொந்தர், ஓர் வகை நீர்ப்பறவை, a water bird — gull.

பொந்தன் வாழை, மொந்தன் வாழை, a variety of plantain mostly used for curry.

பொந்தி, உடம்பு, body.

பொந்திகம், பொறித்தேற்றா, a tree.

பொந்து, மரப்பொந்து, a hole in the trunk or stem of a tree.

பொந்துத் தேன், மரப்பொந்தில் கட்டும் தேன், honey collected from the hive built in the hole of a tree.

பொம்பம், சுக்கு, dried ginger.

பொம்மலி, பருத்தவள், a stout woman.

பொம்மல், சோறு, cooked rice.

பொம்மாலி மாசு, பெருநாரத்தைப் பழம், a big citrus fruit — Citrus decumana alias C grandis.

பொய்க் கருப்பம், false pregnancy — mole pregnancy.

பொய்கை, ஆந்தை, owl; 2. தடாகம், tank.

பொய்கை நாரி, தாமரைக் கொடி, lotus plant.

பொய்க்கடி, பருங்கடி.

பொய்க் கண், கண்மண்டை, socket of the eye; 2. a film of glass, celluloid, rubber etc, made in imitation of the front part of the globe of the eye and worn in the soket or over a blind eye for osmetic reasons — artificial eye.

பொய்க் கண்ணுறக்கம், குறைந்த தூக்கம், dozing; half asleep.

பொய்க்காட்சி, நிலையில்லாத காட்சி, apparent but not real.

பொய்க்காத நிசமான, infallible.

பொய்க்காத மருந்து நிசமாகத் தவறாமல் குணப்படுத்தும் மருந்து, infallible remedy.

பொய்க்கால், போலிக்கால், an artificial leg formed from a solid piece of wood hollowed to receie the stump and provided with a steel joint at the knee.

பொய்க்குருடு, போலிக் குருடு, simulated blindness.

பொய்க்கூடு, உடம்பு, body.

பொய்க்கை, ஓர்மீன், a kind of fish.

பொய்சொன்னான், தாழை, a kind of pine tree.

பொய்ச்சுவாசமூட்டல், a method of inducing the normal function of respiration when it is temporarily in abeyance as in drowning — Artificial respiration.

பொய்த்தீட்டு, see போலிச் சூதகம்.

பொய்த்துப் போதல், பலனற்றுப் போதல், becoming useless; 2. சித்தியாகாது போதல், becoming unsuccessful — failure.

பொய்நோய், பிரசவமல்லாது குடலைப் பற்றிய நோய், false or spurious pain such as paroxysm of intestinal pain as distinguished from genuine labour pain.

NOTE:- This is quite unconnected with uterine contraction and it is due to some intestional irritation, but not enteritis.

பொய்ந்நீர், கானல் நீர், mirage owing to intense heat.

பொய்ப்பசி, அசீரண நோயினால் ஏற்படும் பசி, மண்ணீரலில் இருந்து வாத நீரானது அளவிற்கு அதிகமாய் இரைப் பையில் விழுவதினால் காணும் பசி, dyspeptic hunger; 2. இயற்கைக்கு விரோதமான பசி; depraved or unnatural appetite — Allotriophagy.

பொய்ப் பாலூட்டல், feeding of an infant by other, means that breast feeding by the mother — Artificial feeding.

பொய்ப் பிரசவம், false labour, see பொய் நோய்.

பொய்ப் பூ. பிஞ்சு பிடியாத பூ. flowers which are unfruitful.

பொய்மூக்கு, artificial nose.

பொய்யதிலேற்றல், அடுப்பிலேற்றல், to put on oven.

பொய்யாத, see பொய்க்காத.

பொய்யாப்புள், ஓர் வண்டு, a kind of beetle.

பொய்யுறக்கம், see பொய்க் கண்ணுறக்கம்.

பொய்யேப்பம், false eructations.

பொய்வலி, see பொய்ப் பிரசவம் and பொய் நோய்.

பொய்வாழ்க்கை, பொய் வாழ்வு, false existence in life.

பொய்வைத்தியம், false treatment, quakery.

பொய்வைத்தியன், a charlatan, a false fraudulent — empiric.

பொரி, பொரிகாரம், நெற் பொரி, fried paddy; 2. வெண்காரம், Borax.

பொரிகரப்பான்,

பொரிகிரந்தி, ஓர் வகைத் தேமல், a kind of skin disease.

பொரிகுட்டம், ஓர் வகைக் குட்டநோய், a kind of skin disease.

பொரிக்கல், சுக்கான் கல், lime stone; 2. சிலா நாயகம், which see.

பொறிக்கறி, தாளித்த கறி, seasoned curry.

பொக்கறிப்பூடு, கறிப்புடலை, snake gourd fit for preparing curry.

பொரிக்காரி, see பொரிகாரம்.

பொரிக்குழம்பு, புளி சேர்க்கப்படாத குழம்பு. sauce prepared without tamarind or lime.

பொரிச்சல், வெண்காரம், borax (it is of seven kinds.)

பொரிச்சி, தொட்டி பாஷாணம், a kind of arsenic.

பொரிட்சு, small button tree — Anogeissous acuminata.

பொரித்தண்டம், அடைவைத்த கோழி முட்டையின் ஓடு, see பொரித்த முட்டைத் தோல்.

பொரித்த படிகாரம், நீரற்றபடிகாரம், exsiccated alum — Alumen exsiccatum — white spongy massofalum.

பொரித்த முட்டைத்தோல், குஞ்சி பொரித்த பிறகு எஞ்சிய முட்டை ஓடு, empty egg shell after hatching.

பொரித்தல், குஞ்சு பொரித்தல் hatching; 2. பொரியல் செய்தல், parching.

பொரிநீரன்னம், வெந்நீர்ச் சாதம், cooked rice in hot water.

பொரி நீர், சாராயம், arrack, any fermented liquor.

பொரி பொரிச்சான், ஓர் பூண்டு, a plant.

பொரிப்பூண்டு, கரப்பன் பூண்டு, இதனால் அக்கினிகீடம், கிரந்தி மேகம் போம், a plant — Lepidagaltes cristala; 2. வயல்கள்ளி which see.

பொரிமலர், புன்கு, tree which see.

பொரிமா, பொரியரிசிமா, flour of fried rice.

பொரியரிசி, பொரித்த அரிசி, fried rice.

பொரியல், பொரிக்கறி, parched curry; 2. பொரித்தது, that which is parched.

பொரியுருண்டை, அரிசி பொரி அல்லது வாதத்தைப் போக்கும் நெல்லுப் பொரியில் சர்க்கரைப் பாகு சேர்த்துச் செய்த உருண்டை ball of fried rice or paddy prepared with sugar syrup.

பொருகு, சோறு, cooked rice.

பொருக்க நேத்திரசன்னி, உடல் மிகக் காய்ந்து கண் பருத்து, காதடைத்து, பிதற்றலுடன், விக்கல், தாகம், களைப்புண்டாக்கி 5 நாளையில் கொல்லும் ஓர்வித சன்னி, a kind of brain fever which would kill a man in five days after showing

several symptoms such as high fever. dilatation of the eyes, hiccups, thirst, fatigue etc. See பொக்க நேத்திர சன்னி.

பொருட் குணம் Properties of matter (10) their actions:

1 Fluidity is moistening.
2 Compactness is thickening.
3 Humidity is like sliminess.
4 Roughness is like absorption.
5 Odoriferousness is mild and relishing.
6 Fetidness producing disgust and nausea.
7 Laxativeness restores the normal condition of the humours.
8 Nacotism changing the condition of vitality.
9. Expansiveness permitting the whole organ.
10. Subtility penetraling into the small capillaries and channels of the body.

பொருக்கு மண், செதில், flake which rises. when dried.

பொருட் பிரவஞ்சம், நில முதல் நாதம் ஈறாகியது, c.f. சொற்பிரவஞ்சம்.

பொருணி, கள், toddy.

பொருதல், தும்பை, Leucus aspera.

பொருதாகி, பெருந் தும்பை, large sized leucus; 2. see நீலோற்பலம்.

பொருது, ஒன்றுசேரு, as in bones; to join as in bones.

பொருத்தக் காலம், சரியான வேளை, right time.

பொருத்தம், inoculation.

பொருத்தல், மூட்டல் to unit.

பொருத்தவி, மான்செவிக் கள்ளி, deer's ear spurge — Euphorbia neriifolia.

பொருத்த வியாதி, inocculation disease.

பொருத்தி வைத்தல், தலைக்குத் தைலம் தேய்த்துப் பிறகு நெடுநேரம் ஊறும் வரை காத்திருத்தல், remaining for sometime after anointing with (medicated) oil; 2. பொருந்தும்படி வைத்தல்; சீலை மருந்து முதலியவை நோய் கொண்ட இடத்தில் நன்றாய்ச் சேர அழுந்தல், to place the medicinal gauze correctly and bandaging lightly.

பொருத்து, மூட்டு, joint; 2. முறிந்த எலும்பைப் பொருத்தல், to set the fractured bones.

பொருத்து, கங்காளத்திலுள்ள எலும்புகள் ஒன்றோடொன்று இணைக்க அது பொருந்தி இணைக்கும் இசைவு, Joint.

பொருத்து பந்தனி, ligament.

பொருத்துப்பெயர்வு, dislocation of the joint.

பொருத்துவாய், ஒன்றோடொன்று பொருந்தி நிற்குமிடம், articular surface; 2. சந்து வாய், joint surface.

பொருத்துவாய்மண் செய்தல், மருந்து பாண்டத்திற்கு மேற்சட்டிக்குமிடையேயுள்ள சந்திற்கும் சீலைமண் செய்தல், to lute the mouths of two vessels together or to lute the lid with the mouth of the vessel or pot.

பொருத்துவிடல், முளிபிசகல், to be dislocated.

பொருத்துவிலக்கு, மூட்டுவிலக்கு, disjoint.

பொருத்துவோன், முறிந்த எலும்பை இணைப்பவன், bone setter.

பொருத்துளைச்சல், மூட்டு குடைச்சல், intense pain in the joint.

பொருத்த வைத்தல், நீட்டியோ, இழுத்தோ, வளைத்தோ சரியான இடத்தில் (எலும்பை) கொண்டு வந்து பொருத்துதல், to set the broken bones by mainpulation.

பொருந்தாக் காமம், புணரும் காலத்தில் இருவர் போகமும் ஒன்றுபடாமை, மன விருப்பமின்றிப் பிறருக்கு ஒப்புக்காக வேண்டி இருவரும் கூடுதல், one sided love.

பொருந்தாக் காலம், மருந்து கொடுக்கத் தகாத வேளை, unsuitable time for administering medicine.

பொருந்தாத நாள், மருந்து சாப்பிடுவதற்கு ஆகாத நாள், in-auspicious day for taking medicine.

பொருந்தியிருத்தல், See பொருத்தி வைத்தல்.

பொருபொரும்பான், ஓர் மரம், a tree.

பொருமலி, கொழுத்த பெண், fat woman.

பொருமல், வயிற்றுப் பொருமல், wind noise in the stomach, owing to indigestion — flatulency; 2. அழுதல், weeping.

பொருமல் கழிச்சல், வயிறிரைந்து பேதியாதல், diarrehoca with noisy abdomen.

பொருமல் மாந்தம், அக்கினி மந்தம், loss of appetite with flatulence.

பொருமல்வாதம், a disease marked by gurgling sound in the abdomen.

பொருமற்கணம், a disease in children marked by indigestion and flatulence.

பொருமால், நாகம், zinc; 2. நாகபாஷாணம், a kind of arsenic.

பொருமிநாதம், இரச கற்பூரம், sub chloride of mercury.

பொருமியிரைதல், flatulence with much gurgling sound in the abdomen.

பொருமு, வாயுவினாலுப்பல், to swell or bloat as the body with wind or indigestion.

பொரும்பி, சுழலாவாரை, which see.

பொரும்பிலாவேர், மலைவேர், mountain root; 2. வட்டத் திருப்பி, root of பொன் முசுட்டை — Cissampelos pareira.

பொரும்பிலி, ஓர் பயற்றஞ் செடி, a pulse plant.

பொருவாகற்றலை, ஓர் கடல் மீன், a kind of silvery sea fish — Sciaena vogleri.

பொருவாகை, பெருவாகை, which see.

பொருவாய், கடல் கற்றலை மீன், a kind of sea fish.

பொருவுவார், தும்பையிலை (தேரை) leaf leucas.

பொரையிலாதினி, சிறுபுள்ளடி, a plant — Hedasarium.

பொலம், பொலன், பொன், gold; 2. பொன்னிறம், gold colour.

பொலவு, ஓர் செடி, Lance wood — Pterosermum ley nearum. 1. ஒட்டப் பொலவு, P. rupiginosum; 2. சிற்றிலைப் பொலவு; 3. செம் பொலவு, cream leaved lance wood — Pterospermum suberifolium; 4. கருந்தோற் பொலவு; 5. தோற் பொலவு; P. reticulatum; 6. மூலப் பொலவு; 7. வட்டப் பொலவு, Pterospermum glabrescens; 8. சின்ன பொலவு, P. rubiginosum.

பொலிதல், புணர்தல், copulation.

பொலிந்த மணற்பொடி, சவர்க்காரம், which see.

பொலிந்துநீறல், "புகழான கருவங்கம் பொலிந்து நீரே" to chemically combine and be reduced to ashes or powder.

பொலிமதம், நண்டு, crab; 2. ஆண்குறி, penis.

பொலுகுதல், நீர் பறிதல், oozing out.

பொல், உருக்கத்தக்க, fit for melting.

பொல்லா, தீய, bad; 2. கொடிய, virulent.

பொல்லா விஷம், கொடிய விஷம், rank poison.

பொல்லா வியாதி, கொடிய நோய், a very bad disease.

பொழுது, காலம், time; season.

பொழுது சாய்தல், பொழுது படுதல், அஸ்தமித்தல், sun set; evening time.

பொழுது திரும்பி, சூரியகாந்தி, sunflower plant.

பொழுது வணங்கி, சூரிய காந்திப்பூ, sun flower.

பொறி, புலப்பொறி, organ of the senses; 2. தேமல், discoloured spot on the skin; 3. கன்னப்பொறி, temple.

பொறிகடலை, சிறுகடலை, Bengal gram; 2. பொறித்தகடலை, fried Bengal gram.

பொறி கலங்கல், See பொறிதட்டல்; 2. கண்மின்னுதல், to blind eyes.

பொறிகரப்பன்,

பொறிக்கல், சுக்கான்கல், lime stone; 2. சிலாநாகக்கல், which see.

பொறிக் காசகம், மஞ்சளலரி, a plant with yellow flowers — yellow oleander — Theretia nereifolia.

பொறிக்காளான், பேய்க்காளான், a variety of mushroom.

பொறிக்கேதனம், மூகைப் புல், a variety of grass.

பொறிசில்வேர்,

பொறிச்சி, தொட்டி பாஷாணம், a kind of arsenic.

பொறிதட்டல், கண்முன் மின்மினிப் பூச்சி பறப்பது போல் தோற்றுதல்,. an appearance of motes floating before the eyes caused by the sudden affection of the retina— Maseac volitante; 2. பளிச்சிடுதல், flashing.

பொறித்தேற்றா, பேய்த்தேற்றா, which see.

பொறிநீர், விந்துநீர், semen.

பொறிமிளகு,

பொறியமலம், புன்கு, a tree — Dalbergia arborea.

பொறியரை, சிறு புள்ளடி, a plant — Hedysarum.

பொறியார்த்தல், See பொறிதட்டல்.

பொறியில்படல், கன்னப்பொறியில் அடிபடல், to be hit on the temple.

பொறிவிஷம், ஓர் நோய், a disease.

பொறிவிரியன், ஓர்வகை விரியன் பாம்பு a variety of snake.

பொறை, கருப்பம், embryo; 2. மலை, mountain.

பொற் கடுக்காய், பொன்னிறமான மஞ்சள் கடுக்காய், yellow gall nut; 2. செங்கடுக்காய், which see.

பொற்கண்ணி, பொன்னாங்கண்ணி, sessile plant — Illecebrum sessile.

பொற்கமலம், தொட்டி பாஷாணம், a variety of arsenic.

பொற்கருணை, ஓர் கருணைக்கிழங்கு, a variety of yam.

பொற்காசிகம், கொள்ளுக்கொடி, Horse gram creeper.

பொற்காசு, கொள்ளு, horse gram.

பொற்காணி, பொன்னாங்காணி, See பொற்கண்ணி.

பொற்காய்.

பொற்காலி,

பொற்கெண்டை, golden coloured fish.

பொற்கையான், பொற்றலைக் கையாந்தகரை, a plant with yellow flowers — Eclypta prostata. See பொற்றலைக் கையான் தகரை.

பொற்கொங்கு, குங்கும பாஷாணம், a kind of arsenic.

பொற்கொன்றை, வலிப்புகளைத் தீர்க்குமோர் பூடு, a plant.

பொற் கொன்னை, ஓர் கற்பமூலிகை, a plant used by Siddhars for longevity.

பொற் கோபிதம், மஞ்சள் வெற்றிலை, yellow betel leaf tree bearing yellow frgrant flowers.

பொற் சம்பங்கி, Golden chambac.

பொற் சரக்கு, உயர்ந்த சரக்கு, superior drug.

பொற் சாமம், கொன்றை, a cassia.

பொற் சாயல், உடம்பின் பொன்மேனி, glittering body.

பொற்சிலை, மனோசிலை, red orpiment.

பொற்சீந்தில், நற்சீந்தில், மதுநீர் சயம், பாம்பின் விஷம், இரத்தபித்தம் போம், காய சித்தியுண்டாம், a climber — Menispermum cordifolia alias Tinosphora malabarica 2. மஞ்சள் சீந்தில், மகா மூலிகை 23-ல், ஒன்று, one of the 23 superior drugs named in Tamil medical works.

பொற் சீந்திற் கிழங்கு, root tuber of moon creeper — Menispermum cordifolia. இதனால் மதுநீர், க்ஷயம், அதிசுட்கம், சர்ப்பவிஷம் போம்; காயசித்தியுண்டாம். It is capable of curing diabetes, consumption, emaciation and snake bite. It is a rejuvenating drug.

பொற்சுண்ணம், பொற்றூள், gold dust.

பொற்பத்திரம், பொற் பாளம், பொன் தகடு, leaf of gold.

பொற்றமரம், வேளை, a plant which see.

பொற் பாடகம், see பற்பாடகம்

பொற் புதைகுடியிருப்பு, கதண்டுக்கல்

பொற்புரவிகம், பொன்னூமத்தை, dhatura bearing yellow flowers.

பொற்புள்ளி, ஓர் வைப்புப் பாஷாணம், a prepared arsenic.

பொற்பூ, சாதிபத்திரி, mace.

பொற்றட்டு, அல்குல்; பெண்குறி, female genital.

பொற்றலை, see பொற்கையான்.

பொற்றலை கரிப்பான், see பொற்றலை.

பொற்றலைகரிப்பான், இதன் காய் மிளகு போலிருக்கும், இலையைக் கசக்கினால் கையில் எரிச்சலுண்டாகும், இதன் சாற்றைப் பாஷாணங்களிற் சேர்த்து அரைத்துப் புடமிடச் செந்தூரமாகும், அந்தச் செந்தூரத்தை ஒரு வாரம் சாப்பிட, காய சித்தியாகும், a plant. Its fruits look like pepper, when squeezed with hands burning sensation is felt. Its juice clacifies arsenics into red powder. If the red powder is taken for a week the body, it is said, will be rejuvenated.

பொற்றலைக் கையாந்தகரை, see பொற்கையான், குன்ம கட்டியைப் போக்கும், உடம்பு பொன் மேனியாம், புத்திதெளியும், It cures gunmam, makes intellect keen and body shining and glittering, இதில் சரக்குகள் சிந்தூரமாகும், It calcifies minerals into red powder.

பொற்றாது, see பொற்றலைக் கையாந்தகரை.

பொற்றாமரை, பொன்னிறத் தாமரை, செந்தாமரை, red lotus.

பொற்றாவல்லி, சீந்தில் கொடி, moon creeper — Menispermum cordifolia.

பொற்றிக்கீரை,

பொற்றேகராசம், See பொற்றலைக் கையாந்தகரை.

பொற்றேவதாரி, மஞ்சள் தேவதாரி, which see.

பொன், சூரியன், வியாழன், தங்கம், வெள்ளி, இரும்பு, இவைகளின் பொதுப் பெயர், common name for sun gold, iron, jupiter. Gold is considered as the root of life elixir.

Note:- Gold is a very useful substance both in Siddha and Ayurveda Medicine for it enters into the composition and preparations of several kinds of medicines for various diseases. Pure leaf gold is used mostly in Unani medicine. It should be free from admixture of copper and silver.

The process of preparation of medicine from gold is more complicted and varied from that of Ayurveda and like wise the medicine is highly superior and useful in the treatment of diseases when compared to Ayurveda. Gold is considered as a valuable tonic and alterative. It has the power of increasing the strength and beauty; to improve the intellect and memory, to clear the voice; to improve the health and also to increase the sexual powers. Ordinarily it is used for diseases of the nervous system, impotency insanity, consumption, urinary diseases etc. The principle alterative tonic in Ayurveda is the preparation called Makara dwaja containing gold mercury and sulphur and is prescribed for nervous debility weakness of the brain, habitual costipation, general weakness, sexual disorders both in males and females. It is useful also for premature old age.

(Calcined gold prepared by using அழுகன்னி — Drosera indica is very useful in consumption and is better than any other preparation by C.D.).

Great importance and pride is attached to this metal not because of its colour but of its purity at a higher temperature. The more it is heated, the more it is refined. In preference to all metals, it loses nothing when burnt or on heating and ignition is its real test; it never loses its colour but it becomes brighter. Gold is always gold as it never tarnishes; it has no rust or verdigris like copper or iron. It does not loose its brilliancy or discreases in weight. Ordinary nitric acid has no effect on it. It can even suffer or survive great conflagration and funeral pyre. It is really surprising to note

is easily and rapidly heated by chaff which has a greater power of fusion. Although silver is much brighter and more durable and shining is not so much valued as gold. It is more malleable and ductile than other metals and nothing can be better into thinner leaves nor divided more finely. Weaving method of gold and silver into fine fabrics is an ancient invention of India when other countries were wearing leaves and skin of animals.

பொன். அழகு, beauty; 2. பெண்குறி, female genital.

பொன்கபுரு, (இராம - சிவயோகம்).

பொன் காணி, பொன்னாங்காணி, sessile plant.

பொன்குண முருங்கை, ஓர் வாகை, Albizzia odoralissima.

பொன் சாயல், பொன்னிறம் போன்ற, similar to gold colour.

பொன் சாறு,

பொன் குற்றம், திரை, களிம்பு the defects of gold, verdigiris..

பொன்கொன்றை, see சரக்கொன்றை.

பொன்கோலம், see குறுப்பாலை.

பொன்கோலா.

பொன்சிலாசத்து, see சுவர்ணசிலாசத்து,

பொன்தட்டு, பொற்றட்டு, plate of gold.

பொன்தாரம், பொன்னரிதாரம், Yellow orpiment.

பொன்பிறந்தகன்னி, see ஏகம்பச் சாரம், a salt

பொன்தாழை, மஞ்சட்டாழை; செந்தாழை, yellow or red variety of fragrant screwpine.

பொன் தூரிகம், மஞ்சணத்தி, see நுரை.

பொன்தோஷம், களிம்பு, verdigiri.

பொன் பணத்தூக்கு, as in ''ஒரும் பொன் பணத்தூக் கனுபானத்துள்'' (தேரை -200) a weight.

பொன் பாதிரி, ஓர்வகைப் பாதிரி, a tree — Streospermum Chelanoidis.

பொன்போல் வறுத்தல், to fry till it attains gold colour or red colour.

பொன்மட்டம், மட்டப்பொன், inferior gold.

பொன்மத்தை, See பொன்னூமத்தை.

பொன் மயிர்க் கொன்றை, ஓர் வித மஞ்சள் மயிர்க் கொன்றை, a plant — Poinciana regia.

பொன்மலை, ஏமமலை, gold mountain.

பொன் முசுட்டை, பங்கம்பாளை, wound plant — Sida acuta; 2. அப்பட்டை, a twiner — Cissampelos pareira. இதன் வேர் தான் வட்டத்திருப்பி; 3. பேய் முசுட்டை — Ipomea candicans, இதனால் உட்சூடுபோம், it cures congenital heat.

பொன் முசுட்டை நெய், இது சிறுபிள்ளைக் கிராணிக்குக் கொடுப்பது, a ghee prepared out of பொன் முசுட்டை root and given for diarrhoea in children.

பொன்முல்லை, ஓர்வகை முல்லை, a kind of Jasmine.

பொன் மூங்கில், முள்ளில்லா மூங்கில், இது திருவாங்கூரில் விளையும், thorn less bamboo of Travncore — Oxytenanthera bourdillon.

பொன் மூலி, பொன்னாங்காணி, which see.

பொன் மெழுகு, ஓர் வகை மஞ்சள் மெழுகு, இதனால் சுரம் கண்ணோய் போம், a kind of yellow wax.

பொன்மேக மாரி, see பொன்னாவாரை.

பொன் மேனி, பொன்னாங்காணி, which see; 2. தங்கத்தைப் போன்ற உடம்பு, gold coloured body.

பொன் மேனிச்சி, பேய்க்கடலை, a bitter wild gram.

பொன்மை, தூணியாங்கிஷம், which see.

பொன் மைத்திட்டை, see புட்டுத்திருப்பி.

பொன் ரேக்கு, பொன் தகடு, gold leaf.

பொன் வண்டு, பொன்னிற வண்டு, gold coloured beetle cantherills.

பொன் வண்ணச்சாலி, unindentified.

பொன்வர்ணம், சிங்கிபாஷாணம், a kind of arsenic.

பொன் வர்ணி, கெந்தகம், Sulphur.

பொன்வளையற்கல்,

பொன்வறலாக வறுத்தல், பொன்னிறமாக வறுத்தல், see பொன் போல் வறுத்தல்.

பொன்வறுகல், பொன்னிறமாக வறுத்தல், see பொன் போல் வறுத்தல்.

பொன்வறுப்பாய் வறுத்தல், செந்நிறமுண்டாகும்படி வறுத்தல், see பொன் போல் வறுத்தல்.

பொன்வறுப்பு, see பொன் வறுகல்.

பொன்வன்னக் காரிளை, கெந்தகம், sulphur.

பொன்வன்னக் குறிஞ்சி, பெருங் குறிஞ்சி, a plant — Strobillanthes sanguinens.

பொன் வாய்ப்புள், இச்சிலிக் குருவி, a kind of bird.

பொன் வித்து, தங்கமணல், sand containing gold.

பொன்விளைந்த கற்பத்தி லூற்பத்தி, see பொன்னிமிளை.

பொன்றல், சாதல், dying.

பொன்னாவல்லி, சீந்திற்கொடி, moon creeper — Menispermum cordifolia.

பொன்றுதல், see பொன்றல்.

பொன்னகத்தி, சீமையகத்தி — Cassia alata.

பொன்னங்காய், see பொன்னங் கொட்டை.

பொன்னங் கொட்டை, பூவந்திக் கொட்டை, soap nut — Sapindus trifoliatus or S. emarginatus.

பொன்னசலம், ஏமமலை, gold mountain.

பொன்னச்செரான், glaborus marking nut — Semicarpus.

பொன்னந்தி, மஞ்சள் அந்தி மல்லிகை, four o'clock plant with yellow flowers — Mirabilis jalappa.

பொன்னப்பிரகம், மஞ்சள்நிற அப்பிரகம், yellow mica.

பொன்னம்பர், மீனில் உற்பத்தியானமலக்கல்; ஓர் மருந்து, a kind of mineral found in sea gold coloured amber; 2. பறவை எச்சில், the dung of birds.

பொன்னம்பர், அன்னபட்சியின் மலமானது ஆகாசத்திலிருந்து கெலிப்போடு அக்கினியைப் போன்று நிறத்தை உடையதாய் வெப்பமான தரையில் விழுந்து அது இரும்பைப் போல் கெட்டிபட்டு ஆங்காங்கே சுருண்டு கொண்டிருக்கு மென்று ஓர் கதை உண்டு. இப் பொன்னம்பர் முப்பு முடிப்பதற்கு உபயோகப்படும்.

2. அன்னங்கள் சமுத்திரத்தி சென்று தாமரைச் சத்துக்களை விழுங்கி மேலே பறக்கு என்றதினாலே சமுத்திரத்திலு ஒருவித தாமரை உண்டு என் ஏற்படுகிறது; மேற்கண் அன்னங்கள் ஆகாயத்தி நெருங்கிப் பலத்தோ ஒன்றோடொன்று தாக்கி கூட்டங்களாகச் சுற்றிப் பறந் தங்கும்போது அப்பட்சிகளி மலங்கள் பூமியில் விழும். இ இறுகிக் கெட்டிப்படுவ இச்சரக்கெனப்படும். இ அபூர்வமான வேலைகளை செய்யத்தக்க ஆச்சரிய

பொருந்தியது. இதைப் பலர் வேறுவிதமாக உண்டாக்கப்பட்டதென பலவிதமாகச் சொல்லுவார்கள்; various versions of how Amber is formed as given above.

பொன்னம்பலம், see தில்லைமரம்.

பொன்னரிதாரம், ஓர்வகை மஞ்சள் அரிதாரம், yellow or golden colour orpiment — Yellow sulphuret of Arsenic.

பொன்னலரி, மஞ்சளலரி, — Nerium odorum bearing yellow flowers.

பொன்னலாரி, மதனகாமப்பூ, which see.

பொன்னவர்வணங்கும் வேம்பு, a shrub Indigofera asphalathoides.

பொன்னறுவிலி, Cordia sebestena.

பொன்னாகம், see ஆசையம்.

பொன்னாகுங்கண்ணி, பொன்னாங்கண்ணி, prostate plant — Sessile plant — Illecibrum sessile an edible green.

பொன்னாங்கண்ணி, பொன்னாங்காணி, கொடுப்பை, வழிநோய், வாதகாசம், சம்பிரரோகம், சீதளச் சூடு, பீலிகம், மூலம்போம், an herbaceous plant found in wet lands, tank bundes etc. It is good for eye diseases, spleen diseases, piles and internal heat. It is an edible green. It calcifies copper into red powder which is very useful in gastric & duodenal ulcers, tamarind should be avoided.

பொன்னாங்கண்ணிச் சக்களத்தி, it is similar to பொன்னாங்காணி and found together Water olive — Hydrolea zeylanica alias Nama zeylanica.

பொன்னாங்காணி, see பொன்னாங்கண்ணி.

பொன்னாங்காணித் தைலம், பொன்னாங்காணிச் சமூலச்சாறு உழக்கு எண்ணெய், இரண்டையும் கலந்து அதற்கு கோஷ்டம், பசும்பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்த தைலம், இதனால் பித்தரோகம், உஷ்ணம், உட்சுரம், கைகால் கண் எரிச்சல் போம், குளிர்ச்சியுண்டாம், இச்சாபத்தியம், medicated prepared out of the juice of sessile plant as chief ingrediant. It is a bathing oil. It is cooling and good for the eyes and neurities.

பொன்னாங்காய், பூவந்திக்காய், soap nut raw fruit of Sapindus trifoliatus.

பொன்னாங்காய்ப்பழம், பாம்பு விஷத்திற்கு கொடுப்பது, ripe fruit of sapindus trifoliatus. It is given for snake bite.

பொன்னாகாலி, மஞ்சட் கரிப்பான், a plant.

பொன்னாங்கொட்டை, பூவந்திக் கொட்டை, see பொன்னாங்காய்.

பொன்னாணி, see ஆணி; உரையாணி.

பொன்னாந்தகரை, see பொன்னாவரை, படை முதலியவற்றிற்கு உபயோகப்படும்.

பொனாந்தட்டான், ஓர் பறவை, இதன் கறியால் பிரமேக வெப்பம், கரப்பான் போம் வீரிய தேஜசு உண்டாம், ஷ bird whose flesh is edible. It cures certain skin diseases, venereal diseases and internal heat.

பொன்னாமி, மஞ்சட்கொன்னை, which see.

பொன்னாம்பழம், நெய்க்கொட்டான், which see.

பொன்னாம்பளம், நெய்க்கொட்டான், a plant four leaved soap nut — Hemigyrosa canescens.

பொன்னாம்புமரவறா, Limodorum.

பொன்னாம்புவேர், ஆவாரைவேர், the root of ஆவாரை which see.

பொன்னாரைக்கீரை, ஓர் வகைக் கீரை, a kind of greens.

பொன்னார்சீதேவி,

பொன்னாலங்காய்,

பொன்னாவடம், மார்பெலும்பு, sternum.

பொன்னாவரம், பொன்னாவரை, பொன்னாவாரம், see பொன்னாவிரை.

பொன்னாவாரை, பூ நீலம், 4-பூ, தழை மஞ்சள், மூலம் கறுப்பு;, மொக்கு வெண்மை; விதை கடுகு போலாம். இதில் எந்தச் சாப்பிட்டாலும் அனேக ஆண்டு இருக்கலாம். ஓர் கற்ப மூலிகை. வட பொதிகையிலுள்ளது. foetid casia smell of the plant very disagreeable - leaves and seeds cathartic: 2. a plant cassia sophera alias Cassia occidentalis.

பொன்னி, see பொற்றலை; 2. பொன்னிறம், gold colour; 3. மஞ்சள் சாயம், gold colour dye — Kamela dye — Mallotus philipinensis.

பொன்னிச்சி, கெவுரி பாஷாணம், a kind of arsenic.

பொன்னிமிளை, மஞ்சள் நிமிளை, இது சுவையில் முதல் தித்திப்பாயும் பிறகு சிறிது காரமும் கசப்பும் கலந்ததாயுமிருக்கும், சோகை மகோதரம் போம், gold coloured bismuth; 2. சுவர்ணமாட்சிகம் - ஓர் உபரச சரக்கு, one of the minerals.

பொன்னிமிளை சுத்தி, நிமிளையை மூன்று நாள், தாய்ப்பால் அல்லது பசும்பாலில் ஊறவைத்து கழுவி எடுக்கவும், It is purified by soaking it for 3 days in kadi, or breast milk or cow's milk and washing.

பொன்னிமிலை பற்பம், இரத்த வாந்திபோம், calcined powder of பொன்னிமிளை — arrests haemoptesis.

பொன்னிலை, பொன்தகடு; gold leaf.

பொன்னிறைச்சி, பொற்றிலைக் கையாந்தகரை, which see.

பொன்னிறத்தி, கண்டங்கத்திரி, a thorny shrub — solanum jacquini; 2. பொன்னூமத்தை, which see.

பொன்னிற நீர், மஞ்சள் நிற மூத்திரம், urine which is of straw colour.

பொன்னிறப்புஷ்பி, see பொன்னூமத்தை.

பொன்னிறமாட்சி, பொன்னிமிளை, which see.